கண்ணன்
தீபாவளி மல
1960
ரூ.1/-

84204

நம்பிக்கை யென்னும் நல்லொளி

உள்ளக் கோயிலிலே நம்பிக்கை விளக்குண்டு நல்விளக்கு!
ஊக்கத்திற் கோய்வில்லை, நோக்கத்திற் கழிவில்லை; வெற்றியுண்டு!
துள்ளித் துயிலெழவே விடிவெள்ளி வேளையிலே தூண்டுகோலாய்த்
தென்றலெனப் பூபாளம் பாடிடுமே நம்பிக்கை! நல்லசகுனம்!
காடா யிருந்தநிலம் பொன்விளையச் செய்யாதோ வைரநெஞ்சு;
கருங்கல்லைக்கோபுரமாய்,காட்டாற்றைமின்னொளியாய்மாற்றிடாதோ!
வாடா மலரைப்போல் நம்பிக்கைப் பயிருண்டு, வாழ்க்கையுண்டு!
வருங்காலப் பயனுண்டு! களிநகையே கலகலக்கும் வீடுதோறும்!
உள்ளக் கோயிலிலே நம்பிக்கை அருளுண்டு, பாக்கியமுண்டு!
உலகத்து வாழ்வுக்கே மணியான பொருளுண்டு, மகிமையுண்டு!

இன்று,—சென்ற பல காலம்போலவே எமது தயாரிப்புக்கள் வீடுதோறும் ஒளிதுலங்க, உடல்நலமோங்க, இன்பமிலங்கத் துணைபுரிகின்றன; இதே சமயம் எமது ஊழியத்தின் இலட்சியமாக முன்னிற்பது...

நாளை,—நாளொரு மேனியாக வளரும் நல்வாழ்வு வேட்கை மேலும் மேலும் புதுப்புது முயற்சிகளை ஊக்குவிக்கப்போகும் காலம்; அதன்வழியே வளரும் புதுப்புது எண்ணங்கள், புதுப்புதுப் பண்டங்களோடு பரந்த முறையில் சிறந்த பணி புரிந்திடச் சித்தமாயிருக்கிறோம்...

இன்றும், என்றும்... இல்லம் தோறும் நல்வாழ்வளிப்பது இந்துஸ்தான் லீவர் பணி

PK. 6-50 TM



PRESIDENT'S SECRETARIAT.
RASHTRAPATI BHAVAN,
NEW DELHI

ஜனதிபதியின் ஆசி

கண்ணனுக்கு என்னுடைய பாராட்டுக்கள். கண்ணனுக்கும் கண்ணன் மூலம் சென்னை ராஜ்யக் குழந்தைகளுக்கும் தீபாவளி நன்னளில் என்னுடைய அன்பான வாழ்த்துக்கள்.

3.9.60

பொருளடக்கம்

மலர்: 11 இதழ்: 20

	பக்கம்
ஜனாதிபதி ஆசி	1
வாசகர்களே!	4
தூய்மை - ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள், காமகோடி பீடம்	5
நமது கவர்னர் - புகைப் படங்கள்	9
முதல் பாடம் - மு. வரதராசனார்	17
விடுகவிகள் - 'உலகன்'	20
தம்பியின் திறமை - பெ. தூரன்	21
ரகுவும் சுகுவும் - ராஜி	26
பூனையும் எலியும் - அழ. வள்ளியப்பா	31
வீரவளவன் - சித்திரக் கதை: 'ஜனு'— சித்திரம்: பாபு	33
ஸ்ரீரங்கப்பட்டணம் - என். ராமகிருஷ்ணு	41
சிரிப்புச் சிறுமி - குமார்	45
பொய்க்கால் குதிரை - பூவண்ணன்	49
கருவண்டு - 'சரஸ்வதி'	49
நினைப்பது தனக்கே - கே. கே. ராமன்	50
வீரப் பதக்கம் - நீலம்	55
சித்திரக் கட்டம் - க. திருநாவுக்கரசு	61
போட்டோ க்விஸ் - புஷ்பத்துறை சுப்பிரமணியம்	62
நடிகன் - 'நடனு'	65
காமா - சோமா - தே. பார்த்தசாரதி	72
மறக்க முடியுமா? - ஜோதிர்லதா கிரிஜா	76
பாரத ரத்தினம் - நேரு - இந்திய அரசாங்கச் செய்தி இலாகா	81



இட்டிலி - தங்கமணி	85
எங்கே கூடு கட்டுகின்றன? - ரகமி	90
கண்ணுச்சாமி - ப. ரா.	91
மறைந்திருப்பவர் யார் யார்? - ரகமி	96
ஆடும் பொம்மை - ராஜன்	97
சிநேகிதன் சிங்காரம் - 'சுகி'	101
வானம் புரிந்த விந்தை! - எஸ். வி. நாதன	104
காகிதக் கப்பல் - தமிழழகன்	107
புள்ளிமான் - திருச்சி வாசுதேவன்	107
பணம் - கே. சுந்தரேசன்	108
கண்ணன் முகம் - மூவண்ண முக அணி	..
குயிலும் மயிலும் - 'லெமன்'	113
பெயர் தெரியுமா? - 'ஆழி'	114
விரல் வாய்பாடு - 'மூர்த்தி'	116
இலவசம் - ஏ. சுவாமிநாதன்	117
புராணக்காட்சிகள் - ரகமி	122
செல்வம் - ராஜம்	123
சிந்தித்துச் சொல்லுங்கள்!	127
புதிர் விடைகள்	128

புகைப்படங்கள்: என். ராமகிருஷ்ணு, புஷ்பத்துறை சுப்பிரமணியம், ராஜன், பாஸ்கர், போட்டோ ஆர்ட் சென்டர், குருமூர்த்தி, சங்கர், வி. கிருஷ்ணசாமி.

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு, ரெஸாக், பாபு, உமாபதி, மணி, ஸாகர், ஜயன், லதா, ஐ. மாலி, சுதர்ஸன்.

அட்டைப் படம் - ஸாமி.

அன்பார்ந்த வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் கூறுகிறேன். உங்கள் உள்ளத்தில் இருள் அகன்று, ஒளி வீச வேண்டும். பயம் மறைந்து, துணிவு பிறக்க வேண்டும். கள்ளம் ஒழிந்து, கனிவு சுரக்க வேண்டும். கண்ணன் மலர் இந்த நோக்கங்கொண்டே இன்று உங்கள் மலர்க் கரங்களில் விளங்குகிறது.

பிரித்துப் பாருங்கள். நமது மாபெரும் பாரதத்தின் பண்புகளுக்கெல்லாம் சின்னமாக விளங்கும் ஜனாதிபதி உங்களுக்குத் தம் நல்வாழ்த்துக்களைக் கூறுகிறார்.

முதல் கட்டுரையாக, நமது ஆத்மிக வாழ்வுக்கு ஒளி விளக்காகத் திகழும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் தூய்மையைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் திருச்சி நாஷனல் காலேஜ் ஹைஸ்கூல் மாணவர்களுக்குக் கூறிய அறிவுரை இந்த மலரில் மட்டுமே இடம் பெறுகிறது.

அடுத்தபடியாக நமது ராஜ்யத்தின் கவர்னர் அவர்கள், குழந்தைகள் மீது கொண்ட அன்பு காரணமாக, கண்ணனுக்குத் தனிப்பட்ட படங்கள் எடுக்க அநுமதி தந்திருக்கிறார்கள். அந்தப் படங்கள் உங்களுடைய கவனத்தைக் கவரும் என்று நம்புகிறேன்.

இந்த ஆண்டுப் புகைப்படப் பகுதி, மலரில் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. நேருஜியின் விநோத ஆடைகளும் அவருடைய அன்புக்குரிய பிராணிகளும் பார்த்து இன்புறக் கூடிய காட்சி. அதேபோல்தான் ஆடும் பொம்மையும்.

சித்திரக் கதைக்கு ஓவியர் பாபு வரைந்துள்ள எட்டுப் பக்கப் படங்களும், முகத்தில் அணியக்கூடிய வண்ணப் படமும் உங்கள் கருத்தைக் கவரக் கூடியவை.

இந்த இதழில் பிரபல எழுத்தாளர்களுடன் பல புதிய எழுத்தாளர்களுடைய கதைகளை நீங்கள் படித்து மகிழலாம். அருமையான பல பாடல்களைப் பாடி இன்பம் பெறலாம். படத் துணுக்குகளைக் கண்டு ரசிக்கலாம்.

கண்ணன் அட்டைப் படத்தில் சித்தார்த்தனையும் அவனுடைய உறவினனான தேவதத்தனையும் காணலாம். சித்தார்த்தன் துறவு கொண்டு புத்தராகப் பின்னர் பெருமையடைந்ததற்கு, அடிபட்டு வீழ்ந்த இந்தப் புறாவும் ஒரு காரணமாகும். அந்த நிகழ்ச்சியை அருமையாகக் கோலம் செய்திருக்கிறார் ஓவியர் ஸாமி.

இவ்வளவு பகுதிகளை வழங்கிய பிறகும் இந்த மலரில், இன்னும் சில பகுதிகளைச் சேர்க்க வேண்டும் என்று எண்ணினோம். பக்கங்கள் இடங் கொடுக்கவில்லை. தங்கள் பொன்னான ஒத்துழைப்பைத் தந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கும் கோடி கோடி வாழ்த்துக்கள் கூறுகிறேன்.

—ஆசிரியர்.

230

நாம் சுத்தமாக இருக்க வேண்டும். அழுக்கு என்பது கிட்டவே வரக் கூடாது. முதலில் நமது உடம்பை அழுக்கில்லாமல் சுத்தமாகத் தேய்த்துக் குளித்துப் பாதுகாக்கவேண்டும். ஒரு நாள் மட்டும் ஸ்நானம் செய்துவிட்டுச் சும்மா இருக்கக் கூடாது. தினமும் நீராடவேண்டும். காலை மாலை இரண்டு வேளையும் பலதடவை குளிப்பது உடம்புக்கு நல்லது. நன்றாகத் தேய்த்து, தினமும் குளிக்காவிட்டால் உடம்பில் அழுக்குச் சேருகிறது. சொறி சிரங்கு உண்டாகிறது. உடம்புக்குக் கேடு விளைகிறது. அப்புறம்

தூய்மை

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

காமகோடி பீடம்

ஒன்றுமே செய்ய முடிவதில்லை.

உடல் மட்டும் சுத்தமாக இருந்து பிரயோஜனமில்லை. அதில் அணியும் உடையும் சுத்தமாக இருந்தால்தான் பிள்ளைகள் பிரகாசமாக இருப்பார்கள்; படிப்பும் நன்றாக வரும்; சலவைக்குத் துணிகளைப் போடுகிறோம். அவர்கள்



அதை வெளுத்து வருகிருர்கள். அதைத் தவிர்க்க முடியாது. அதை விட நாமே நமது ஆடைகளை அன்ருடம் சோப்புப் போட்டுத் தோய்த்துக் கட்டுவது உத்தமம். உடம்பு தூய்மையாக இருக்க வேண்டும். உடையும் தூய்மையாக இருக்கவேண்டும். அப்போது தான் அழுக்கு, வியர்வை, சொறி சிரங்குகளிலிருந்து விடுபட்டுச் சுத்தமாக இருக்க முடியும்.

முதலில் உடல். அப்புறம் உடை. இவற்றிற்கும் மேலாக ஒன்று இருக்கிறது. அது தான் உள்ளம் - மனசு. மனச் சுத்தம் - உள்ளத் தூய்மைதான் மிக மிக முக்கியம். மனசிலே அழுக்குக் கூடாது. மனசிலே அழுக்கு என்ருல் என்ன? ஒரு தப்பு - தவறுதலாகச் செய்கிருேம். அதை மறைக்கப் பொய் சொல்கிருேம். எதனுல்? தவறு தெரிந்துவிடுமோ என்கிற பயத்தினுல். இந்தப் பயம் - அழுக்கு அகல வேண்டும் பொய் சொல்லும் எண்ணமே - தீய எண்ணத்தால் வருவது! 'பக்கத்திலுள்ள பையன் நல்ல மார்க்கு வாங்கிவிட்டானே, நாமும் வாங்க வேண்டும்' என்கிற ஆசையினுல் பொருமைப் படுவது சரி. ஆனுல் 'அடுத்தவனைக் கெடுக்க வேண்டும்; அவனைப்பற்றிக் கோள் சொல்லிக் கெட்ட பெயர் வாங்கித் தர

வேண்டும்; அவனைப்பற்றி மொட்டைக் கடிதம் எழுதி அவதூறு தேடித் தர வேண்டும்' என்பதுதான் தவறு; அழுக்கு. அந்த அழுக்கை அடியோடு கழுவிக் களையவேண்டும். மூன்றாவதாகப் பிறரை நிந்திப்பதென்பது மகா பாபம்; மாபெரும் அழுக்கு. அநாவசியமாகப் பிறரைப்பற்றித் தவறாகப் பேசுவது தப்பு. நாம் பிறருக்கு உபகாரமாக இருக்கவேண்டுமே தவிர அபகாரமாக இருக்கக்கூடாது. நிந்தனை என்கிற அழுக்குக்கு இடம் கொடுத்தால், சொறி சிரங்கு வந்த உடம்பு கஷ்டப்படுவது போல, மனிதன் ரொம்பக் கஷ்டப்படுவான். பள்ளியிலும் சரி, வேலை பார்க்கும் ஆபீசுகளிலும் சரி, வேறெங்கே இருந்தாலும் நிந்தனையாகும் அழுக்குள்ளவன் - மற்றவர்களைப்பற்றித் தீச்சொல் கூறுகிறவன் - ஒரு நாள் இல்லாதுபோனால் ஒரு நாள் அகப்பட்டுக் கொள்வான். அவன் உதவிக்கு யாரும் வரமாட்டார்கள். அவன் தீயவனாகிப் பெரியோர் கண்டனத்துக்கு உள்ளாகிறான். அதனால் நிந்தனை என்கிற அழுக்கை நீக்கி மனத்தூய்மை பெறவேண்டும்.

உடம்பு சுத்தமாக இருக்கச் சோப்பு, சீயக்காய் போட்டுத் தேய்த்துக் குளிக்கிறோம். உடை சுத்தமாக, சவுக்காரம் போட்டு அழுக்கைக் களைகிறோம். உள்ளத்து அழுக்கை எப்படிப் போக்கடிப்பது? தினமும் ஐந்து நிமிஷமாவது தனிமையில் உட்காரப் பழகவேண்டும். தாய் தந்தையரை மனசிலே நினைக்க வேண்டும். அவர்கள் பேச்சுக்கு மாறாக நடக்கக்கூடாது. அப்பா அம்மாவை நினைக்கும்போது உலகத் தாய் தந்தையான பார்வதி-பரமசிவனையும் நினைக்கவேண்டும். சின்ன ஆட்டுக்குட்டி முதல் எல்லா ஜீவராசிகளுக்கும் அவன்தான் தந்தை - தலைவன். ஆகவே நம்மைப் படைத்துக் காக்கும் தெய்வத்தைச் சில நிமிஷமாவது தியானம் செய்ய வேண்டாமா?

உலகம் முழுவதும் ஒரு குடும்பம். அதன் தலைவன்தான் ஆண்டவன். இந்தப் பூமி இருக்கிறது. அதில் எத்தனைகோடி ஜீவராசிகள்! புழுக்கள் முதல் மனிதன் வரை எத்தனை படைப்புகள். பெரிய சூரியமண்டலம்! அதைப் பூமி சுற்றுகிறது. அதுபோல எத்தனை எத்தனை மண்டலங்கள், கிரகங்கள்! இத்தனையும் படைத்த இறைவனுக்குத்தான் எவ்வளவு கருணை! தரும சொரூபியான அவனை, யாவும் படைத்த அந்த அருட்சுடரை, நினைத்து நினைத்து நமது நன்றியைத் தெரிவித்தால், நாம் செய்த அழுக்கெல்லாம் கரைந்து மனசு சுத்தமாக நிற்கும்.

சுவாமியையும் நினைக்கலாம்; அம்பிகையையும் நினைக்கலாம். இருவரும் உலகத் தாய் தந்தையர். அன்னையும் பிதாவுமாக விளங்கும் அவர்கள் ஒருவர்தான். சிவமும் சக்தியும் ஒன்றே! திருச்சியிலுள்ள சுவாமிக்குப் பெயர் தாயுமானவர். அன்னையும் அவர்தான். அவர்களை நினைக்க நினைக்க மனசிலே தீய எண்ணம் விலகுகிறது; தீங்கு ஓடுகிறது. நல்லது நிலைத்து ஊன்றிவிடுகிறது.

நல்லபிள்ளை என்று பெயர் எடுக்க வேண்டும். கெட்ட பிள்ளையாவது சுலபம். நல்ல பிள்ளைக்குத்தான் படிப்பு நன்றாக வருகிறது. நல்லவன் என்று பெயரெடுத்து வாழ்க்கையில் நல்ல வாய்ப்புப் பெறுகிறான். தீயவன் தண்டனை பெறுகிறான். கடவுளை



ஸ்ரீ காமகோடி பீடம் - இளைய சுவாமிகள்

நினைப்பதால்தான் நல்லெண்ணம் உண்டாகிறது. நன்மை செய்யத் தூண்டுகிறது. அந்த உள்ளத்தில்தான் அன்பு பிறக்கிறது. நமக்கு நல்ல பண்பு வேண்டும். 'இவன் இருந்து என்ன பிரயோஜனம்? இவன் வந்துவிட்டானே!' என்று பிறர் சொல்லும்படி இருக்கக் கூடாது. இதோ, மரம் இருக்கிறது. நம்மைப் போல் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து மடிகிறது. ஆனால் நம்மைப்போல் இல்லாது எவ்வளவோ வகையில் பிரயோஜனப்படுகிறது. நமக்கு நிழலிடுகிறது. பட்சிகள் இருக்க - படுக்க - வீடு கட்டப் பயன்படுகிறது. மடிந்தால், விறகாகவும் ஆகிறது. ஆனால்நாம்? நாமும் பிறருக்கு நல்லது செய்தால் வாழ்க்கை பயன்படும். பிறருக்கு உபகாரம் செய்யலாம். உபகாரம் செய்தால் மனசு குளிர்கிறது. இதற்கெல்லாம் மனசு சுத்தம் அவசியம். வாழ்க்கை இன்பமென்று சொல்லமுடியாது. துன்பம் கலந்துதான் இருக்கிறது. பெரும் புயல் அடிக்கிறது. மரத்திலுள்ள பறவைகள் அந்த மரக்கிளைகளை இறுகப் பிடித்துக்கொண்டு தப்புவதுபோல நாம் மனசிலே இறுகப் பிடித்துக்கொள்ள ஒரு பெரிய ஆலவிருட்சம், தூண்தான் தெய்வம்.

உடல், உடை, உள்ளம் இவை சுத்தம் பெற்றுத் தூய்மையாக இருக்க தாயும் தந்தையுமான இறைவனின் பாத கமலங்களை விடாமல் பிடித்துக்கொண்டு, 'எனக்கு வேறு கதியில்லை. நல்ல வழி நீதான் காட்டவேண்டும்' என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். அந்தப் பிரார்த்தனைக்கு நிச்சயம் பலன் உண்டு. உள்ளத் தூய்மையை இளவயதிலேயே பெறுவது சுலபம். நம்மை முதலிலேயே தூய்மைப்படுத்திக் கொண்டால் ஒரு குறையும் இருக்காது. கடவுள் அருள் புரிவான்!

நமது கவர்னர்



காந்தி மண்டபம், குழந்தைகள் பார்க் இரண்டும் உள்ள கிண்டியில்தான் பெரிய சோலை நடுவே நமது கவர்னர் வசிக்கும் ராஜபவனம் இருக்கிறது.

கவர்னர், இந்த ராஜ்யத்தின் தலைவர். பாரத நாட்டின் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். சபாநாயகர்கள், மந்திரிகள், நீதிபதிகள் இவர்களையெல்லாம் நாம் அன்றாடம் பார்க்க முடியும். ஆனால் கவர்னரைப் பார்க்க முடியாது. விசேஷ காலங்களில்தான் அவரைப் பார்க்க முடியும்.

அடுத்த பக்கங்களில் ராஜபவனத்தில் நமது கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்களுடைய அன்றாட அலுவல்களைப் படமாக எடுத்து வெளியிட்டிருக்கிறோம்.

நமது கவர்னர் மேதி அவர்கள் மகாத்மாவின் இயக்கங்களில் கலந்துகொண்டு, நாட்டுக்காகப் பல தியாகங்கள் புரிந்தவர். பல முறை சிறைப்பட்டவர்.

அஸ்ஸாம் ராஜ்யத்தின் இரும்பு மனிதர் எனப் புகழ் பெற்றவர்; முதன் மந்திரியாக இருந்து நல்ல அனுபவம் பெற்றவர். அவரை அடுத்த பக்கங்களில் பாருங்கள்.





1. கவர்னர் மாளிகையின் முன் வாயில்.

2. கவர்னரின் மெய்காப்பாளர் இருவரும் மாளிகையின் தலைமை நிர்வாகியும் அந்தரங்கக் காரியதரிசியும் ஏ. டி. ஸி: அறையில் காணப்படுகிறார்கள்.



3. கவர்னர் தம் குடும்பத்தாருடன் காலை உணவு கொள்ளும் காட்சி.

4. உணவு ஆனதும், உடையணிந்து செய்தித்தாள்களைப் பார்வையிடுகிறார்.



5. பிறகு அரசாங்கத் தீர்மானங்கள், உத்தரவுகளுக்குக் கையெழுத்திடுகிறார்.

6. விருந்தினர் வருவதை எதிர்பார்த்திருக்கிறார்.





7. கண்ணன், கலைமகள், மஞ்சரி - பத்திராதிபருடன் அளவளாவுகிறார்.

8. பின்னர், பாரதி விழாவைத் துவக்கிவைக்க, பிரத்தியேகமான வண்டியில் ஏறுகிறார்.





9. மாலை உணவு ஆனபிறகு அன்புப் பேத்தி ரேணுகா தேவியுடன் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கிறார்.

10. ஸ்ரீமதி மேதி அவர்கள், ஓய்வு நேரங்களில் தறியில் அமர்ந்து, அஸ்ஸாம் ராஜ்ய வழக்கப்படி, நெய்கிறார்.



11. மாலையில் ராஜபவன மைதானத்தில் 'கோல்ப்' விளையாடுகிறார்.

12. விளையாட்டு முடிந்ததும் தோட்டத்தைப் பார்வையிடுகிறார்.



13. குறுகுறுத்த முகமும் சூடிகையும்கொண்ட ரேணுகா, தோட்டக் கிராதியில் நின்று கண்ணன் புகைப்படக்காரருக்குப் போஸ் கொடுக்கிறுள்.

இந்தப் படங்களை எடுக்கவும் எடுத்தவற்றைக் கண்ணனில் வெளியிடவும் அன்புடன் இசைவு தந்த கவர்னர் அவர்களுக்கும் அவருடைய மாளிகையிலுள்ள அதிகாரிகளுக்கும் எங்கள் நன்றி உரியதாகும்.

போட்டோ: போட்டோ ஆர்ட் சென்டர், மயிலை.

முதல் பாடம்

டாக்டர் மு. வரதராசனார்

'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பார்கள். எதிர்காலத்தில் அறிவும் அழகும் வலுவும் உடையவர்களாய் வாழக் கூடியவர்கள் யார்? இளமையிலே சிறுவர்களாக இருக்கும்போதே அறிவும் அழகும் வலுவும் உடையவர்களாக இருப்பவர்களே, வளர்ந்த மனிதர்களாக ஆன பிறகும் அவ்வாறு இருக்க முடியும். ஆகையால் சிறுவராக இருக்கும்போதே நல்ல அறிவு வேண்டும், போதுமான வலு வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும்.

ஒரு கிண்ணத்தில் பால் வாங்கி வைப்பதாக எண்ணிக் கொள்வோம். அந்தப் பால் நல்ல பாலாக இருக்கவேண்டும். பால் நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. கிண்ணமும் தூய்மையாக நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். பார்ப்பதற்குக் கிண்ணம் அழகாக இருந்தால் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும். வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் பெறும் அறிவு நல்ல பால் போன்றது. கல்வி கற்கும் சிறுவர்கள் உடல் நலத்தோடு இருப்பது, பால் வாங்கும் கிண்ணம் தூய்மையாக இருப்பதைப் போன்றது. சிறுவர் பார்ப்பதற்கு அழகாக இருப்பது கிண்ணம் பளபள என்று அழகான வடிவத்தோடு இருப்பதைப் போன்றது.

பள்ளிக்கூடத்து மாணவராய் இருக்கும்போதே ஒவ்வொருவரும் இந்த உண்மையை உணரவேண்டும். வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நாள்தோறும் படிக்கவேண்டும். ஓதாமல் ஒரு நாளும் இருக்கக் கூடாது. பெற்றோர்களும் ஆசிரியர்களும் சொல்வதையெல்லாம் கேட்டு அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கைக்கு வேண்டிய அறிவை விளக்கும் நல்ல புத்தகங்களை மட்டும் படிக்க வேண்டும். மனத்தைக் கெடுக்கக்கூடிய புத்தகங்களைப் படிக்கக் கூடாது. கிண்ணத்தில் நல்ல பாலை வாங்கி வைப்பதுபோல், மூளையில் நல்ல அறிவுத் துறைகளை மட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அறிவு இல்லையானால் உடல் வலுமட்டும் இருந்தும் பயனில்லை. முயல் அழகாக இருக்கிறது. அறிவு இல்லாக் காரணத்தால் வேடர்கள் கையில் அகப்பட்டுக் கொள்கிறது. யானையும் புலியும் வலுவான விலங்குகளே! ஆனாலும் அறிவுள்ள மனிதன் அவற்றைப் பிடித்து அடக்கிவிடுகிறான். ஆகவே அறிவு சிறந்தது. அதை இள

மையிலேயே வளர்த்துவர வேண்டும். 'இளமையில் கல்.'

அழகாக இருக்க வேண்டுமானால் என்ன செய்வது? அழகை விலை கொடுத்து வாங்க முடியுமா? சிலர் அப்படித் தவறாக எண்ணுகிறார்கள். அதனால்தான் நகைகளையும் ஆடம்பரமான உடைகளையும் தேடுகிறார்கள். முகத்துக்குப் பூசும் மாவுகளையும் சாயங்களையும் தேடுகிறார்கள். ஆனால் அவற்றால் உண்மையான அழகைப் பெற முடியாது. அவைகள் மேலுக்கு மயக்கலாம்; அழகைத் தர முடியாது. உண்மையான அழகு உடம்பில் இயற்கையாக இருக்க வேண்டும். நோய் இல்லாமல் சுத்தமாக வாழ்ந்தால் அந்த அழகு ஏற்படும். அந்த இயற்கை அழகு உள்ள சிறுவர்களுக்கு நகையும் தேவையில்லை; ஆடம்பர உடையும் தேவையில்லை. அழுக்கு இல்லாத எளிய உடை இருந்தால் போதும். அதுவே இயற்கை அழகுக்குத் துணையாக இருக்கும். புத்தர் முதல் காந்தி யடிகள்வரையில் எல்லாப் பெரியவர்களும் எளிய உடையிலேயே அழகாக விளங்கினார்கள். அப்படிப்பட்ட அழகு வேண்டுமென்று விரும்பினால் அது கைகூடும். நகையும் ஆடம்பர ஆடையும் வேண்டுமென்று விரும்பினால் அந்த ஆசை கவலையை உண்டாக்கும்; ஏக்கத்தைக் கொடுக்கும்; பொறாமை முதலான கெட்ட குணங்களையும் ஏற்படுத்தும். ஆகையால் எளிமையிலும் தூய்மையிலும் அழகைத் தேடுவது நல்லது.

இளமையிலேயே வலுவான உடம்பு வேண்டும். மெலிந்து சோர்ந்துபோகும் உடல் கூடாது. வலுவுள்ள உடம்பில்தான் சுறுசுறுப்பு விளங்கும்.

நிமிர்ந்து உட்கார்தல், நிமிர்ந்து நடத்தல், சோம்பல் இல்லாமல் கடமையைச் செய்தல் இவைகள் வலுவான உடம்பு இருந்தால்தான் முடியும்.

வலு என்றால், குத்துச்சண்டைக்காரனுக்கு இருப்பதுபோல் முரட்டு உடம்பு இருக்கத் தேவை இல்லை. முரட்டு உடம்பில் அறிவு வளர்வதில்லை; அழகும் இருப்பதில்லை. யானை போன்ற உடம்பு தேவை இல்லை. மான் போன்ற உடம்பு வேண்டும். முரட்டுத்தனமான தசைநார்ப் பயிற்சி தேவையில்லை. அன்றாடம் இரண்டு மணி நேரம் மெல்ல விளையாடினால் போதும்; தோட்ட வேலை முதலானவை செய்வது மிகவும் நல்லது.

உடம்பு வலுப் பெறுவதற்குச் சத்தான உணவு வேண்டும். உணவு வயிற்றுக்குள் செல்லும்போது நல்ல உணவை உள்ளே விடுவதற்கும் கெட்ட உணவை உள்ளே விடாமல் தடுப்பதற்கும் ஒரு காவலாளி உண்டு. அந்தக் காவலாளிதான் நாக்கு. காவல்காரன் உண்மையுள்ளவனாக இருக்க வேண்டும். அவன் முதலாளிக்குத் துரோகம் செய்யக்கூடாது. நாக்கு, தன் ஆசையினால் உடம்புக்குக் கெடுதி செய்யக்கூடாது. ஆசைப்பட்ட பொருளையெல்லாம் வயிற்றிற்குள் தள்ளக்கூடாது. உடம்பிற்கு வேண்டிய சத்தான உணவை மட்டும் உட்கொள்ள வேண்டும். தக்காளி, கீரை முதலியவை சுவை மிகுதியாக இல்லை. ஆனால் உடம்புக்கு நல்லவை. தெரு மிட்டாய், ஐஸ் பண்டம் முதலியவை நாக்குக்குச் சுவையாக உள்ளன. ஆனால் உடம்புக்கு நல்லவை அல்ல. நாக்கு என்ன செய்ய வேண்டும்?

நல்ல காவல்காரன் போல் நடக்க வேண்டும். தக்காளி, கீரை போன்ற வற்றை உட்கொண்டு, மற்றவற்றை விரும்பாமல் விட வேண்டும். சில ருடைய நாக்கு உடம்புக்குத் துரோகம் செய்கிறது. சத்துள்ள காய்கறிகளை உட்கொள்வதில்லை; ஆசையால் தின்பண்டங்களையே உட்கொள்கிறது. அந்த நாக்கு கடமையைச் செய்யத் தவறி விடு கிறது. காவல்காரனிடத்தில் உண்மையும் இல்லை; பொறுப்பும் இல்லை. வீட்டுக் காவல்காரனே திருடனுகிவிட்டால் வீட்டை யார் காப்பாற்ற முடியும்? உடம்பு நல்ல வீடு. உடம்புதான் அறிவு விளங்கும் கோயில். அதை நல்ல முறையில் காப்பாற்றுவது சிறுவர்களின் கடமை. எந்தக் கல்வி கற்றாலும் இந்த உண்மையை மறக்கக்கூடாது. கணக்கில் இவ்வளவு மார்க்கு வாங்கினேன், ஆங்கிலத்தில் இவ்வளவு மார்க்கு வாங்கினேன் என்று பெருமைப்பட்டால் போதாது. அறிவை வளர்ப்பது போலவே அழகையும் வளர்த்து, வலுவையும் வளர்த்து, உடம்பைக் காப்பாற்ற வேண்டும் இதுதான் சிறுவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம்.

பார், பார்! பலூன் நடனம், பார்!

போட்டோ: என். ராமகிருஷ்ணு

விடுகவிகள்

'உலகன்'

1. ஆயிரம் தச்சர் கூடி
அழகான மண்டபம் கட்டி
ஒருவன் கண் பட்டு
உடைந்ததாம் மண்டபம்.

2. பந்தற் காலு நாலு
பவழக் காலு நாலு
வெள்ளித் தடி இரண்டு
வெண்சாமரம் ஒன்று.

3. நான் இழுக்க நீ இழுக்க
நட்டுச் சப்பரம் கட்டி இழுக்க
நாய் குலைக்க வள் ளென்ன
நாகப் பட்டணம் கிறீச்சென்ன.

4. செக்கச் சிவந் திருப்பாள்
சிவப்பு ரத்தினம் போலிருப்பாள்
வாலு முளைத் திருப்பாள்
வந்திருப்பாள் சந்தையிலே

5. மக்களும் மக்களும் நாங்களடி
மகராசி மக்களும் நாங்களடி!
அம்மியின் மேலேகும்மி அடிக்கிற
அம்மான் மக்களும் நாங்களடி;
பட்டுப் புடைவைக்கு முத்திரை [வைக்கிற
பல்லு மக்களும் நாங்களடி!

6. அக்கரைக்கும் இக்கரைக்கும் கால் [நாட்டி
அழகான சங்கிலி மேல் பூட்டி
வெள்ளிச் சங்கிலி வடம் பிடித்து
வீச நாழிகையில் தேரோட்டி.

7. முள்ளு முள்ளுக்குள்ளே
முந்திரித் தோப்புக்குள்ளே
வைக்கோற் புல்லுக்குள்ளே
வயிரமணி கண்டெடுத்தேன்.

8. ஏணி மேலே கோணி
கோணி மேலே குழாய்
குழாய் மேலே குண்டு
குண்டு மேலே புல்.

தம்பியின் திறமை

பெ. தூரன்.

கடைக்குட்டி என்றால் பொதுவாக வீட்டிலே செல்லம். அவ்வாறு தாயின் அன்பைப் பெற்ற நல்லமுத்து கடைக்குட்டிதான்.

அவன் தாய்க்கு எல்லாக் குழந்தைகளிடத்திலும் அன்புதான். ஆனால் நல்லமுத்துவுக்கு அதிகமான உரிமை கொடுத்தாள். அதைக் கண்டு மற்ற நாலு அண்ணன்மார்களுக்கும் அவனிடத்திலே பொறாமை. அவனுக்குப் புத்தி சாலித்தனமே கிடையாது என்பது அவர்களுடைய எண்ணம்.



அதைக் கண்டு தாயார் மனம் வருந்தினாள். அவர்களுக்கெல்லாம் நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்று எண்ணினாள். நல்லமுத்து எல்லோரையும்விடப் புத்தி கூர்மையுடையவன் என்பதை அவர்களுக்கு உணர்த்த அவள் ஆசை கொண்டாள்.

அவள் ஒரு நாள் தன் மக்களை அருகே யழைத்து, ''உங்கள் எல்லோருக்கும் வயது வந்துவிட்டது. நமது நாட்டைவிட்டு அடுத்த நாடுகளுக்குள் சென்று சுற்றிப் பார்த்து, உலக அநுபவம் பெற்று வாருங்கள். உங்களுடைய புத்தி சாலித்தனத்தைப் பயன்படுத்தவும் சந்தர்ப்பம் கிடைக்கும்!'' என்று சொல்லி, அவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்து அனுப்பினாள்.

ஐந்து பேரும் புறப்பட்டார்கள். மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்கள் வீரசிங்கபுரம் என்ற ஒரு நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அந்த நகரத்தை ஆண்ட அரசனுக்கு ஒரே ஒரு மகள். அவள் பெயர் பொற்கொடி. அவள் ஒரு வேடிக்கையான தீர்மானம் செய்திருந்தாள். யார் வேண்டுமானாலும் அவளிடம் வந்து எப்படிப்பட்ட பொய்யையும் கட்டுக்கதையையும் தங்கள் வாழ்க்கையிலேயே உண்மையாக நடந்தது என்று கூறலாம். யார் கூறுவதைக் கேட்டு அதைப் பொய்யென்று

அவள் சொல்லுகிருளோ, அவரை அவள் மணந்துகொள்வதாக அறிவித்திருந்தாள். ஆனுல் இதுவரையிலும் அவளிடத்திலே யாரும் வெற்றியடையவில்லை.

இந்த விஷயம் சாமிநாதன் முதலான ஐவருக்கும் தெரிந்தது. அவர்களும் பொற்கொடியிடம் சென்று பேசி, வெற்றியடையத் தீர்மானித்தார்கள்.

முதல் நாள் எல்லோருக்கும் மூத்தவஞன சாமிநாதன் பொற்கொடியிடம் உற்சாகத்தோடு கதை சொல்லலாஞன்.

''ஒரு நாள் நான் மீன் பிடிப்பதற்காகக் கடலிலே நெடுந்தூரம் சென்றேன். என்னுடன் வந்த வேலைக்காரர்கள் கடலில் பெரிய வலைகளை வீசிஞர்கள். ஆனுல் அன்று ஒரு மீன்கூட அகப்படவில்லை. அப்படி மீன் கிடைக்காத காரணத்தை ஆராய வேண்டுமென்றுதான் கடலுக்குள் குதித்துக் கடலின் அடிப்பாகத்திற்கே சென்றுவிட்டேன். அங்கே மலையைப்போல ஒரு திமிங்கலம் இருந்தது. அது தன் வாயைத் திறந்து அந்தப் பக்கத்திலுள்ள எல்லா மீன்களையும் விழுங்கிக்கொண்டிருந்தது. நான் கொஞ்சங்கூடத் தயங்காமல் அந்தத் திமிங்கலத்

தின் திறந்த வாய்க்குள் நுழைந்து அதன் வயிற்றுக்குள் சென்றேன். அந்தச் சமயத்தில் எனக்கு அடக்கமுடியாத பசி உண்டாகி விட்டது. அதனால் திமிங்கலத்தின் வயிற்றுக்குள்ளேயே ஓர் அடுப்புக் கூட்டி நெருப்பு மூட்டினேன். வயிற்றுக்குள் கிடந்த ஏராளமான மீன்களில் நல்ல மீன்களாகப் பொறுக்கி எடுத்து அவற்றை அந்த அடுப்பிலே போட்டுப் பக்குவம் செய்தேன். பசி தீரும் வரையில் சாப்பிட்டேன். பிறகு வெளியே வந்து, அந்தத் திமிங்கலத்தின் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டேன். அது துடித்துச் செத்து விழுந்தது. கொஞ்ச நேரத்தில் திமிங்கலம் மிதந்து கடலின் மேல் மட்டத்திற்கு வந்து விட்டது. நான் அதன் முதுகில் ஏறிக் கொண்டு வந்து கப்பலுக்குச் சென்றேன். அந்தத் திமிங்கலத்தையும் கப்பலில் ஏற்றிக் கொண்டு கரைக்கு வந்து சேர்ந்தோம்..''

இவ்வாறு சாமிநாதன் சொல்லி



ஆவலோடு அவளைப் பார்த்தான்.

''நீங்கள் சொன்னது முற்றும் உண்மை'' என்று அவள் தயங்காமல் சொல்லிவிட்டாள்.

இரண்டாவது நாள் சாமிநாதனுக்கு அடுத்த தம்பியாகிய மாணிக்கம் சென்று பேசலானான்.

''எனக்குப் பத்து வயதிருக்கும்போது ஒரு நாள் இரவு முழுநிலா அழகாக வான வெளியிலே பிரகாசித்துக்கொண் டிருந்தது. எனக்குச் சந்திரமண்டலத்திற்கு அப்பொழுதே போகவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. உடனே என்னுடைய தொழிற்சாலைக்குப் போய் ஒரு புஷ்பக விமானம் செய்தேன். அதில் ஏறி நொடியிலே சந்திரனுக்குப் போய் விட்டேன். அங்கே இருந்த பெண்களும் குரங்குமூஞ்சிப் பெண்களாக இருந்தார்கள். அதனால் அங்கே தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. உடனே திரும்பலாம் என்று நினைத்தேன். ஆனால் அதற்குள்ளே ஒரு குரங்குப் பெண் என் புஷ்பக விமானத்திலே குரங்கு வேலை செய்துவிட்டாள். நுட்பமான அந்த விமானம் கெட்டுப் போய்விட்டது. அதனால் நான் நிலாவின் வெண்மையான கிரணம் ஒன்றைக் கையில் பற்றிக்கொண்டு பூமியை நோக்கிக் குதித்தேன். நான் கையில் பற்றிக்கொண்டு வந்த நிலாக் கதிர் பாதி வழியில் அறுந்து நின்றுவிட்டது. நான் உடனே ஒரு மேகத்தின்மேல் படுத்துக்கொண்டு ஆகாயத்தில் பறந்தேன். கொஞ்ச நேரத்தில் அந்த மேகம் மழையாகப் பெய்ய ஆரம்பித்தது. நான் ஒரு மழைத்துளிக்குள் புகுந்து கொண்டு பூமிக்கு வந்து சேர்ந்தேன்.''

இவ்வாறு அவன் சொல்லி முடிப்பதற்கு முன் பொற்கொடி, ''நீங்கள் சொன்னது எல்லாம் உண்மை'' என்றாள்.

மறுநாள் அடுத்த தம்பி சுந்தரம் புறப்பட்டான்.

''எனக்கு ஐந்து வயதாக இருக்கும்பொழுது ஒருநாள் நான் காட்டிலே ஒரு சிங்கத்தின் மீதேறிக் கொண்டு உல்லாசமாகச் சுற்றிக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரத்தில் எனக்குப் பசிக்க ஆரம்பித்தது. அதனால் அங்கே தென்பட்ட ஒரு விசித்திரமான மாமரத்தின் அருகே சென்றேன். அடிமரம் நுனிமரம்போலச் சிறியதாகவும் நுனிமரம் அடிமரம்போலப் பருத்தும் இருந்தது. அந்த மரத்தில் ஏராளமாகப் பலாப் பழங்களும் ஆப்பிள் பழங்களும் பழுத்துத் தொங்கின. நான் மரத்தின் மீதேறி விருப்பமான பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டே யிருந்தேன். சாப்பிடச் சாப்பிட என் கைகளும் கால்களும் பனைமரங்களைப்போல நீண்டு வளர்ந்து விட்டன. வயிறு ஒரு சிறிய குன்று போல ஆகிவிட்டது. அந்த நிலையிலே நுனி மரத்தைவிட்டு அடி மரத்திற்கு இறங்கினால் மெல்லியதான அடிமரம் முறிந்து விழுந்து விடுமென்று எனக்குத் தோன்றியது. அதனால் உச்சியிலிருந்தபடியே காலை நீட்டி, ஓர் அடி எடுத்து வைத்து, என் வீட்டிற்குச் சென்று அங்கிருந்த ஓர் ஏணியை எடுத்து வந்தேன். அந்த ஏணியை மரத்தின்மீது சாய்த்து வைத்துக் கீழே இறங்கி வீட்டிற்கு வந்தேன்.''

பொற்கொடி, ''நீங்கள் சொன்னது அவ்வளவும் நடந்ததாக

நம்புகிறேன்'' என்று சொல்லி விட்டாள்.

மறுநாள் நாலாவது தம்பி வேலுச்சாமி பொற்கொடியிடம் புறப்பட்டான்.

''நான் பிறப்பதற்கு முன்பே ஒரு வீரச்செயல் புரிந்திருக்கிறேன். ஒரு நாள் என் தாயார் காட்டு வழியில் தனியாகச் சென்று கொண்டிருந்தாள். அவள் எட்டு மாதக் கர்ப்பிணி. பக்கத்தில் துணை யாரும் இல்லை. மாலைநேரமாயிற்று. திடீரென்று ஒரு வேங்கைப்புலி பாய்ந்து வந்தது. என் தாயார் நடுங்கிக்கொண்டு அலறினாள். நான் கருப் பையைவிட்டு வெளியே குதித்தேன். வேங்கையின் மூக்கிலே எனது இரண்டு கைவிரல்களை விட்டு அந்தப் புலியைத் தாக்கித் தரையிலே ஓங்கி அடித்தேன். புலி வீரிட்டுக் கீழே விழுந்து மாண்டு போயிற்று. பிறகு நான் மகிழ்ச்சியோடு கருப் பைக்குள் புகுந்து கொண்டேன்.''

இதையும் பொற்கொடி உண்மை என்றாள்.

அடுத்த நாள் பொழுது விடிந்ததும் கடைசித் தம்பியாகிய நல்லமுத்து புறப்பட்டான்.

''மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் மந்திரத்தீவு என்னும் ஒரு தீவிலே அரசிளங்குமரனைப்போல வாழ்ந்து வந்தேன். அந்தச் சமயத்தில் ஒரு நாள் ஒரு முனிவர் என்னிடம் வந்தார். அவருக்கு நான் அன்போடு பணிவிடை செய்தேன். அவர் மகிழ்ச்சியடைந்து எனக்கு ஓர் அற்புதமான தாமரை மொக்கைக் கொடுத்துவிட்டுச் சென்றார். நான் அதன் அழகைப் பார்த்து வியந்து கொண்டிருந்தேன். தாமரை மொக்கு மெதுவாக விரியத் தொடங்கிற்று. அதற்குள்ளிருந்து மிக அழகான ஓர் இளங்கன்னி வெளியே வந்தாள். அவள் என்னைக் காதலித்தாள். நானும் அவளைக் காதலித்தேன். இருவரும் திருமணம் செய்துகொண்டு ஓராண்டு இன்பமாக வாழ்ந்து வந்தோம்.

பிறகு அவள் திடீரென்று ஒரு நாள் எப்படியோ மறைந்து போய்விட்டாள். என்னால் அவளைப் பிரிந்து வாழ முடியவில்லை. அதனால் அங்கிருந்து புறப்பட்டேன். இரண்டு ஆண்டுகளாக எங்கெங்கோ சுற்றி அவளைத் தேடி அலைந்துவிட்டுக் கடைசியில் இங்கு வந்தேன். இன்றுதான் இந்த நகரத்து அரசிளங்குமரியைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இங்கு வந்து பார்த்தால் என் மனைவியே இந்த நகரத்து அரசிளங்குமரியாக இருக்கிறாள்!''

இவ்வாறு நல்லமுத்து சுருக்கமாகக் கூறி முடித்தான். பொற்கொடி ஒன்றும் பேசாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள். அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் சொன்னதை உண்மையென்று சொன்னாலும் அவள் அவனுக்கு மனைவியாக வேண்டும். பொய்யென்று சொன்னாலும் நிபந்தனையின்படி அவனுக்கு மனைவியாக வேண்டும். அதனால் பொற்கொடி பேசாமல் இருந்தாள். நல்லமுத்து வெற்றியடைந்தான்.

சில நாட்களில் அவனுக்கும், பொற்கொடிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. நல்லமுத்துவே அறிவில் மிக்கவன் என்று தாய் மகிழ்ச்சியுற்றாள்.

''சும்மா, தைரியமா இதைச் சாப்பிடு! தீபாவளி வெடி மாடல்லே எங்க சரக்கு மாஸ்டர் செய்த லட்டுதான் இது!''

ரகுவும் சுகுவும்



ரகுவும் சுகுவும் இரட்டைப்பிள்ளைகள். ஒரே சமயத்தில் இரண்டு பேரும் பிறந்ததால் ரகுவுக்கு இருக்கும் குணங்கள் யாவும் சுகுவுக்கும் இருந்தன. அவர்கள் பட்டணத்தில் வசித்து வந்தார்கள். அவர்கள் வீட்டிற்குக் கிராமத்திலிருந்து அவர்களுடைய உறவினன் குமார் என்ற சிறுவன் படிப்பதற்காக வந்தான். குமார் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். நல்ல குணம் உடையவன். நல்ல குணமில்லாத ரகுவுக்கும் சுகுவுக்கும் குமாரைக் கண்டால் பிடிக்காது.

படிப்பதை விட்டுவிட்டு, அடிக்கடி ரகுவும் சுகுவும் சிநேகிதர்களை வைத்துக்கொண்டு வீட்டில் நாடகம் போடுவார்கள். நாடகம் போடுவதற்காகப் பொய்-தாடி, மீசை, தலைமயிர், டோப்பா மற்றும் எல்லாச் சாமான்களும் வாங்கியிருந்தார்கள். இதையறிந்த அவர்கள் தாயாரும் தகப்பனாரும் ரகுவையும் சுகுவையும் பலமாகக் கண்டித்தார்கள். இருந்தும் ரகுவுக்கும் சுகுவுக்கும் நாடக ஆசை போகவில்லை.

ஒரு நாள் மாலை ஆறு மணி இருக்கும். ரகுவும் சுகுவும் குமாரை அழைத்துக்கொண்டு மாடிக்குப் போனார்கள். அங்கே ரகுவும் சுகுவும், ''குமார்! நீ மிகவும் சிறிய பையனாக இருக்கே! உனக்கு அகஸ்தியர் மாதிரி ஒரு குள்ள முனிவர் வேஷம் போடப் போகிறோம்!'' என்றார்கள்.

அதற்குக் குமார், ''அண்ணா! அண்ணா! வேண்டாம். உங்கள் அப்பாவுக்குத் தெரிந்தால் கோபிப்பார்கள்!'' என்று தடுத்துப் பேசினான்.

பிடிவாத குணம் படைத்த ரகுவும் சுகுவும், ''குமார்! உனக்கு ஒரு ஆபத்தும் நேரிடாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்று சொல்லிக்கொண்டே ஒரு முனிவர் மாதிரி நீண்ட தாடி, பெரிய மீசை, பெரிய சடைகள் உள்ள ஒரு தலைமயிர் டோப்பா, நெற்றியிலும் உடம்பிலும் பட்டை பட்டையாகத் திருநீறு, தூய்மையான பூணூல், ரிஷிகள் கட்டிக் கொள்வதுபோல வேஷ்டி, அங்கவஸ்திரம் முதலிய யாவையும் குமாருக்குப் போட்டு அலங்கரித்தார்கள்.



''அடே! பார்ப்பதற்கு அகஸ்தியர் மாதிரியே இருக்கிறானே!'' என்று ரகுவும் சுகுவும்

சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவர்களின் தகப்பனார், ''ஏ ரகு, நாங்களெல்லாம் வெளியில் பீச்சுக்குப் போகிறோம். நீங்களும் புறப்படுங்கள்!'' என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வந்தார்.

ரகுவுக்கும் சுகுவுக்கும் அப்பொழுது என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்பா அறைக்கு வருவதற்குள் குமாரை ஒளித்து வைக்க வேண்டுமென்று எண்ணி, அவசர அவசரமாக ஒரு பெரிய பீரோவைத் திறந்தார்கள். பீரோவிலுள்ள ஓர் உயரமான அறையில் குமாரை நிறுத்திவிட்டு, ''உஸ்.....சத்தம் போடாதே!'' என்று பீரோவைப் பூட்டிவிட்டு ரகு, சுகு இரண்டு பேரும் அறையைவிட்டு வெளியே சென்றார்கள்.

அவர்களின் தகப்பனார், 'எங்கே குமார்?' என்றார்.

''அவனைக் காணவில்லை'' என்று ரகுவும் சுகுவும்சொல்லிவிட்டு அப்பாவுடன் பீச்சுக் குப்போனார்கள்.

குமார் முனிவர் வேஷத்தில் பீரோவிற்குள் நின்றான். அவனுக்கு மூச்சுத் திணறிற்று. பாவம்! அவன் ஒன்றும் தோன்றாமல் விழித்தான்.

வெகு நேரம் கழித்து யாரோ அறையின் கதவைத் திறப்பது போல் தோன்றியது. ஆனால் அறையின் விளக்கைப் போடவில்லை. குமார் இருந்த பீரோவின் அருகில் வந்து ஒருவன், பீரோவை ஏதோ ஆயுதங்களால் திறப்பது போல் தோன்றியது. குமார் ஒன்றும் தோன்றாமல் திகைத்து இரண்டு கைகளையும் மேலே கூப்பி, கடவுளே கதியென முனிவர்போலத் தியானித்தான். அந்தச் சமயத்தில் படார் என்று கதவுகள் திறந்தன. பீரோவைத் திறந்தது ஒரு திருடன்!

பீரோவைத் திறந்தவுடன் திரு



டன் தன் கையிலிருந்த டார்ச் விளக்கின் உதவியால் பீரோவைப் பார்த்தான். முனிவர் வேஷத்தைப் பார்த்ததும் திருடனுக்கு உடல் நடுக்கம் கண்டது. பயத்தால் மூகச்சையுற்றுக் கீழே விழுந்தான். திருடனைப் பார்த்து விட்டுப் பயந்து, சிலைபோல அசைவற்று நின்ருன் குமார்.

அந்தச் சமயத்தில் வெளியிலிருந்து திரும்பி வந்த ரகு, சுகு, அவர்களுடைய தாய், தந்தையர், கள் வாசல் கதவில் பூட்டுக்கள் உடைபட்டுத் திறந்து கிடப்பதைப் பார்த்ததும், ''திருடன், திருடன்!'' என்று உள்ளே ஓடிவந்தார்கள்.

இவர்கள் வந்ததும் திருடனுக்கு மூர்ச்சை தெளிந்ததும் சரியாக இருந்தது. அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டினுர்கள்.

''இங்கே பார்த்தேளா, பீரோவுக்குள்ளே யாரோ முனிவர்!'' என்று கத்தினுள், அதற்குள் அங்கே வந்து சேர்ந்த ரகுவின் தாயார்.

''நான் முனிவர் அல்ல, மாமி

காளான்கள் என்றால் இளப்பமாக எண்ணிவந்தோம். பெனிசிலின் போன்ற அரு மருந்துகளும் அச்சிடும் மை வகைகளும் தயாரிக்க இவை தேவைப்படுகின்றன!

குமார் தான்'' என்று சொன்னவுடனே பயத்துடன் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.

பிறகு குமாரிடம் விஷயத்தைக் கேட்டு அறிந்ததும் திருடனைப் போலீஸாரிடம் ஒப்புவித்தார்கள்.

2

''நாம் எது செய்தாலும் குமாருக்கே நல்ல பெயர் கிடைக்கிறது. இனிமேல் அவனுக்கு ஒரு சந்தர்ப்பமும் அளிக்கக் கூடாது'' என்று ரகுவும் சுகுவும் உறுதி செய்துகொண்டார்கள்.

ஒரு நாள் மாலை நேரத்தில் தோட்டத்திலே ரகுவும் சுகுவும் காற்றாடி விட்டுக்கொண் டிருந்தார்கள். காற்றாடி அருகிலுள்ள மரக்கிளையில் சிக்கியது. கிராமத்திலிருந்து பழகிய குமார், சர சர வென்று மரத்தில் ஏறி உச்சிக் கிளைக்குப் போய்ச் சேர்ந்தான். அந்தக் கிளையில் பஞ்சவர்ணக் கிளி ஒன்று காற்றாடியின் நூலில் சிக்கி உட்கார்ந்திருந்தது. உடனே ரகுவும் சுகுவும் அவனிடம், ''குமார், நீ காற்றாடியை எடுத்து வராவிட்டால் போகிறது; அந்த அழகான பஞ்சவர்ணக் கிளியை எங்களுக்குப் பிடித்துக் கொடு'' என்றார்கள். குமாரும் கிளியோடு வந்தான்.

பஞ்சவர்ணக் கிளியின் கழுத்தில் ஓர் அழகான சுருக்குப்பை தொங்கியது. ஒரு காகிதமும் வைத்திருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தார்கள்.

''இந்தப் பஞ்சவர்ணக் கிளி வசித்து வரும் இடம், வெள்ளி மலைச் சாரலுக்குச் சமீபத்தில் உள்ள ஒரு குடிசையில்தான். அந்தக் குடிசைக்குச் சமீபத்தில் ஓர் இரகசியமான இடத்தில் ஒரு பொக்கிஷம் இருக்கிறது. அதில் பல அருமையான ரத்தினமாலைகள் இருக்கின்றன. வெள்ளிமலைச் சாரல் என்பது பொன்மலைக்குச் சுமார் பத்து மைல் தெற்கேயுள்ளது. வழியில் பல துன்பங்கள் உண்டு. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் யார் வருகிறார்களோ அவர்களுக்குக் கட்டாயம் பொக்கிஷம் கிடைக்கும்! இது ரகசியம்.''

பொன்னாசை பிடித்த ரகுவும் சுகுவும் மிகவும் சிரமப்பட்டு, வெள்ளி மலைச் சாரலை அணுகினார்கள். இவர்கள் போகும்போது சற்று விடியும் நேரம். குடிசையில் படுத்திருந்த ஒரு கிழவன் ஓடி வந்து பஞ்சவர்ணக் கிளியைக் கையில் வாங்கிக்கொண்டான். அந்தக் கிளியும் கிழவனைப் பார்த்துச் சந்தோஷத்தால் தன் சிறகுகளைப் படபட வென்று அடித்துக்கொண்டது.

உடனே ரகுவும் சுகுவும், ''எங்கே பொக்கிஷம்? பொக்கிஷம் எங்கே, எங்கே?'' என்று கேட்டார்கள்.

அந்தக் கிழவன் சிரித்துக் கொண்டே, ''பொக்கிஷமா? அதில் எழுதியிருந்ததை உண்மையென நம்பி வந்தீர்களா? அடிக்கடி என் பஞ்ச வர்ணக்கிளி காணாமற் போய் விடுவது வழக்கம். அது என்னிடம் திரும்பி வந்து சேருவதற்கு நான் செய்த தந்திரம் இது!'' என்று சொல்லிச் சிரித்தான். ரகுவுக்கும் சுகுவுக்கும் எப்படி யிருக்கும்?

''ஏண்டா, ரகு! சுகு!! எண்ணெய் தேய்த்துக்கொள்ள நாழிகை ஆகிவிட்டது'' என்று அம்மா கூப்பிட்டதும் இரண்டு பேரும் கனவிலிருந்து எழுந்தார்கள். இரட்டைப் பிள்ளைகள் அல்லவா? இரண்டு பேரும் ஒரே சொப்பனத்தைக் கண்டிருக்கிறார்கள்.

எலியும் பூனையும்

அழ. வள்ளியப்பா

பூனை:- எலியம்மா, எலியம்மா,
எட்டிப் பாரம்மா.
இனிமையான பண்டம் இங்கே
இருக்குதே அம்மா.

எலி:- பூனையாரே, பூனையாரே,
என்ன பண்டமோ?
போளி, அல்வா, லட்டு என்று
புரியச் சொல்லுமே.

பூனை:- வளையை விட்டு வெளியில் வந்தால்
தெரிந்து கொள்ளலாம்.
வாய்க்கு இனிய பண்டம் இதனை
உண்டு மகிழலாம்.

எலி:- பொந்து வழியாய் அந்த இனிப்புப்
பண்டம் தன்னையே
போட்டு விட்டுப் போக லாமே
பூனை நண்பரே.

பூனை:- என்ன செய்வேன்? இந்தப் பொந்தோ
சின்னஞ் சிறியது.
என்னி டத்தில் இருக்கும் பண்டம்
மிகவும் பெரியது.

எலி:- பிட்டுப் பிட்டுச் சிறிது சிறிதாய்
எனது வளையிலே
போட்டு விட்டுப் போக லாமே
பூனை நண்பரே.

பூனை:- கல்லைப் போலக் கடின மாகப்
பண்டம் இருப்பதால்
கடித்துக் கொறிக்கும் சக்தி உன்போல்
எனக்கு இல்லையே!

எலி:- இல்லை யானால் தொல்லை இல்லை.
வளையின் வாயிலே
இனிப்புப் பண்டம் அதனைப் போட்டுச்
செல்வீர் நண்பரே.

பூனை:-வளையின் அருகே போட்டுச் சென்றால்
என்ன ஆகுமோ?
வட்ட மிட்டுத் திரியும் காகம்
விட்டு வைக்குமோ?

எலி:- ஆசை காட்டி மோசம் செய்யும்
அற்பப் பூனையே,
அசடு நானும் அல்ல, அல்ல.
தெரிந்து கொள்ளுவாய்.

பூனை:-அடடே, இதுபோல் நீயும் என்னை
நினைக்க லாகுமோ?
அருமை யான பண்டந் தன்னை
மறுக்க லாகுமோ?

எலி:- இனிப்பை நானும் தின்ப தற்கா
வருந்தி அழைக்கிறாய்?
இல்லை, இல்லை, என்னைப் பிடித்துத்
தின்னப் பார்க்கிறாய்!
உலகில் உள்ள பண்டம் யாவும்
கிடைப்ப தாயினும்
உயிரைக் கொடுக்க உலகில் எவரும்
துணிந்து வருவரோ?
வளையை விட்டு உனது வயிற்றில்
வந்து சேர்ந்திட
மடைய னல்ல, வழியைப் பார்த்து
நடையைக் கட்டுவாய்!

கண்ணன் சித்திரப் போட்டி



'சர்க்கஸ் யானை'
ஆர். சந்திரமோகன்
(வயது-10)

★

'பூம்..பூம்..'
ஜி. சந்தானம்
சென்னை-1 (வயது-15)

திருவிழாக் காட்சி
கே. எஸ். ஹாரிஸ் பாபு
மதுரை-2
(வயது-14)

★

ஆதவன் எழுந்தான்
தாமரை சிரித்தது!'
பி. முருகப்பா
கோவை-4
(வயது-13)



கிராமக் காட்சி
மு. கந்தன்
(வயது-10)

வீர வளவன்
கதை: ஜனு
சித்திரம்: பாபு
ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு அழகு மிக்க இரண்டு பெண்கள் இருந்தனர். அத்துடன் அரசனின் சகோதரி குமாரர்கள் இருவரும் வசித்துவந்தார்கள்.
அரசன், அரக்கர்களின் கொடுமைக்கு பயந்து, தன் பெண்களை ஓர் அறையில் பாதுகாப்பாக வைத்திருந்தான். அவர்களை வெளியில் அனுப்புவதே இல்லை...
ஒருநாள், கிள்ளி, வளவன் இருவரும், அரசகுமாரிகளை தோட்டத்திற்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டார்கள்.
மாமா! ஒன்றும் பயமில்
அழைத்துப் போவது பற்றிக் கவலையில்லை! ஆனால் அவர்களை எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள்வீர்களா?
அப்படியே!
அரசகுமாரிகள் இருவரும் வெளியில் வந்து, நல்ல காற்றை அனுபவித்துத் துள்ளி மகிழ்ந்தார்கள். அப்போது..
அரசகுமாரிகள் இருவரையும் திடீரென்று மேகங்கள் இரண்டு வந்து சூழ்ந்து கொண்டன...
ஆ! மேகம்!

கிள்ளியும், வளவனும் வந்து பார்ப்பதற்குள் மேகங்களோடு, அரச குமாரிகள் மறைந்து விடுகிறார்கள்..
அரசரிடம் வந்த, வளவன்...
எப்படியும், எங்கிருந்தாலும், கொண்டுவந்து விடுகிறோம்!
அரக்கர்களின் இருப்பிடம் போக, வளவன், தன்னிடமுள்ள மந்திரச்சங்கிலியை, எடுத்து வந்தான்...
கிள்ளியும், வளவனும் அரச குமாரிகளைத்தேடிப் புறப்பட்டார்கள்...
வா! இப்போதேபோகலாம்
இருவரும் பலநாட்கள் பிரயாணம் செய்து உலகின் எல்லையிலுள்ள உயர்ந்த மலைச்சிகரத்தை அடைந்தார்கள். மேக மண்டலத்தில் அரக்கர் கோட்டை தெரிகிறது
முதலில், கிள்ளி மந்திரச் சங்கிலியை வீசினான். ஆனால் அது கோட்டையை எட்டவில்லை.
உம்!
வளவன் வீசியபோது சங்கிலி மேக மண்டலக் கோட்டையில் சிக்கிக்கொள்கிறது...
வீரனான வளவன் அண்ணனைத் தரையில் நிறுத்தி, சங்கிலியில் ஏறிச் சென்றான்...
அரசகுமாரிகளுடன் தான் திரும்புவேன்! அதுவரைபொறுத்திரு!
௨

வான மண்டலத்தை எட்டியதும் அரக்கர் கோட்டையை நோக்கி வளவன் நடக்கலானான்
அங்கே ஒரு கோடியில் அமுதவண்ணம் இருந்த அரசகுமாரிகளில் ஒருத்தியைக் காண்கிறான்
அருள்மொழி!
அருள்மொழி, அவனைக் கண்டதும்
அதோ, அரக்கன் வரும் சத்தம் கேட்கிறது! சட்டென்று ஒளிந்து கொள்ளுங்கள்!
கோட்டைக்குள் வரும் அரக்கனை, வளவன் ஒளிந்து கொண்டு கவனிக்கிறான்..
கோட்டைவாயிலைக் கடந்ததும் அரக்கனுடைய குதிரை நின்று கனைக்கிறது
போ! முன்னால்!
அதற்குள் வளவன் உருவிய வாளுடன் அரக்கன்மேல் பாய்கிறான்..
இருவருக்கும் உக்கிரமான வாள்போர் நடக்கிறது...
போடா நரனே!
தொலைந்தாய்!
முடிவில், வளவன் அரக்கனை கொன்றுவீழ்த்திவிட்டான்..
3

அங்கிருந்து புறப்பட்ட வளவன் மற்றொரு கோட்டையைக் காண்கிறான்
அதன் வாயிலில் நுழைந்த போது, குதிரைகளின் குளம்படிச் சத்தம் கேட்டு, மதிலுக்குப் பின் மறைந்து கொள்கிறான்...
அங்கே மற்றொரு குதிரை மீது வந்த பெரிய அரக்கன் வழி மறித்து நிறுத்துகிறான்.
இருவருக்கும் கோரமான சண்டை நடக்கிறது...
அடே மனிதப் பதரே! ஆணவமா உனக்கு!
இருவரும் சண்டையிட்டுக் களைத்து விடுகிறார்கள். அப்போது...
அங்கே ஒரு கழுகு பறந்து வருவதை அரக்கன் கண்டு
கழுகே! உன் சிறகை மந்திரச் சுனையில் நனைத்து, என் நாவில் விடு! இந்த நரனை உனக்குக் கொடுக்கிறேன்!
உடனே, வளவன்...
கழுகே! எனக்கு உதவி செய்! இந்த ராட்சசப் பயலை உனக்குக் கொடுக்கிறேன்...
கழுகு பறந்து சென்று, சிறகை நனைத்து வந்து, வளவன் நாவில், ஊற்று நீரைச் சொட்ட விடுகிறது...
4

வளவன் கஜாப்பு நீங்கிப் பலம் பெற்று, அரக்கனைக் கொன்று, கழுகிடம் போகிறான்...
வளவன் இரண்டு அரச குமாரிகளையும், அழைத்துக் கொண்டு சங்கிலி பிணைத்த இடத்திற்கு வருகிறான்...
அரக்கன்! ஒழிந்தான்
அப்பாவைப் பார்க்கலாம்
முதலில் சங்கிலி வழியாக, மூத்தவள் இறங்குகிறாள்
அவள் நிலத்தை அடைந்ததும் கிள்ளி அவளை வரவேற்கிறான். ஆனால், அங்கே புதரில் மறைந்திருந்த வேஷக்காரன் ஒருவன் அவர்களைக் கவனிக்கிறான்...
இளைய அரசகுமாரியும் இறங்கியவுடன், அவனை ஒருபுறம் இழுத்தவாறு, சங்கிலியைக் கீழே இழுத்து விடுகிறான் வேஷக்காரன்....
பிறகு கிள்ளியைப்பார்த்து.. அரசரிடம் இதைச் சொன்னாயோ, உன்னைக்கொன்று விடுவேன்!
இருவரும், அரசகுமாரிகளுடன், அரசனிடம் போகிறார்கள் வஞ்சகன் பெருமையாக...
அரக்கரைக் கொன்று இவர்களை மீட்டு வந்தேன்!
அப்படியா?

வான மண்டலத்தில் விடப்பட்ட வளவன், செய்வதறியாது கைகளைப் பிசைகிறான்...
அப்போது ஒரு புது ராட்சசன் தோன்றி
யாரடா என் தம்பிகளைக் கொன்றவன்? தொலைத்து விடுகிறேன்!
உடனே வளவன், அவன் மேல் பாய்ந்து, கீழே தள்ளிவிடுகிறான்
நீ, அருள் வரம் பெற்றவன்! என்னை விட்டு விடு!
சரி, பூமிக்குத் திரும்ப என்ன வழி? அதைச் சொல், விட்டு விடுகிறேன்!
அதோ-தூரத்தில் தெரியும் பள்ளத்தாக்குக்குச் செல்! அங்கே ஒரு குதிரையைக் காண்பாய்! அது உனக்கு உதவி செய்யும்...
வளவன், அவனை விலக்கி தள்ளிவிட்டுப் பள்ளத்தாக்கை நோக்கிப் போகிறான்
பிழைத்துப்போ
பள்ளத்தாக்கில் இருந்த அழகிய குதிரை மகிழ்ச்சியால் ஆடுகிறது
பூமிக்கு உன்னை அழைத்துச் செல்!

என் மீது ஏறிக்கொண்டு கண்களை மூடிக்கொள்!
அவன் அந்த அதி சயக்குதிரையின் மீது ஏறியதும் அது வானவீதியில் கோலாகலமாகப் பறக்கத் தொடங் கியது....
காற்றில் பறந்துகொண்டிருந்த குதிரை நொடிப்பொழுதில் தன் நாட்டில் வந்திறங்கியதை வளவன் கண்டான்.
நாட்டு அமைச்சரைக்கண்டு
நான் அடுத்த நாட்டு இள வரசன். இந்நாட்டு அரசரை காண விரும்புகிறேன்!
அவன் அரசவையில் நுழைந்ததுமே, இளைய அரச குமாரி வருத்தத்தோடு விளங்குவதைக் கண்டான்...
கூடவந்த வஞ்சகனிடம்...
நீங்கள்தான் இவர்களை அரக்கர்களிடமிருந்து மீட்டீர்களோ?
ஆம்! நான்தான்!


ஆனால் அரசகுமாரி வளவனை அடையாளம் கண்டு கொண்டு விடுகிறாள் . . .
அப்படியானால் என்னை உயரே தூக்கிச் செல்ல முடியுமா?
அத்தான்! நீங்களா?
வஞ்சகன் நடுங்கி நிற்க . . .
வஞ்சகனே! யாரிடம் கதை விடுகிறாய்?
வளவன், அவனைத் தூக்கி அகழியில் எறிகிறான் . . .
அதே சமயத்தில் அரசன் உள் பட அனைவரும் வளவனை அடையாளம் கண்டு கொண்டனர் . .
கிள்ளி அவனிடம்
நான், மயங்கிக் கோழையாகி விட்டேன்! மன்னித்து விடு!
அதுவும் நன்மைக்குத் தான்! வருந்தாதே!
கிள்ளியும், வளவனும் அரசகுமாரிகள் இருவரையும் முறையே மணந்து வெகு காலம் இன்பமாக வாழ்ந்தார்கள்!
சுபம்



ஸ்ரீரங்கப் பட்டணம்

என். ராமகிருஷ்ணா



மைசூரிலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ளது ஸ்ரீரங்கப்பட்டணம். இங்கே காவிரி நதி இரு கிளைகளாகப் பிரிந்து மறுபடியும் ஒன்று சேர்கிறது; அவற்றின் நடுவில் ஒரு தீவுபோல் ஸ்ரீரங்கப்பட்டணம் அமைந்திருக்கிறது. இங்கேயும் ஓர் அழகான ஸ்ரீரங்கநாதர் கோயில் உள்ளது. அதனால்தான் இவ்வூரும் ஸ்ரீரங்கப் பட்டணம் என்று பெயர் பெற்றது போலும்! மிகப் புராதனமான இந்தக் கோவிலைக் கௌதம முனிவர் வழிபட்டதாகக் கூறப்படுகிறது. இது கி. பி. 874-ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. ஸ்ரீ ராமானுஜர் ஹொய்சாள வம்சத்து அரசர்களிடமிருந்து இந்தத் தீவையும் மற்றும் சுற்றுப்புறமுள்ள நிலத்தையும் இந்தக் கோவிலுக்கு மானியமாகப் பெற்றார். மேலும் விஜயநகர அரசர்களும் மைசூர் அரசர்களும் அவ்வப்பொழுது

★

ஸ்ரீரங்கநாதர் ஆலயம்





1. தரியா தௌலத் பாக்.

2. அதன் சாளரம்.

3. காவிரி.





விதானச் சித்திரம்

இந்தக் கோவிலைச் சிறந்த முறையில் புதுப்பித்துள்ளார்கள். இங்கே பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதரையும் அவர் பாதத்தில் கௌதம முனிவரையும் நாம் காண்கிறோம். இது ஆதிரங்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கப்பட்டணத்தைச் சிறப்பித்து அழகாக உருவாக்கியவர்கள் ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் ஆகும். ஹைதர் அலி மைசூர்ப் படையில் முதலில் சாதாரணப் படை வீரனாக இருந்து, தன்னுடைய தைரியத்தினாலும் விடாமுயற்சியாலும் மதிநுட்பத்தினாலும் முன்னேறிப் படைத் தலைவன் ஆனான். 1767-ஆம் ஆண்டு மைசூர் அரசரைச் சிறைப் பிடித்து, நாட்டையும் கைப்பற்றினான்.

1782 - ஆம் ஆண்டு ஹைதர் அலி இறந்தவுடன் அவனுடைய மைந்தன் திப்பு சுல்தான் அரசனானான். திப்பு பல தடவைகள் ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினான். கடைசியில் 1799- ஆம் ஆண்டுச் சண்டையில் திப்பு சுல்தான் இறந்தவுடன் மைசூர் ராஜ்யம் மறுபடியும் மைசூர் அரச வம்சத்தினர் கைக்கு வந்தது.

ஸ்ரீரங்கப்பட்டணத்தில் முதன் முதல் நம் கண்ணில் படுவது **ஸ்ரீரங்கநாதர் ஆலயம்**. அங்கிருந்து சிறிது தூரம் சென்றால் **ஹாவிலாண்ட் ஆர்ச்** என்ற 112 அடி



கும்பஸ் சமாதி



ஜும்மா மசூதி

வளைவு கமான் பாலம் இருந்ததாம். அதன்மேல் நின்று ஆடினால் அது ஊஞ்சல்போல் ஆட்டம் கொடுக்கும் என்றும் கூறப்படுகிறது. திப்புசுல்தான் யுத்தத்தில் இறந்து விழுந்த இடத்தில் ஒரு கல் நாட்டியுள்ளார்கள்.

திப்புவால் கட்டப்பட்ட **ஜும்மா மசூதி** இரண்டு பெரிய கோபுரங்களைத் தாங்கி நிற்கிறது.

ஆனால் திப்பு சுல்தானால் கட்டப்பட்ட அழகானதும், சிற்பக்கலையில் சிறந்து விளங்குவதுமான கட்டிடம் திப்புவின் கோடை வாசஸ்தலமான **தரியா தௌலத் பாக்** (Garden wealth of the sea) ஆகும். இங்கே மரத்தால் செய்யப்பட்ட அழகான தூண்களும் வளைவுகளும் மேல் தளமும் நம்மைக் கவர்கின்றன. முகம்மதியச் சிற்பக் கலையில் சிறந்த இவை வர்ண ஜாலங்கள் நிறைந்தவைகளாக இருக்கின்றன. திப்புசுல்தான், ஹைதர் அலி இருவரும் ஆங்கிலேயருடன் செய்த யுத்தக் காட்சிகள் இன்றும் சுவர்களை அலங்கரிக்கின்றன. 1780-இல் காஞ்சீபுரத்தில் கர்னல் பெயிலி தோல்வியுற்ற காட்சி சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. ஹைதர் அலி பிரெஞ்சுத் துருப்புக்களுடன் பவனி வருவதும், பீரங்கி எப்படி வெடிக்க வேண்டும் என்ற காட்சிகளும் தீட்டப்பட்டுள்ளன. திப்புசுல்தான் இறந்த பிறகு, கர்னல் வெல்லெஸ்லி இந்தக் கட்டிடத்தின் சிறப்பை உணர்ந்து அதைப் பாதுகாக்க உத்தரவிட்டார். இந்தக் கட்டிடத்தின் மேல் பலகணியிலிருந்து ஸ்ரீரங்கநாதர் ஆலயத்தைக் காணலாம். ஹைதரும் திப்புவும் இந்த ஆலயத்தைப் பாதுகாத்து வந்ததுடன் மானியமும் வழங்கியுள்ளார்கள்.

திப்புசுல்தான் புஷ்பங்களில் ஆர்வம் கொண்டவர். அதனால் வெளிநாடுகளிலிருந்து பலவிதமான செடிகளைக் கொண்டுவந்து இந்தக் கட்டிடத்தைச் சுற்றி ஒரு பூங்காவை அமைத்திருந்தாராம். அந்தத் திட்டத்தை இன்றும் காணலாம். பக்கத்தில் ஓடும் காவிரி ஆறு பாசனத்திற்கும் அரண்மனைப் பெண்டிர் குளிப்பதற்கும் வசதியாக அமைந்திருந்தது.

இந்தத் தீவின் கீழ்க் கோடியில் **கும்பஸ்** என்ற சமாதி கட்டப்பட்டுள்ளது. இது திப்புசுல்தானால் தன் தந்தைக்கும் தாய்க்கும் கட்டப்பட்டது. திப்புசுல்தான் சமாதியும் இதன் அருகில் உள்ளது. சதுரமான இந்தக் கட்டிடத்தின் மேல் தளத்தின் நடுவில் ஓர் அழகான கோபுரமும் நான்கு மூலைகளிலும் சிறு சிறு கோபுரங்களும் உள்ளன. வழவழப்பான கறுப்புக் கல்லால் கட்டப்பட்டுள்ளது. அதன் பக்கத்தில் ஒரு மசூதி உளது. இதில் மிகப் பெரிய கோபுரங்கள் உள. 1787-இல் இது கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

திப்புசுல்தான் சிறைப் பிடித்த ஆங்கிலேய வீரர்களை அடைத்து வைப்பதற்காக ஓர் இருட்டு அறை **டன்ஜன்ஸ்** (Dungeons) கட்டினான். அதை இன்றும் காணலாம்.

சிரிப்புச் சிறுமி



'குமார்'

இடைய நாடு என்று ஒரு நாடு. அந்த நாட்டிற்கு ஓர் அரசன். அவன் தன் நாட்டு மக்களை ஆட்டு மந்தையாகவே கருதி நடத்தி வந்தான்.

அந்த நாட்டுக் கிராமம் ஒன்றில் ஏழைச் சிறுமி ஒருத்தி வசித்து வந்தாள். அவளுக்கு வயது பத்து அல்லது பன்னிரண்டு இருக்கும். வயதுக்கு மீறிய வளர்ச்சியும் அறிவும் அவளுக்கு இருந்தது. எப்பொழுதும் அவள் சிரித்த முகமாகவே இருப்பாள். சிரிப்பென்றால் சாதாரணச் சிரிப்பல்ல; எதற்கும் குலுங்கக் குலுங்கச் சிரிப்பாள்.

அவரவர்கள் கவலைக் கேற்றாற் போல் மக்கள் முகத்தைத் துக்கமாக வைத்திருப்பதும் அவர்கள் நடுவே இந்த ஏழைச் சிறுமி எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பதும் விந்தையாகத்தான் இருந்தன. பணம் இல்லாதவள் எப்படிச் சிரித்த முகமாக இருக்க முடியும் என்ற கேள்வியே எல்லோரும் கேட்பார்கள்.

அவளுக்கு ஊரார் சிரிப்புச் சிறுமி என்று பெயர் வைத்திருந்தார்கள். மக்களிடம் உள்ள கோணல்களை எல்லாம் பார்த்துச் சிரிப்பாள் சிறுமி. ''ஓய், மனுஷா! என்ன ஐயா, கன்னத்தில் கை? எந்தக் கப்பல், எந்தக் கடலில் மூழ்கி விட்டது!'' என்று சொல்லி விழுந்து விழுந்து சிரிப்பாள்.

இப்படியிருக்க அந்த நாட்டு அரசன் ஊரைச் சுற்றி வரப்போவதாகத் தண்டோரா போடப்பட்டது. மக்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். 'இது என்ன ஆச்சரியம்? நினைவு தெரிந்த நாளாக மன்னன் வெளியிலேயே வந்து யாரும் பார்த்ததில்லையே!' என்று பேசிக்கொண்டார்கள்.

அரசன் அரண்மனையில் அடைந்திருந்த காரணம் அவன் முகத்தோற்றம்தான். அவன் முகத்தில் அப்படி என்ன விநோதம் இருந்ததென்றால் அளவுக்கு மீறிய பெரிய குடை மிளகாய் மூக்குத்தான்! இருபது வருடங்களாக அரண்மனையிலேயே யாருக்கும் மன்னனைப் பார்ப்பதற்கு அனுமதி கிடையாது. மந்திரிகளோ வேறு சிப்பந்திகளோ மன்னனைப் பார்க்க வந்தால் பின்பக்கமாக வந்து போவது வழக்கம்.

தன் மூக்கைப் பார்த்து எவரேனும் சிரித்துவிடுவார்களோ என்ற கவலையோடு உட்கார்ந்திருப்பான். சொல்லப்போனால் தன் மூக்கை அவனே கண்ணாடியில் பார்த்துக்கொண்டதில்லை. அப்படித் தவறி ஏதேனும் கண்ணாடியில் தன் உருவம் தெரிந்து விடப்போகிறதே என்று அரண்மனையிலுள்ள கண்ணாடிகளையெல்

லாம் உடைத்தெறிந்து விடச் சொல்லி விட்டான்.

'இருபது வருஷங்களாக அரண்மனையில் அடைந்து கிடந்தாச்சு. நான்தானே ராஜா! எனக்கேன் அச்சம்? அச்சமில்லே! அச்சமில்லே! அச்சமென்பதில்லேயே!' என்று திடீரென்று உறக்கப் பாடிய வண்ணம், ஒரு நாள் தன் மந்திரிகளைக் கூப்பிட்டான். மந்திரிகள் பின்பக்கமாக வந்தார்கள்.

''மந்திரிகளே! இனிமேல் முன் பக்கமாக நடந்து வாருங்கள்! என்னைப் பார்த்துப் பேசுங்கள்'' என்றான்.

மந்திரிகள் திடுக்கிட்டு அரசன் முகத்தை முதல் தடவையாகப் பார்த்தார்கள். ''நாளைத் தினம் நகர்வலம் வரப் போகிறேன். பல்லக்குகள் ஏற்பாடாகட்டும்!'' என்றான்.

மறுநாள் பட்டணப் பிரவேசம் நடந்தேறியது. மக்கள் திரள் திரளாகக் கூடி நின்று அரசனைக் கண்டனர். அவர்கள் சிரிக்கவில்லே. சிரித்தால் தலை போய் விடாதா?

அதைக் கண்டு, 'பேஷ்! நம் மூக்கு அப்படி ஒன்றும் பெரிதாக இல்லே. நான் வீணுகக் கற்பனை செய்து, கவலைப்பட்டிருக்கிறேன்' என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது ஒரு சிரிப்பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தால், ஒரு சிறுமி!

''சிறைப்படுத்துங்கள் அவளை!'' என்றான் மன்னன்.

''ஹ ஹ் ஹ ஹ் ஹா! சிரிப்புக்குச் சிறையா இந்த நாட்டிலே?'' என்று கேட்டவாறு சிரித்தாள் சிறுமி.

மறுநாள் மன்னன் அந்தச் சிறுமியை அடைத்திருந்த சிறைக்குப் போனான். ''ஏ! சிறுமி! மூக்கைப் பார்த்து நீ சிரித்தாய் அல்லவா..அதுவும் இந்த நாட்டு அரசனின் மூக்கைப் பார்த்து!'' என்றான் ஆவேசமாக.

''மன்னரே; அரசன் மூக்கு, ஆண்டி மூக்கு என்ற வித்தியாசம் பார்த்து ஆராய்வதற்குள் எனக்குச் சிரிப்பு வந்து விடுகிறதே, நான் என்ன செய்வேன்?'' என்று அவள் மீண்டும் சிரித்தாள்.

இதைக் கேட்டு மன்னன் படு கோபம் கொண்டான். ''சிறுமி! நான் உனக்கு விதிக்கப் போகும் தண்டனையைக் கேட்டால் உன் சிரிப்பு நின்று போகும். நாளைக் காலையில் உன்னைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிடப் போகிறேன்'' என்றான்.

''அரசே! சிரச்சேதம் பயங்கரத் தண்டனைதான். ஆனால் அதனால் உங்கள் மூக்கின் நீளம் குறைந்து விடுமா? அதைத் தவிர நான் முதலில் சிரித்தபோது உங்கள் மூக்கைப் பார்த்துச் சிரிக்கவில்லை!'' என்றாள்.

''அப்பொழுது எதை நினைத்துச் சிரித்தாய்?'' என்றான் மன்னன்.

''மன்னரே! இந்த மூக்கைவிடப் பெரிய மூக்கை நான் பார்த்திருக் கிறேன். உங்கள் மூக்கைப் பார்த்த வுடன் அந்த மூக்கு ஞாபகத்திற்கு வந்து, பெரிதாகச் சிரித்தேன்!'' என்றாள் சிறுமி.

அரசன், மனம் சமாதானம் அடைந்தது. இருந்தாலும் தண் டனை தரவேண்டும் என்று நிச்சயம் செய்து கொண்டு, பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினான்.

சேர்ந்து சென்றால் முன்னேறலாம்

போட்டோ: குருமூர்த்தி

''உம்! பார், உன் இரட்டை மண்டையை!'' என்றான் மன்னன்.

சிறுமி ஒரே ஓட்டமாக ஓடி, கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தாள். பார்த்ததுமே 'ஹஹ் ஹா.... இரட்டை மண்டை! ஆமாம், இரட்டை மண்டை! ஹி....ஹி....ஹி.. ரொம்ப வேடிக்கை அரசே! இனிமேல் என் இரட்டை மண்டையே போதும், சிரித்துக் களிக்க!'' என்று பெரிதாகச் சிரித்தாள்.

மன்னன் திகைத்துப் போனான். தோல்வியைக் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்துத் தானும் சிரித்தான்.

''சபாஷ்! சிரியுங்கள்! சிரிப்புத்தான் வெற்றியைத் தரும்'' என்றாள் சிறுமி.

''ஏ, சிறுமி! எனக்கும் சிரிப்புத் தான் வருகிறது. ஹஹ்.. ஹஹ்....ஹஹ்....ஹா. உன் இரட்டை மண்டையைப் பார்த்தால் என் சிரிப்பை என்னால் அடக்க முடியவில்லை!'' என்றான். உடனே ஆட்டு மந்தைபோல் பக்கத்தில் நின்ற மந்திரிகளும் வேலையாட்களும், ''ஆமாம்! ஆமாம்!'' என்று சிரித்தார்கள்.

உடனே சிறுமி, ''யாருக்கு இரட்டை மண்டை? எனக்கா? எங்கே முகம் பார்க்கும் கண்ணாடி கொண்டு வாருங்கள்!'' என்றாள்.

சிப்பந்திகளும் மந்திரிகளும் பேசாமல் நின்றனர்.

''என்ன? ஏன் தயக்கம்? கண்ணாடி கொண்டு வருவதற்கு என்ன? இரட்டை மண்டையை அவளே பார்த்துக்கொள்ளட்டும்! எங்கேயாவது போய்க் கொண்டு வாருங்கள்!''

உடனே வெளியிலிருந்து பெரிய கண்ணாடி ஒன்று கொண்டு வரப் பட்டது.

'தன் குறைகளையும், குற்றங்களையும் கண்டு சிரிக்க இந்தச் சிறுமிக்குத் தெரிந்திருக்கிறதே! பெரியவர்களுக்கும் இது தெரிந்திருந்தால் உலகம் எவ்வளவு இன்பமயமாக இருக்கும்!' என்று எண்ணிய மன்னன் சிறுமியை விடுதலை செய்யும்படி கூறினான்.

''என்ன மன்னரே, எனக்கு விடுதலையா?'' என்றாள் சிறுமி.

''உனக்கு இனி ஏது விடுதலை? இனிமேல் நீ என் பக்கத்திலேயே இருக்க வேண்டும். உன்னைவிட உலகத்தை அறிந்தவர்கள் வேறு யார்?''

சிறுமி சிரித்தாள்.

''அடேய் யாரடா அங்கே? போய், பெரிய நிலைக்கண்ணாடியாகக் கொண்டுவந்து வைக்கச் சொல்!'' என்றான் மன்னன்.'

கண்ணாடி வந்ததும் அவர்கள் இருவரும் தங்கள் குறையை மறந்து, ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

பொய்க்கால் குதிரை

'பூவண்ணன்'

அழகு மிக்க குதிரை—இது
அருமை யான குதிரை.
வண்டி என்றும் இழுத்திடா
வர்ண முள்ள குதிரை;
சண்டித் தனமும் செய்திடாச்
சாது வான குதிரை!
கால்கள் ரெண்டே ரெண்டு;
கவர்ச்சி யதிகம் உண்டு;
வாலைக் கொஞ்சம் ஆட்டும்;
வண்ண முகத்தை நீட்டும்!
ஓட்டப் பந்த யத்தில்
ஓடி டாத குதிரை;
நாட்டி யத்தில் தேர்ந்த
நல்ல ஆட்டக் குதிரை!
பொழுது போக்க ஜோரு,
பொய்க்கால் குதிரை பாரு;
அழகுக் குதிரை வேறு,
அவனி மீதில் ஏது?

கருவண்டு

'ஸரஸ்வதி'

சின்னச் சின்னக் கருவண்டே
சீனு தேசப் பொம்மைபோல்
மின்னும் உடலைப் பெற்றிட்ட
வழியை எனக்குச் சொல்வாயோ?
கன்னங் கரிய கருவண்டே
காணும் மலரில் தேன் மலரைத்
தனியாய்க்கண்டே தேன் பருகும்
தந்திர மெனக்குச் சொல்வாயோ?
மலரைச் சுற்றும் கருவண்டே
மலரில் தேனைப் பருகையிலே
மலருன் காதில் சொல்லிட்ட
சேதி யெனக்குச் சொல்வாயோ?

நினைப்பது தனக்கே

நமக்கெல்லாம் இன்று தீபாவளித் திருநாள்; இதேபோல் காட்டிலும் அன்று தீபாவளி.

தீபாவளி அன்று காலே காட்டுக் கடைத் தெருவெல்லாம் மிருகங்கள் ஏராளமாக வந்திருந்தன. கடைத்தெருவில் அவை பரபரப்பாகத் திரிந்தன.

கடைத் தெருவில் பட்டாசு விற்ற கடைகள் இரண்டே இரண்டு! ஒன்றை நரி நடத்தியது. மற்றதைக் கரடி கவனித்தது.

கரடியின் கடையில்தான் எல்லா மிருகங்களும் வாங்கின. கரடி மிகவும் நல்லது. அதிக லாபம்



எதிர்பார்க்காமல் குறைந்த லாபத்துக்கு விற்றது. கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா?

நரி, கரடிக்கு நேர்மாறானது. அதன் கடைக்கு யாரும் போவதில்லை. வந்தவர்களிடம் 'சிடு சிடு' என்று பேசியது. மட்டமான சரக்கை அநியாயமான விலைக்கு யார் தலையிலாவது கட்டித் துரத்திவிடும். மிருகங்களின் குட்டிகள் வந்தால் கேட்டதைக் கொடுக்காமல் மாற்றிக் கொடுத்து மோசம் செய்யும்.

தீபாவளி வரப் பத்து நாளில் இருந்தே கரடியின் கடையில் பட்டாசுக் கட்டுகள் மத்தாப்புப் போல் விற்றுப் புஸ்வாணங்கள் போல் தீர்ந்தன. அது கொண்டு வந்த சரக்குப் போதாமல் புதிது புதிதாய் வரவழைத்து விற்றது.

நரியின் கடையில் ஈ கூட நுழையவில்லை. பட்டாசுத் தினுசுகள் அப்படியே இருந்தன.



நரியால் பொறுக்க முடியவில்லை. தன் வியாபாரத்திற்குப் போட்டியாக விற்கும் கரடியைத் தொலைத்தால்தான் நரியின் வியாபாரம் உச்சகட்டத்தை அடையும். பத்து நாளாகவே அதன் மூளை யோசித்து யோசித்து வலித்தது. கரடியைத் தொலைப்பது எப்படி?

தீபாவளி அன்று காலை நரி கடையில் உட்கார்ந்திருந்தது. போவார் வருவாரை எல்லாம் அழைத்துப் பார்த்தது. யாரும் வரவில்லை. பட்டாசுகளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டது.

அந்தச் சமயம் கடைத் தெருவில் கரடியின் குட்டி போய்க்கொண்டிருந்தது. போட்டிக்காரனின் குட்டி. நரி அதைப் பார்த்துவிட்டது. உடலைத் தட்டி அதை அருகே வரும்படி அழைத்தது. நரி கரடிக் குட்டியை,

''எங்கே போகிறாய்?'' என்று கேட்டது.

கே.கே.ராமன்

''உன் அப்பா உனக்குப் பட்டாசு கொடுத்தாரா?''- நரி கேட்டது.

''இல்லை. 'வியாபாரம் அடங்கட்டும். வெயில் ஏறின பிறகு வா! நிறையக் கொடுக்கிறேன்' என்று சொன்னார்'' - கரடிக் குட்டி பதில் சொன்னது.

நரி தன் கடையில் இருந்து மகா மட்டமான ஓலைப் பட்டாசு ஒன்றை எடுத்து அதன் கையில் கொடுத்தது.

''இந்தா! நீ போய்க் கொளுத்து. உன் அப்பன் மகா லோபி! பேராசை பிடித்த பாபி! உனக்குப் பட்டாசே கொடுக்கமாட்டான். எல்லாம் விற்றுவிட்டு, 'பட்டாசு தீர்ந்துவிட்டது. அடுத்த தீபாவளிக்குக் கொடுக்கிறேன்' என்று ஏமாற்றிவிடுவான்.''

கரடிக் குட்டி நரியின் பேச்சை ஆவலோடு கேட்டுக்கொண் டிருந்தது

''உனக்கு நிறையப் பட்டாசு வேண்டுமானால், நான் ஒரு யோசனை சொல்கிறேன். கேட்கிறாயா?''

கரடிக் குட்டி தலையாட்டியது, தஞ்சாவூர்ப் பொம்மை போல!

''பட்டாசெல்லாம் விற்பதற்குள் கடைக்குப் போ. அப்பாவுக்குத் தெரியாமல் கடையினுள்ளே போய் விடு. ஒரு குச்சி மத்தாப்பைக் கொளுத்தி, ஒரு பட்டாசுக் கட்டில் வைத்துவிட்டு ஓடி வந்துவிடு! உன் அப்பா உனக்கு நிறையப் பட்டாசுகள் கொடுப்பார்!''

கரடிக் குட்டி அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டது. 'அப்பாவும் இருக்கிறாரே, எதற்கு? இவர் எனக்குப் பட்டாசுகூடக் கொடுத்தார். இன்னும் ரொம்பப் பட்டாசு கிடைக்க யோசனை சொன்னார். நரி மாமா!' என்று நினைத்துக் கொண்டே நடந்தது.

நரி மனத்தில் 'கெக்கே' என்று சிரித்துக்கொண்டது. 'கரடி ஒழிந்



தான். குட்டி செய்யப் போகும் வேடிக்கையில் பட்டாஸ்கடையே புஸ்வாணம் ஆகிவிடும் என்று எண்ணி மகிழ்ந்தது.

கொஞ்சநேரத்தில் நரியின் கடைக்கு அதன் குட்டி வந்தது.

''அப்பா!'' என்று கொஞ்சும் குரலில் நரிக்குட்டி கூப்பிட்டது.

''என்னடா?'' என்று நரி முறைத்தது.

''பட்டாசு!''

வியாபாரம் நடக்காத ஆத்திரத்தில் நரி தன் குட்டியைத் தாவிப் பிடித்துக்கொண்டது. குட்டி கேட்ட பட்டாசு அதன் முதுகில் கிடைத்தது.

நரிக் குட்டி 'லபோ லபோ' என்று வாயில் அடித்துக்கொண்டு ஓடியது.

நரியிடம் யோசனை பெற்ற கரடிக் குட்டி அப்பாவின் கடை எதிரில் போய் நின்றது. 'அப்பா பட்டாசு கொடுக்கவில்லையானல் நரி மாமா சொன்ன யோசனைப்படி செய்ய வேண்டியதுதான்' என்று அது நினைத்தது.

கரடி தன் குட்டியைப் பார்த்துவிட்டது. குட்டியை அழைத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டது. வியாபாரச் சிரமம் ஒருவாறு அடங்கி இருந்தது. கரடி தன் குட்டிக்காக நிறையப் பட்டாசுகள் எடுத்து வைத்திருந்தது. அவற்றை ஒரு பையில் போட்டுக் குட்டியிடம் கொடுத்தது. வீட்டுக்குப் போய்க் கொளுத்தச் சொன்னது கரடி.

"அம்மா! எனக்கு இந்த முறுக்கு வேண்டாம்! மாப்பிள்ளை முறுக்குத்தான் வேணும்!"

கரடிக் குட்டிக்குத் தலைகால் புரியாத ஆனந்தம்.

கரடிக்குட்டி; பையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடியது. தன் தெருவில் நின்றுகொண்டு பட்டாசுகளைக் கொளுத்திக்கொண்டே இருந்தது. தெருவிலிருந்த எல்லா மிருகக் குட்டிகளும் கூடி வேடிக்கை பார்த்தன.

அப்போது, அங்கே நரிக் குட்டி அழுதுகொண்டே வந்து நின்றது. நரிக் குட்டியும் கரடிக் குட்டியும் நண்பர்கள். நரிக் குட்டி அழுதால் கரடிக் குட்டி பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா?

கரடிக் குட்டி தன் நண்பனுக்கு நிறையப் பட்டாசுகள் கொடுத்தது. நரிக் குட்டி எதற்காக அழுகிறது என்று கேட்டது.

"அப்பாவைப் பட்டாசு கேட்டேன். அடித்துத் துரத்தி விட்டார்" என்றது.

கரடிக் குட்டி யோசித்தது; கொஞ்ச நேரம்தான்! நரி மாமா சொன்ன நல்ல யோசனையை நரிக் குட்டிக்கே சொல்லி வைத்தது.

"ரொம்பப் பட்டாசு கிடைக்குமா?"

"ஆமாம்! இந்த யோசனையை உங்கப்பாதான் சொன்னார்."

பிறகு என்ன? நரிக் குட்டி அங்கே நிற்குமா?

நரிக்குட்டி தன் அப்பாவின் எதிரில் போய் நின்றது. "என்னடா!" என்று நரி அதட்டியது.

"ஒண்ணுமில்லே!" என்று சொல்லி விட்டுத் தயங்கி நின்றது. நரி கொஞ்சம் அயர்ந்தது. மெல்ல மெல்ல நரிக் குட்டி கடையின் உள்ளே போய்ச் சேர்ந்தது.

நரி கடைக்கு வரும் கிராக்கியை எதிர்பார்த்துக் கடைத் தெருவையே நோக்கிக்கொண்டிருந்தது. நரிக் குட்டிக்கு நல்ல சமயம் வாய்த்தது. அதை நழுவ விடுமா?

நரிக் குட்டி ஒரு குச்சி மத்தாப்பைக் கொளுத்தியது. யானை வெடிக்கட்டில் அதைப் போட்டது. 'டுமீல்' என்று ஒரு வெடி வெடித்தது. நரிக் குட்டி பயந்து போய் வெளியே ஓடி வந்தது.

நரி துள்ளிக் குதித்து எழுந்தது.

"பட்..படபட பட பட.. பட..பட்..பட்.."

பட்டாசுகள் எல்லாவற்றிலும் தீப் பிடித்துக்கொண்டது. நரி விழித்தது. நெருப்பு எவ்வாறு வந்திருக்கும்?

நரியால் உள்ளே ஓடித் தீயை அணைக்க முடியவில்லை. நரிக் குட்டி தந்தையை நெருங்கியது.

"அப்பா! பட்டாசு கொடுப்பா! கரடிக் குட்டிக்குச் சொல்லிக் கொடுத்த யோசனையை அது செய்யவில்லை. நம்ப கடையிலே நான்தான் செய்தேன்."

நரிக்கு எப்படி இருக்கும்? அது குட்டியைப் பிடித்துக்கொண்டது. குட்டி நடுங்கியது. இரண்டாம் முறை நரிக் குட்டியின் முதுகில் பட்டாசுகள் வெடித்தன.

எப்படியோ நரிக் குட்டி தந்தையின் பிடியிலிருந்து தப்பி ஓடி உயிர் பிழைத்தது.

நரியின் கடையின் முன்னால் கடைத் தெருவே கூடிவிட்டது. எவராலும் தீயை நெருங்கவோ, அணைக்கவோ முடியவில்லை.

"நினைத்த கேடு எனக்கே வந்து நேர்ந்ததே!"

நரி தலையில் அடித்துக்கொண்டு, நடுத் தெருவில் உட்கார்ந்து கொண்டது.

பட்டாசுகள் வெடித்துக் கொண்டே இருந்தன.

வீரப்பதக்கம்

அந்தத் தெரு வழியாக ஐந்தாறு முரட்டு ஆசாமிகள் விழுந்தடித்துக்கொண்டு ஓடினர்கள். பெருமாள் கோயில் மண்டபத்திலே சரமாரியாக எழும்பிக்கொண்டிருந்த கேள்விகள் சரேலென்று 'பிரேக்' போட்டமாதிரி நின்றன.

இயற்கையாக அக்கப்போர்களில் அக்கறை கொண்டவன் தென்னரங்கம். தெருவிலே அப்படி அவசரமாக ஓடியவர்களைப் பார்த்த பிறகு அவனுக்கு அங்கே இருப்புக் கொள்ளுமா? பரீட்சையைப் பற்றிய நினைப்புப் பறந்தது. அதில் அவன் வாங்கிய ஒன்றை இலக்க மார்க்கைப் பற்றிய கவலை மறந்தது.

மண்டபத்திலிருந்த மற்ற மாணவர்களிடம் சொல்லிக்கொள்ளாமல் துள்ளிக் குதித்து அம்புபோல் பாய்ந்தோடினன் அவன்.



'ஆமாம்; அதோ அந்தத் தெருக்கோடியில் ஏன் இவ்வளவு பெரிய கும்பல்?'

விசாரிக்க விரைந்த தென்னரங்கம், கும்பலின் விளிம்பு வரையில் போய்விட்டான்.

போன பிறகும் அவனுக்கு என்ன, ஏது என்று தலைகால் புரியவில்லை. ஆனல் அங்கு அடிபட்டுக்கொண்டிருந்த பேச்சு வார்த்தைகளும், சந்தடியும் ஏதோ பெரிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதைமட்டில் காட்டின.

தலைக்குத் தலை கூச்சல் போட்டார்கள். அந்த இரைச்சலைக் கேட்டு, சாலையோடு போகிறவர்கள் கூட வந்து சூழ்ந்துகொண்டார்கள்.

''கயிறு கொண்டு வந்தாச்சா? ஜல்தி! சீக்கிரம்!'' என்று உரக்க ஒரு குரல் கேட்டது.

கூட்டத்திலே ஒரு பகுதியிலிருந்து இரண்டு ஆசாமிகள் நெருக்கித் தள்ளிக்கொண்டு

வெளியே வந்தார்கள். போலீசைக் கூட்டிவரப் போவதாக அவர்கள் வழியிலே கேட்டவர்களிடம் பதில் சொன்னார்கள்.

இவற்றையெல்லாம் கேட்கக் கேட்கத் தென்னரங்கத்துக்கு உள்ளமும் உடலும் துடி துடித்தன. பேச அதுவா சமயம்? நடப்பது நடக்கட்டும் என்ற உறுதியோடு வண்டைப்போல் கூட்டத்தைக் குடைந்துகொண்டு உள்ளே ஊடுருவினான்.

''அட சனியனே! நீ ஏண்டா அங்கே ஓடறே! அந்த முட்டாள் தான் கண் மண் பாராமல் போய் மாட்டிண்டு உசிருக்கே மன்றாடிக் கொண்டு தவிக்கிறானே; அது போதாதோ!'' என்று ஒரு பெரியவர் அவனைத் தடுத்தார். தென்னரங்கம் காதில் அந்தப் பேச்சு விழுந்தால்தானே? கிழவர், பேச்சிலிருந்து யாரோ ஒருவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் அவன் தெரிந்துகொண்டான்.

தென்னரங்கத்துக்குச் சிலிர்த்துக் கொடுத்தது. நெஞ்சு பதைபதைக்க, மார்பு 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. கூட்டத்தினரின் இடிகள், தள்ளல்கள் எதையுமே சட்டை செய்யாமல் ஒரே மூச்சில் உள்ளே பாய்ந்து சென்றான்.

சுற்றுமுற்றும் ஒரு தரம் பார்த்தான். சிவப்பு நிறக் காற்றாடி ஒன்று கண்ணில் பட்டது. ''மாஞ்சா'' கறுப்பு நூலுடன் அந்தக் காற்றாடி கைப்பிடிச் சுவரில் சிக்கிக்கொண்டு அந்த இடத்திலேயே காற்றில் கர்ணமடித்துக்கொண்டிருந்தது.

தென்னரங்கத்தின் மூளைக்கு விஷயம் எட்டிவிட்டது. காற்றாடியை வான வீதியில் பறக்கச் செய்ய யாரோ முயன்றபோது இப்படிப்பட்ட விபத்து நேரிட்டிருக்க வேண்டும். அதில் சந்தேகமேயில்லை என்று அவன் ஊகித்துக் கொண்டுவிட்டான். அவன் பறக்க விடாத காற்றாடியா? எங்கெங்கேயோ விழுந்து எழுந்தவனாயிற்றே!

தென்னரங்கம் குபீரென்று கைப்பிடிச் சுவரில்கூடக் கால் பாவாமல் கேணியில் குதித்தேவிட்டான்! உடனே கூட்டத்திலேயிருந்து வானமே இடிந்து விழுந்துவிட்டது போல் கூக் குரல்கள் எழுந்தன.

அத்தனை பேரும் வெலவெலத்துப் போய்விட்டார்கள்!

பாய்ந்த இன்னொர் உயிரின் கதி என்னாகுமோ, ஏதாகுமோ என்ற ஏக்கத்தோடு, சிலர் கேணியை எட்டி எட்டிப் பார்த்தார்கள்.

''கண, கண, கண,'' என்று இடைவிடாத மணி ஓசை கேட்டது.

''அதோ! அதோ! வந்துவிட்டது பயர் சர்விஸ்! வழி விடுங்கள். வழிவிடுங்கள்!'' என்று கெடுபிடி செய்தனர் சிலர்.

தீத் தடுப்புப் படையினர் என்ன, ஏது என்று சிலரிடம் விசாரித்தார்கள். படை அதிகாரியிடம் ஓர் அனுதாபி முறையிட்டார்.

''ஓகோ! ஐ ஸீ! யூ பீப்பிள் கம் ஆன் க்விக்லி! கயிற்றைப் பிரிச்சு

உள்ளேவிடு! வாட் யூ ஜான்! நீ போய் அந்தப் பக்கத்திலேயிருந்து 60 அடி ஏணியை மெதுவாக உள்ளே இறக்கு! க்விக்! க்விக்!'' என்று ஆபீஸர் அவசர உத்தரவுகளைப் போட்டுக்கொண்டிருந்தார். போலீஸிலிருந்து சர்க்கிள், சப்-இன்ஸ்பெக்டர்கள் ஒரு ''ஜீப்''பில் வந்து இறங்கினார்கள் அங்கே. ஒரு லாரி நிறையக் கான்ஸ்டேபில்களும் மந்தையாக வந்து வண்டியிலிருந்து குதித்தார்கள்.

தீத் தடுப்புப் படை, கேணியில் தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. ஒருவர் கயிற்றைச் சுருக்குப் போட்டுக் காலில் அதை மாட்டி இறுக்கி கட்டிக்கொண்டு கால்கள் மேலேயும், தலை கீழேயுமாகத் தொங்கியபடி தம்மைக் கேணியில் தொங்கவிடச் சொன்னார். இவர் ஜல மட்டத்தில்

கையை விட்டுப் பரக்கப் பரக்கத் துழாவினர்.

தண்ணீர் மட்டத்திற்குச் சற்று மேலோடு ஒரு தலை தட்டுப்பட்டது. இருட்டாக இருந்ததால் அடையாளம் புரியவில்லை. தட்டுப்பட்டது ஒரு கிராப்புத் தலை. கையால் கெட்டியாகப் பிடிக்க முடியாமலிருக்கவே, கைகளால் துழாவிய சேவகர் இன்னும் கொஞ்சம் உள்ளே கையை அழுத்தி தட்டுப்பட்ட தலைக்கு அடியில் இருந்த வெள்ளை ஷர்ட்டை அலக்காக லாவிச் சேர்த்துப் பிடித்துத் தூக்கினர். முண்டி முண்டி அவர் மேலே இழுக்கவே ஜல மட்டத்தில் இன்னொரு கிராப்புத் தலையும் தட்டுப்பட்டு உயர்ந்து வந்தது.

தலை கீழாகத் தொங்கி ஆடிய அந்தச் சேவகர், எப்படி இரண்டு நபர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு தாமும் கரை ஏற முடியும்? ஆகவே அவர் தம் வாயில் கவ்விக்கொண் டிருந்த 'விஸி'லை உரக்க ஊதி, கேணிக்கரையிலிருந்த மற்றவர்களைக் கயிற்றை மேலே பலமாக இழுக்கும்படி ஒரு கையால் சைகை காட்டினர். இந்தக் காட்சியைப் பார்க்கவே பயமாயிருந்தது பலருக்கு.

கேணி கைப் பிடிச் சுவரில் தயாராக நின்ற படையினர் மளமளவென்று முழுப் பலத்தோடு கயிற்றை மேலே இழுத்தார்கள். தலை கீழாகத் தொங்கிய சேவகர் முதலிலும், வெள்ளை ஷர்ட்டோடிருந்த கிராப் தலை உருவம் அடுத்தபடியாகவும், அந்த உருவம் சேர்த்துப் பின்னிக் கொண்டு கால்களுக்கிடையில் தலை மாட்டியவாறிருந்த காக்கி நிஜார் உருவம் மூன்ருவதாகவும் ஊசலாடியபடி மொத்தம் மூன்று உருவங்கள் கரை ஏற்றப்பட்டன. எங்கும் ஒரே சலசலப்பு; பரபரப்பு.

லாரியிலே வந்து இறங்கியிருந்த போலீஸ்காரர்கள், ஜனங்களை ஒதுக்கி, ஒழுங்கை நிலைநாட்டுவதில் முனைந்தார்கள்.

''அடாடா! அவன் தாண்டா? அதோ அந்தப் பையன்தான் துணிச்சலாக் கிணத்துலே குதிச்சவன்!'' என்று கூட்டத்திலிருந்தவர்கள் ஒருவருக்கொருவர் காக்கி நிஜார் உருவத்தைச் சுட்டிச் சுட்டிக் காட்டினர்கள்.

''அதென்ன ஐயா பேச்சு மூச்சே காணோம்? இரண்டுமே தீர்ந்து போயிருக்கும் போலிருக்கே!'' என்று பழைய சாகுருவி துக்கிரிக் குரலில் கூறியது.

வரலட்சுமி பூஜை

தீத்தடுப்பு சேவகர்கள் கரை மீட்கப்பட்டவர்களுக்கு உயிரூட்ட, முதலுதவிகளைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

பார வண்டிச் சக்கரங்கள் இரண்டை எங்கிருந்தோ கொண்டு வந்துவிட்டார்கள். காக்கி நிஜார் தரித்திருந்த பையனை ஒன்றிலும், வெள்ளை ஷர்ட் பையனை இன்னொன்றிலுமாகக் கிடத்தினார்கள். இரு சக்கரங்களையும் வெகு வேகமாகச் சுழற்றிவிட்டு எல்லாரும் உன்னிப்பாக, சுழன்றுகொண்டிருந்த உருவங்களையே உற்றுப் பார்த்தபடி நின்றார்கள்.

இரண்டு பையன்களின் வாயிலிருந்தும் குடம் குடமாக உள்ளே போயிருந்த தண்ணீர் வெளிவந்து கொட்டிக்கொண்டிருந்தது. சக்கரத்தின் சுழற்சி வேகமும் மட்டுப்பட ஆரம்பித்து, கடைசியில் நின்றது. பையன்களுக்குச் சூடாக பானங்கள் கொண்டுவர ஆள் விடப்பட்டது.

'வெள்ளை ஷர்ட்' கண்ணைத் திறந்து திறந்து மூடியது. காக்கி நிஜார் அணிந்த உருவமோ கண்ணையே திறக்கக் காணோம். மார்பைத் தொட்டுப் பார்த்தார்கள். 'படக், படக்' என்று இதயம் ஓடிக்கொண்டிருந்தது. சற்று நம்பிக்கை பிறந்தது. இந்தச் சமயத்தில் டாக்டர்களும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். இரண்டு பிள்ளைகளையும் அவர்கள் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கவனமாகச் சோதனை செய்தார்கள். ''இரண்டு பேருக்கும் அதிர்ச்சி மிக அதிகம்; அடி சொற்பம். ஆனால் ஒருவனுக்கு, அதாவது காக்கி நிஜார்ப் பையனுக்கு எலும்பு ஒன்றிரண்டு முறிந்திருக்கலாம் என்று சந்தேகம்'' என்று டாக்டர்கள் கூறினார்கள்.

ஆம்புலன்ஸ் தயாராகிப் புறப்பட்டுவிட்டது. 'வெள்ளை ஷர்ட்' பையனை வீட்டுக்கு அனுப்பி, 'காக்கி நிஜார்' பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள்.

வெள்ளை ஷர்ட் பையனின் பெயர் வேணு. அந்தக் கிணற்றின் கைப்பிடிச் சுவரில் ஏறி நின்றுகொண்டு, காற்றாடி பறக்கவிட்டிருக்கிறான். சொடுக்கிச் சொடுக்கி அதை மேலே ஏற்றிப் பறக்கவிடும் உற்சாகத்தில், நின்ற இடம் மறந்து நிலை தவறி, 'தடால்' என்ற ஓசையுடன் கேணிக்குள் விழுந்திருக்கிறான். சத்தம் கேட்டு இரண்டொருவர் கூச்சலிட்டுக்கொண்டு அங்கே போனார்கள். இதற்குப் பின்

எனக்குத்தான் ஆரத்திப் பணம்!



போட்டோ: என். ராமகிருஷ்ணா.

''பாம்பு வாணம் என்னத் துக்கடா உனக்கு? இத்தையே எடுத்துக்கோயேன்!''

தான் அங்கு அவ்வளவு பெரிய கூட்டம் சேர்ந்திருக்கிறது.

கும்பல் சேர்ந்து என்ன பிரயோசனம்? கூச்சல் போட்டார்களே ஒழிய, எதுவும் செய்யத் தோன்ருமல் வெறும் வாய்ப்பந்தல் போட்டு, வம்புதான் அளந்துகொண் டிருந்தார்கள்.

தென்னரங்கத்துக்கோ ரொம்பச் சின்ன வயசு. இன்றைக்கெல்லாம் இருந்தால் அவனுக்குப் பதினுலு வயசுக்குமேல் இராது. அடேயப்பா! அவனுக்குத்தான் என்ன துணிச்சல்! நெஞ்சுரம்! தன்னுடைய உசிரையே அவன் துரும்பாக அல்லவா எண்ணி அந்தக் கேணியில் பாய்ந்துவிட்டான்!

நீச்சலடிக்கத் தெரிந்தவனுயினும் தென்னரங்கம் கிணற்றில் விழுந்து மூழ்கி மூழ்கித் தத்தளித்தான். உள்ளே முதலில் விழுந்திருந்த உயிருக்கு ஆபத்து நேரவில்லை நல்ல காலமாக. மனசிலிருந்த வேகத்தால் அவனுக்குப் பயம் தெரியவில்லை. வெள்ளை ஷர்ட் போட்ட பையனுக்கு அடியில் தன் தலையைக் கொடுத்து நெம்பி தானும் மேலே எழும்பினன். இது அவனுக்கு மிக மிகக் கஷ்டமான காரியமாயிருந்தும் எப்படியோ சமாளித்துக் கொண்டான். கேணியில் நீட்டிக் கொண்டிருந்த ஓர் ஓரக் கல்லில் காலை ஊன்றிக்கொண்டான். அது வழுக்கிவிட் டிருக்கிறது. மறுபடியும் அவன் தலை ஜலத்துக்குள் மூழ்கியது. வெள்ளை ஷர்ட் பையன் தலை நீர் மட்டத்துக்கு மேலேயே தான் இருந்தது. மூழ்கி மூழ்கி ஏராளமாகத் தண்ணீரைக் குடித்து விட்டான் தென்னரங்கம். இன்னும் கொஞ்ச நாழி உதவி வந்திரா விட்டால் இரு உயிர்களும் நிச்சயம் போயிருக்கும். இரு பிள்ளைகளும் பின்னல் தந்த வாக்குமூலத்திலிருந்துதான் முழு விவரமும் தெரிந்தது.

தென்னரங்கத்தின் சமயோசித புத்தியையும், தீரத்தையும் தீத் தடுப்புப் படையும், போலீஸும் மட்டும்தானு புகழ்ந்து கொண்டாடின? வெறுமனே கொண்டாடியதோடு அவர்கள் நின்றுவிடவில்லை. சில நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டார்கள்.

இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் கதவைத் தட்டினுர்கள்.

என்னவோ, ஏதோ என்று பதறிக்கொண்டு தென்னரங்கத்தின் அப்பா கதவைத் திறந்து போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து மலங்க மலங்க விழித்தார்.

''நீங்கதானே தென்னரங்கத்தின் பாதர்?'' என்ருர் சர்க்கிள்.

'கன்கிராஜுலேஷன்ஸ்! எங்களுக்கெல்லாம் மிக்க சந்தோஷம்! உங்க பையனுடைய வீரம், சமயோசித புத்தியைப் பாராட்டி இந்த வருஷம் அவனுக்குச் சர்க்கார் **'வீரப் பதக்கம்'** தரப் போகிருர்கள். அடுத்த முதல் தேதி சர்க்கார் மாளிகையில் நடக்கும் விழாவுக்கு, நீங்களும் அவனை அழைத்து வந்து பதக்கத்தைப் பெற்றுப் போக வேண்டும். வணக்கம்'' என்ருர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

ஆனந்த அதிர்ச்சியால் பெற்ருேரும், தென்னரங்கமும் திகைத்து நின்றனர் ஆம்; அந்தப் பையன்கள் இருவரும் நனருகக் குணமடைந்துவிட்டார்கள்.

சித்திரக் கட்டம்

க. திருநாவுக்கரசு



மேல் பாதியில் படங்களைப் பார்த்து இடமிருந்து வலமுள்ள கட்டங் நிரப்புங்கள். பிறகு கீழே உள்ள படங்களைக் கொண்டு மேலிருந்து கீழே வரும் கட்டங்களைச் சரியாகப் பார்த்துப் பூர்த்தி செய்யுங்கள்.

விடை: 128-ஆம் பக்கம்.





போட்டோ க்விஸ்





இந்தப் பக்கங்களில் 12 படங்கள் இருக்கின்றன. இவற்றைப் பார்த்து, ஒவ்வொன்றும் எதனுடைய புகைப்படம் என்று கண்டுபிடிக்க







வேண்டும். யார் எல்லாவற்றையும் சரியாகச் சொல்கிருர்களோ, அவர்கள்தான் கெட்டிக்காரரர்கள், போட்டோ: புஷ்பத்துறை_சுப்பிரமணியம்.


9

10


11


12

சைக்கிளிலே வேகமாகப் பறந்துகொண்டிருந்தான் வேணுகோபால். அவன் சிந்தனை அனைத்தும் நாளை ஆரம்பமாகப்போகும் புதிய நாடகத்தைப் பற்றியே இருந்தது. புதிய நாடகத்தில் தான் ஏற்றிருக்கும் முக்கிய பாத்திரத்தைப் பற்றியும் அதில் எப்படியெல்லாம் தான் நடிக்க வேண்டுமென்றும் யோசித்துக்கொண்டே சென்றதில் சூழ்நிலையையே மறந்துவிட்டான்.

திடீரென்று எதிரே மோட்டாரின் 'பிரேக்' அழுத்தப்படும் 'கிரீச்' சத்தம் கேட்கவே சுய நினைவடைந்தான் வேணு. அவனும் தன்னால் முடிந்த மட்டும் பிரேக்கை அழுத்தி, அதனால் 'டான்ஸ்' ஆடத் தொடங்கிய தன் சைக்கிளை ஒரு மாதிரியாகச் சமாளித்துக்கொண்டு கீழே குதித்தான். அதே சமயம் அவன் எதிரே நிறுத்தப்பட்ட காரிலிருந்து வாட்ட சாட்டமான - நாகரிகமான - ஓர் ஆசாமி இறங்கினான்.

எதிரே நின்ற ஆளைப் பார்த்ததும் 'அசந்து' போனான் வேணு. ஆத்திரத்தில் ஏதோ பேச வாயைத் திறந்த வேணுவின் வாயிலிருந்து வார்த்தையே வரவில்லை; முகம் பேயறைந்ததுபோல் ஆகியது.

எதிரே நின்றவன் சிரித்தான்.

''என்ன வேணு! ஒரு வாரமா இந்தப் பட்டணத்தையே சல்லடை போட்டுச் சலிக்கிறேன். உன்னைக் கண்டு பிடிக்கவே முடியவில்லையே! நல்ல வேளை இன்று அகப்பட்டாய். உம்.. இப்போ 'தொழில்' செய்கிறாயா?.. சுமாரா நடக்குதா?'' என்று பேசிக்கொண்டே போனான் அவன்.

''இங்கே, பாரு கந்தசாமி! 'தொழில்' எல்லாம் நான் இப்போ செய்கிறதில்லே. இப்போ கௌரவமா காலந்தள்ளிக்கிட்டிருக்கேன். நேரமாச்சு..''

''ஓகோ! கௌரவமா இருக்கியா.. இரு. நான் இத்தனை நாளா பம்பாயிலே இருந்தேன். வந்து ஒரு வாரமாச்சு. கையிலே கொஞ்சம்

பணத்தட்டு. நீ பழைய நண்பனுச்சே..நிச்சயமா ஒத்தாசை செய்வேன்னு தான் உன்னைத் தேடிக்கிட்டிருந்தேன். நடு ரோட்டிலே பேச வேண்டாம். வா அந்தப் பார்க்குக்குப் போவோம்'' என்று கூறிவிட்டு, சிறிது தூரத்திலிருந்த பார்க்கை நோக்கி நடந்தான் கந்தசாமி. சிறிதும் இஷ்டமில்லாதிருந்தும் அவனைத் தட்ட முடியாத பயம் காரணமாக அவனோடு சென்றான் வேணுகோபால்.

''இங்கே ஒருவருமில்லே.. தாராளமாகப் பேசலாம். உங்கிட்டே உண்மையைச் சொல்றேன். ஒரு கேசிலே..'உள்ளே' போயிட்டு, திரும்பிவந்து ஒரு வாரமாகுது. மறுபடி 'முதல்' ஏற்பாடு செய்யறவரைக்கும் எனக்குப் பணம் தேவை. ஒரு ஆயிரம் இருந்தாப் போதும்.''

''நான் தான் சொன்னேனே.. 'தொழிலுக்கெல்லாம்' முழுக்குப் போட்டுப் பல வருடங்களாகிவிட்டன . . . கௌரவமாப் பிழைக்கிறவங்க கிட்டே ஆயிரமும் இரண்டாயிரமும் ஏது?''

''வேணு, சும்மா 'கப்ஸா' விடாதே! எனக்கு மட்டும் என்ன..ஆளைப் பார்த்தா ஏதாவது குறையாத்தோணுதா? டாக்ஸியிலே தானே வந்தேன்? கௌரவமாம்!.... அதுக்கு என்ன அர்த்தம்?..அது கிடக்கு .... நீ இப்போ கொடுத்தே ஆகணும்..''

''எங்கிட்டே இருந்தாத் தானே..''

''எப்படியோ, எனக்குத் தெரியாது..பணம் வரணும்.. இல்லே..''

வேணுவுக்குப் பயத்தால் உடம்பு ஒரு முறை நடுங்கியது. கந்தசாமியைப் பற்றிய பழைய எண்ணங்கள் அவன் மனத்திரையில் மளமளவென ஓடின.



அரைகுறைப் படிப்புப் படித்துவிட்டுக் கிராமத்திலிருந்த வேணு வேலை தேடிப் பட்டணம் வந்தான். தெரிந்தவர்கள் யாருமே இல்லை அவனுக்கு. கையிலிருந்த சில்லறைக்குச் சோற்றைத் தின்றுவிட்டு, பக்கத்திலிருந்த பார்க் பெஞ்சியிலே படுத்துக்கொண்டான் வெயிலுக்காக. கையிலிருந்ததோ அன்றோடு தீர்ந்துவிடும். நாளை என்ன செய்வது? யோசித்துக்கொண்டேயிருந்தான் அவன். பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் கந்தசாமி. ஆள் இப்பொழுதிருப்பது போலவேதான் அப்பொழுதுமிருந்தான். டீக்கான ' உடை, வாயிலே சிகரெட், ஏதோ பெரிய ஆபீஸிலே வேலை பார்ப்பவன்போலத் தோற்றமளித்தான்.

கந்தசாமி வேணுவைப் பார்த்தான். மெல்ல மெல்ல விசாரித்து

அவன் கதை பூராவும் தெரிந்து கொண்டான். அவனைப்போல் அரைகுறைப் படிப்புக்காரர்களுக்கு வேலை கிடைக்காதென்றும் மூட்டை தூக்கவோ, வண்டியிழுக்கவோதான் போக வேண்டுமென்றும் கூறிப் பயமுறுத்தினான். பிறகு 'அபயம்' கொடுப்பவன்போல் தான் ஒரு 'கௌரவமான' வேலைக்கு ஏற்பாடு செய்வதாக உறுதி கூறினான். தன் கூடவே அழைத்துச் சென்று ஓர் அறையை வாடகைக்குப் பிடித்தான். அதில் அவனை இருக்கச்செய்து உணவுக்குப் பண உதவி செய்தான். பளபளப்பான புது உடைகள் வாங்கிக் கொடுத்தான்.

மெல்ல கொஞ்சம், கொஞ்சமாக அவனை வசப்படுத்தித் தன் 'தொழிலில்' ஒரு உறுப்பினனாக ஆக்கிக் கொண்டான் கந்தசாமி. வேணுவுக்குச் சிறிதும் இஷ்டமில்லை. அதுவும் அவர்கள் தொழில் 'பிக் பாக்கெட்' அடிப்பதும் திருடுவதும் தான் என்பது தெரிந்த பிறகு அவன் பிடியிலிருந்து விடுபடவே முயற்சித்தான்; முடியவில்லை. வேறு வழியின்றி அதிலேயே உழன்று கொண்டிருந்தான். பல சமயங்களில் மயிரிழையில் மாட்டிக் கொள்ளாமல் தப்பியிருக்கிறான் அவன். கந்தசாமி பெரிய ஆள். எப்பொழுதும் அவனிடம் ஒரு பிளேடுத்துண்டு, கத்தி இவை தயாராக இருக்கும். சாதாரண 'பிக் பாக்கெட்' தவிர, பல பெரிய 'கேசு'களிலும் கந்தசாமி ஈடுபட்டான். அவைகளில் நேரடியாக இல்லாதுபோனாலும் ஓரளவாவது வேணுவையும் ஈடுபடச் செய்து விடுவான் கந்தசாமி.

வேணுவுக்கு இந்தத் தொழில் அடியோடு பிடிக்கவில்லை. கௌரவமாக, மானமாகத் தலை நிமிர்ந்து வாழவேண்டும். மூட்டை தூக்கும் வேலையோ வண்டியிழுக்கும் தொழிலோ ஆனாலும் பரவாயில்லை என்று தோன்றியது.. ஆனால் கந்தசாமி விட்டால்தானே?

ஐந்து வருடத்திற்கு முந்தி ஒரு பெரிய வழக்கில் மாட்டிக்கொண்டான் கந்தசாமி. அதில் தண்டனையடைந்து போனவன் தான் கந்தசாமி. வேணு தப்பியதே அதிசயம். அந்தச் சமயத்தில் தான் அந்தத் தொழிலுக்கே ஒரு முழுக்குப் போட்டான் வேணு. கௌரவமான வேலைக்காக அலைந்து திரிந்தான். கடைசியாக ஒரு நாடகக் கம்பெனி முதலாளியிடம் வேலைக்கு அமர்ந்தான். இரண்டு வருடங்கள் மாடாக உழைத்தான்; நாயாக நன்றி காட்டினான். அவன் உழைப்பையும் நேர்மையையும் கண்டு அவனை ஒரு நடிகனுக்கினார் முதலாளி. அதில் வெற்றி கண்டான் வேணு. படிப்படியாக உயர்ந்து முக்கிய பாகங்களில் நடிக்கத் தொடங்கினான். பெரிய வேடங்களில் தோன்றிப் பிரமாதப் புகழ் பெற்றான். அவனுக்குப் பல சினிமாக் கம்பெனிகளிலிருந்து அழைப்புக்கள் வந்தவண்ணமிருந்தன. ஒரு பெரிய கம்பெனியில் ஒப்பந்தம் செய்யும் தறுவாயிலிருந்தான். 'இந்த மாதிரிச் சமயத்தில் கந்தசாமி சனியன்போல் முளைத்து விட்டானே! என்ன செய்வது? வரப் போகும் புகழ், கௌரவம், மானம் எல்லாமே போய்விடுமே..!' என்று சிந்தனைக் கடலில் நீந்தத் தொடங்கியது அவன் மனம்.

''வேணு!, என்ன அப்படியே பிரமித்துவிட்டாய்!.. பலமான யோசனையா?''

''உம்.... பணமே யில்லையே! என்ன செய்வது என்றே புரியவில்லையே!'

''எங்கிட்டே விளையாடாதே.. தெரியுமா?''

''எங்கிட்டே இருந்தாத் தானே..''

''இல்லாட்டி ஐந்நூறோ, அறுநூறோ, இருக்கிறதைக் கொடு..''

''என்னாலே முடியாது.''

''நீ விளையாடறே!..பழைய சமாசாரமெல்லாம் மறந்து போச்சா?''

''அதைச் சுத்தமா நான் மறந்து, தலைகூட முழுகிட்டேன்..''

''நான் மறக்கல்லே. வெளியிலே தெரிந்தால் என்ன ஆகும் தெரியுமா?''



''மரியாதையாகப் போகிறீரா, இல்லே, போலீசைக் கூப்பிடவா?''

''நான் அதைப் பத்திக் கவலேப் படல்லே!..''

''உன் முதலாளிக்குத் தெரிந்தால்..?''

''தெரியாது.''

''நான் தெரியும்படி செய்தால்..வந்து சொன்னல்..''

''நம்பமாட்டார். என் மீது நம்பிக்கையுண்டு அவருக்கு.''

''பார்த்துடலாம்..நான் நேரே உன்னேடு வர்றேன்..''

சிறிது தயங்கினுன் வேணு. இவனுக்கு இதோடு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான் வேணு.

''வேண்டாம், கந்தசாமி..நான் சொல்றதை..''

''அதெல்லாம் முடியாது.. கிளம்பு, நானும் கூடவே வர்றேன்..''

வேணுவைப் பேசக்கூட விட வில்லே கந்தசாமி. அவனே இழுத்துக்கொண்டு கிளம்பினுன். அரை மைல் தூரம் சென்ற பிறகு ஓர் அழகிய சின்ன வீட்டிற்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். கந்தசாமி வீட்டை ஒரு நோட்டம் விட்டான். சிறியதாக இருந்தாலும் புதிதாக இருந்தது; பகட்டாக இருந்தது. கந்தசாமியை உள்ளே அழைத்துச் சென்ருன் வேணு. சோபாக்கள் போட்டிருந்த அலங்காரமான ஓர் அறையில் உட்கார வைத்தான்.

''கொஞ்ச நேரம் உட்கார்ந்து கொள். நான் போய் அவரை வரச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு, உள்ளே சென்ருன் வேணு.

ஐந்து நிமிடங்கள் சென்றன. ஒரு வேலேயாள் ஒரு கப் காபியைக் கந்தசாமியின் அருகில் வைத்து விட்டு உள்ளே சென்ருன். கந்தசாமி காபியைப் பருகிக்கொண்டே சுற்றுமுற்றும் நோக்கினுன். அழ

ஓடும் குதிரை



போட்டோ: என். ராமகிருஷ்ணு.

காக அலங்கரிக்கப்பட் டிருந்தது அறை; சோபாக்களும் நாற்காலி களும் போடப்பட்டிருந்தன. மின் சார விசிறி சுற்றிக்கொண்டிருந் தது. ஒரு மூலையில் ஒரு புத்தக அல மாரி; மற்ருெருமூலையில் ரேடியோ. சுவரில் பொறுக்காகத் தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள் முதலியவர் களின் படங்கள்.

வந்து கிட்டத்தட்ட அரைமணி யாகிவிட்டது. அலுத்துப்போன கந்தசாமி மெல்ல எழுந்தான்.

''யாரையா, அது? என்னைப் பார்க்க வேண்டுமென்று சொன் னது?'' என்னும் கரகரப்பான குரல் ஒலி கேட்டுத் திரும்பினுன் கந்தசாமி. மாலை நேரச் சூரிய ஒளி மங்கலாக இருந்தது. தன் எதிரே நின்றவரை மேலும் கீழுமாக அளப் பதுபோல் நோக்கினுன் கந்தசாமி. அரைகுறையாக நரைத்த நீண்ட மீசை; கண்களிலே 'ஷெல் பிரேம்' போட்ட வெள்ளெழுத்துக் கண்ணுடி; சற்றுத் தொளதொளப் பான ஷெர்வானி; மூடிய நீண்ட கோட்டு, தலையிலே ஒரு சேட்டுக் குல்லாய். சுமார் 48 அல்லது 50 வயது மதிக்கக்கூடிய கம்பீரமான தோற்றம். ஆளைப் பார்த்தாலே கண்டிப்பான பேர்வழி என்று தோன்றியது. கந்தசாமி எப்படி ஆரம்பிப்பது என யோசித்தான்.

''ஓய், நீர்தானே வேணுவோடு வந்தவர்? என்ன வேண்டும் உமக்கு? சீக்கிரம் சொல்லும்.''

''அந்த வேணுவைப்பற்றி உங் களிடம் சொல்லத்தான்..வந் தேன்!''—தயங்கினுன் கந்தசாமி.

''அவனுக்கு ஏதாவது சிபாரி சுக்கு வந்தீரோ?''

''சிபாரிசா....'' இலேசாகச் சிரித்தபடி கந்தசாமி, ''இல்லை, அவனைப்பற்றிச் சில உண்மைகளைச் சொல்ல வந்தேன்'' என்ருன்.

''புதிதாக ஏதேனும் தெரியுமா..?''

''அவன் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் அல்ல..''

''உம்..அப்புறம்..''

''அவன் பழைய திருடன்; 'பிக் பாக்கெட்'; பல அடிதடிக் கேசுகளில் கூட ஈடுபட்டிருக்கிருன். அவனை

வைத்துக்கொள்ள வேண்டாம்..துரத்திவிடுங்கள்.''

''சரி, இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும்..?''

''உம்....'' என்று விழுங்கினுன் கந்தசாமி.

''இது என்ன ஐயா மிரட்டல்!....சும்மாவாவது வந்து..''

''இல்லே சார்! நானும் அவனும் கூட்டாகத்தான்...''

''ஓகோ! அப்படியா, நீர்தான் அவன் குருவா? அப்போ நீரும் திருடன்..பிக்பாக்கெட்..வழிப்பறி..அடிதடி..''

''ஆமாம், நான் திருடன்தான். அவனும் பெரிய அயோக்கியன். உங்களை ஏமாற்றிவிட்டான். உங்களைப்போன்ற கௌரவமானவர்களிடமிருக்க லாயக்கில்லாதவன்...''

கந்தசாமி முடிக்கவில்லே. ''ஹஹ்ஹா..'' என்று பெரிய அவுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார் முதலாளி.

''ஓய், நீர் யாராக இருந்தாலும் சரி..இந்தச் சமாசாரமெல்லாம் எனக்குப் புதிதல்ல. முதலில் வேலேக்கு வரும்பொழுதே எல்லாவற்றையும் சொல்லிவிட்டான் வேணு. இப்பொழுது மிக்க நம்பிக்கையாகவும் நாணயமாகவும் நடந்துகொள்கிறுன். ஒன்றும் தெரியாத சிறுவனுக இருந்த அவனேக் கெடுத்துப் பாழாகச் செய்தது போதாதென்று இப்பொழுது கௌரவமாக இருக்கும் அவனே மேலும் கெடுக்க நினேக்கிறீர். போய்விடும்..உமது பேச்சைக் கேட்கவே இஷ்டமில்லே..உம்..போய் வாரும்..''

''சார்! அவனேப்பற்றி..''

''தேவையில்லே..நீர் மரியாதையாகப் போகிறீரா?....இல்லே....போலீசைக் கூப்பிடட்டுமா?''

கந்தசாமியின் தலே இறங்கிவிட்டது. தன் எண்ணம் பலிக்காமல் போனதில் ஆத்திரமும் அவமானமும் பொங்க வெதும்பினுன்,

''இன்னுமா நிற்கிறீர்?..வேலேக்காரனேக் கூப்பிடட்டுமா?....வழிகாட்ட..'' என்று கர்ஜித்தார்.

மெல்ல எழுந்து வெளியே நடந்தான் கந்தசாமி.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு 'முதலாளி' கண்ணுடிக்கு எதிரே நின்ருர். தன் உடைகளேக் கழற்றிஞர். தலேப்பாகையை எடுத்துவிட்டு, மீசையைப் பிடுங்கி எறிந்தார். முதலாளியாக இருந்த உருவம் உடனே வேணுவாக மாறிவிட்டது. கந்தசாமியே சந்தேகிக்காதபடி அமைந்த இந்த வேஷம் தான் நாளே ஆரம்பமாகும் புதிய நாடகத்தில் புதிய வேஷம்! இந்த வெற்றி அவன் வாழ்வுக்கே பெரும் வெற்றியல்லவா?

புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்துத் தனக்குள் மகிழ்ந்தான் வேணு.

ஆடும் குதிரை

போட்டோ: பாஸ்கர்.

காமா-சோமா

தே. பார்த்தசாரதி

காமா!—
—சோமா!

தமிழ் நாட்டின் இலக்கிய வானில் சுடர்விடும் இரு சினிமாப் பத்திரிகைகள் இவை.

சுடர் விடுவதோடு அவை நின்றிருந்தால் தேவலையே! சதா இரண்டும் சண்டை போட்டுக் கொண்டிருந்தன! 'காமா' பத்திரிகையில் சினிமா விஷயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பக்கம் பாதிதான். மற்ற இடமெல்லாம், 'சோமா' பத்திரிகையைத் திட்டுவதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கும். 'சோமா' மட்டும் இதற்கு இளைத்ததா, என்ன? அதிலும் 'காமா'வின் ஆசிரியரைத் தாக்கிப் பத்தி, பத்தியாக எழுதப்பட்டிருக்கும்.

இதனால், இரண்டு பத்திரிகைகளின் விற்பனையும் அதிகமாயிற்றே தவிர, குறையவில்லை. சோமாவைத் திட்டிக் 'காமா' ஆசிரியர் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கவும் காமாவைத் திட்டிப் பதிலுக்குச் 'சோமா' ஆசிரியர் என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கவும் சினிமா ரசிகர்கள் ஆவலாக இருந்ததால், காமாவும் சோமாவும் கடைகளுக்கு வந்ததுமே விற்பனையாகிவிடும்.

ஒரு வாரம் 'காமா' ஆசிரியர் தம் தலையங்கத்தில் மறைமுகமாகச் 'சோமா'வைத் தாக்கி இப்படி எழுதுவார்;

''அன்பார்ந்த வாசகர்களே!

நீங்கள் நம் பத்திரிகைக்கு அளித்து வரும் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது. நம் பத்திரிகையின் லட்சியங்களையும் அது கடைப் பிடிக்கும் வழிகளையும் நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்பதற்கு இது ஒன்றே சான்றாகும். இது தெரியாமல் சில

சகோதரச் சினிமாப் பத்திரிகைகள் (இது 'சோமா'வைத்தான் குறிக்கும். ஏனெனில், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் சினிமாப் பத்திரிகை 'காமா'வைத் தவிர 'சோமா' ஒன்றுதான்) மிகக் கீழ்த் தரமான விஷயங்களைத் தருவதோடு, நம்மையும் தாக்கி எழுதுகின்றன. நம் பத்திரிகையில் வரும் விஷயங்களைக் காப்பியடித்துத் தம் பத்திரிகையில் பிரமாதமாக வெளியிடவும் அவை தவறுவதில்லை. ஆனால் இந்தக் காலத்து ரசிகர்களை அவ்வளவு எளிதில் ஏமாற்றிவிட முடியாது! போலிகளைக் கண்டு ஏமாறும் காலம் மாறிப் போச்சு என்பதை அவை உணரவேண்டும்.

ஆசிரியர்—காமா.''

இதைப் பார்த்தவுடனே சில குறும்புக்காரச் சினிமா விசிறிகள் சும்மா இருப்பார்களா? அவர்கள் உடனே, ''இந்த வார 'காமா' இதழ்த் தலையங்கத்தில் ஆசிரியர் உங்களைத் திட்டி எழுதியிருக்கிறாரே, பார்த்தீர்களா? அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?'' என்று ஒரு கேள்வி கேட்டு, சோமா ஆசிரியருக்குக் கடிதம் எழுதுவார்கள். உடனே 'சோமா' ஆசிரியர் அந்த வாரம் 'கேள்வி கேளுங்கள்-பதில் பகருகிறேன்' என்ற பகுதியில் தம் பத்திரிகையில் 'காமா'வைப் பிடித்து விளாசுவார்.

கேள்வி: இந்த வாரம் 'காமா' இதழ்த் தலையங்கத்தில் ஆசிரியர் உங்களைத் திட்டி எழுதியிருக்கிறாரே, பார்த்தீர்களா? அதைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில்: அதை நானும் படித்தேன். சினிமாக் கலையை வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு, காமா ஆசிரியர் தம் பத்திரிகையில் எவ்வளவு மட்டரகமான விஷயங்களையெல்லாம் வெளியிடுகிறார் என்பது அனைவரும் அறிந்ததே. நடிக நடிகையருக்குள் பொறாமையும், சினிமா விசிறிகளுக்குள் போட்டா போட்டியையும் கிளப்பிவிட்டு, தம் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க அவர் முயல்வது பகிரங்கமான ரகசியம். அவர் பத்திரிகையில் வரும் விஷயங்களை நாம் காப்பியடிப்பதாக அவர் கூறுகிறார். அவருக்கு நான் ஒரு சவால் விடுகிறேன். பாரபட்சமற்ற ஒரு குழுவிடம் இரண்டு பத்திரிகைகளையும் கொடுத்துப் பார்ப்போம். அவர்களே தீர்ப்புச் சொல்லட்டும், யாரைப் பார்த்து யார் காப்பியடிக்கிறார்கள் என்று. தீர்ப்பு நமக்குச் சாதகமாகவே இருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

இதைப் படிக்கும் 'காமா' விசிறிகள் தங்கள் கட்சி தோல்வியடைவதை விரும்புவார்களா? உடனே, ''சோமா ஆசிரியர் இவ்வார இதழில் உங்களைத் தாக்கி எழுதியிருக்கிறாரே, பார்த்தீர்களா? அதற்குத் தங்கள் பதில் என்ன?'' என்று காமாவுக்கு எழுதிக் கேட்பார்கள். அடுத்த வார 'காமா'வில் மிகவும் வேகமான தாக்குதலைக் காணலாம்.

''ஹிட்லர் சொன்னான்: 'ஒரு பொய்யை நூறு தரம் திரும்பச் சொன்னால் அது உண்மையாகிவிடும்.' இந்தச் சோமா ஆசிரியர் ஹிட்லரின் தாசரோ என்னவோ! நம் பத்திரிகையில் திரும்பத் திரும்பத் தாக்குவதையே தம் லட்சியமாகக் கொண்டிருக்கிறார். அதனால் அவர் சொல்வதையெல்லாம் உண்மையென்று வாசகர்கள் நம்பி விடுவார்கள் என்று அவர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறார். ஒரு சினிமா விமரிசனம்கூடச் சொந்தமாக எழுதத் தெரியாமல் திணறும் அவர், கலைக்குத் தொண்டு செய்வதாகப் பத்திரிகையில் தம்மைப் பற்றி விளம்பரம் செய்து கொள்வது வேடிக்கைதான்!..''

இதே ரீதியில் காமா ஆசிரியரும் சோமா ஆசிரியரும் - ஐக்கையும் குருஷ்சேவையும் போல - தங்கள் பத்திரிகையில் ஒருவரையொருவர் திட்டி எழுதிக் கொண்டார்கள். இதனால் அவற்றின் விற்பனைதான் அதிகமாயிற்று.

குறும்புக்காரச் சினிமா ரசிகர்களுக்கு நடுவே சிந்திக்கும் திறம் படைத்த சிலரும் இல்லாமல் போகவில்லை. அவர்களுக்குக் 'காமா'-'சோமா'வின் போக்கு மிகுந்த கவலையைத்தான் கொடுத்



''தங்கக் கம்பிமாதிரி நன்றாக வேலை செய்யும் ஒரு பையனைச் சிபாரிசு பண்ணி அனுப்பிச்சேனே, ஒழுங்கா வேலை செய்யறானா?''

''அவன், அப்போதே கம்பி மத்தாப்புப் பெட்டியை எடுத்துக்கிட்டு, கம்பி நீட்டிட்டானே!''

தது. நான்கைந்து பேர்களாக ஒன்று சேர்ந்து, காமா பத்திரிகை நடத்தும் முதலாளியையும், சோமா பத்திரிகை நடத்தும் முதலாளியையும் நேரில் சந்திப்பது என்றும் பிறகு அவர்கள் மூலமாகக் காமா-சோமா ஆசிரியர்களைச் சந்திக்க வைத்துச் சமரசம் காண்பது என்றும் முடிவு செய்தார்கள்.

அவ்வாறே அந்த நல்லெண்ணக் குழு முதலில் 'காமா' காரியாலயத்துக்குச் சென்று, பத்திரிகை முதலாளியைச் சந்தித்தது.

''ஸார், உங்கள் ஆசிரியரும், 'சோமா' பத்திரிகை ஆசிரியரும் ஒருவரை யொருவர் தம் பத்திரிகைகளில் பகிரங்கமாகத் திட்டிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் சந்திக்க வைத்துச் சமாதானம் உண்டாக்க முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ளவே வந்தோம்!'' என்று அந்த ரசிகர்கள் கூறியதைக் கேட்டதும், அவருக்கும் அவர்கள் சொல்வது நியாயமாகவே பட்டது. அவர்கள் யோசனைப்படி நடப்பதாக ஒப்புக் கொண்டார்.

அங்கிருந்து கிளம்பிய ரசிகர்கள் 'சோமா' காரியாலயத்தை அடைந்து, அதன் முதலாளியையும் பேட்டி கண்டு, தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

அதன் பயனாக, 'காமா' முதலாளியும் 'சோமா' முதலாளியும் ஓரிடத்தில் சந்தித்தனர். தங்கள் தங்கள் பத்திரிகை ஆசிரியர்களை ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திக்க வைப்பதென்று தீர்மானித்துப் பிரிந்தனர்.

காமா முதலாளி தம் ஆசிரியரிடம், ''ஓய், மேனா லாட்ஜுக்கு நாளை காலை 11 மணிக்கு வாரும். அங்கே ஒரு காரியம் இருக்கிறது.'' என்றார். 'சரி' என்று ஒப்புக்கொண்டார் காமா ஆசிரியர்.

சோமா முதலாளியும் ஆசிரியரிடம் ''ஓய், மேனா லாட்ஜுக்கு நாளைக்காலை 11 மணிக்கு வாரும்!'' என்றார்.

ஆசிரியர் சிறிது திகைப்புடன் ''ஏன் ஸார்?'' என்றார்.

''சும்மா த்தான்.. வாரும்!'' என்று விஷயத்தை முடித்தார் முதலாளி.

* * *

மறுநாள் காலை. 11 மணிக்கு முன்னதாகவே மேனா லாட்ஜில் காமா முதலாளியும் சோமா முதலாளியும் வந்து காத்திருந்தனர், அவரவர் ஆசிரியர்களுக்காக.

சரியாக 11 மணிக்கு வாசலில் ஒரு கார் வந்து நிற்பதும், அதிலிருந்து தயங்கித் தயங்கி ஒருவர் இறங்கி வருவதும் தெரிந்தது. அந்த நபர் அருகே வந்ததும் காமா முதலாளி, சோமா முதலாளி இருவருமே விழுந்தடித்துக்கொண்டு, ''ஓய், என்ன ஐயா இவ்



வளவு நேரம்?'' என்று அவரைப் பிடித்துக் கொண்டார்கள்.

உடனே காமா முதலாளி, ''ஓய், என்ன உமக்குத் திமிரா?.. என் பத்திரிகை எடிட்டர் மேல் கையை வைக்கிறீர்?..'' என்றார்.

சோமா முதலாளி, ''நானும் அதையேதான் உம்மைத் திருப்பிக் கேட்கிறேன். இவர் சோமா எடிட்டர்'.. நீர் நகரும்!'' என்றார்.

இரண்டு பேருமே திகைத்து நின்றார்கள்,

இருவருக்குமிடையே சிரித்துக் கொண்டே நின்றார் ஆசிரியர்.

''ஸார்.. நான் உங்களிடம் ஓர் உண்மையைச் சொல்லி விடுகிறேன். காமா-சோமா இரண்டு பத்திரிகைகளுக்குமே நான்தான் எடிட்டர்! உங்கள் இருவரையும் திருப்தி செய்வதற்காகத்தான் நானே இரண்டு பத்திரிகையிலும் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு திட்டி எழுதிக்கொண்டிருந்தேன். அதனால்தான் இரண்டு பத்திரிகை விற்பனையும் அதிகமாயிற்று. இன்று தமிழ் நாட்டில் இந்த இரண்டு பத்திரிகைகளையும் படிக்காதவர்களே இல்லை என்று சொல்லலாம். காரணம், நான் செய்த வியாபார தந்திரம்தான். காலையில் 'காமா'வில் வேலை; பிற்பகல் 'சோமாவில்' வேலை. காமாவில் எழுதும்போது 'ஆசிரியர்-காமா' என்று போட்டுக் கொள்வேன். சோமாவில் எழுதும்போது 'ஆசிரியர்-சோமா' என்று போட்டுக்கொள்வேன். இரண்டிலும் சம்பளம் வாங்கிக்கொள்வேன். இரண்டு முதலாளிகளுக்கும் லாபம் ஏற்படுத்திக் கொடுப்பேன்.. இதில் என்ன தவறு..?''

திகைப்பு நீங்கிய ஒரு முதலாளி விசாரித்தார்: ''காமாவில் காமா! சோமாவில் சோமா!.... உங்கள் 'ரியல் நேம்' தான் என்ன?..''

''சாமா!''

''அட ராமா!'' என்று இரண்டு முதலாளிகளுமே மயங்கி விழுந்தார்கள்!

மறக்க முடியுமா?



ஜோதிர்லதா கிரிஜா

தீபாவளிக்கு இன்னும் ஒரே ஒரு நாள்தான் இருந்தது. ஊரே திமிலோகப் பட்டுக்கொண் டிருந்தது. வெடிச் சத்தம் காதைத் தொளைக்கத் தொடங்கி இரண்டு வாரங்களுக்குமேல் ஆகிவிட்டது.

சாதாரண வீடுகளே அமர்க்களப் பட்டபொழுது சுந்தரின் வீட்டில் கேட்பானேன்! சுந்தரின் மூத்த அக்காளுக்குத் தலைதீபாவளி.

அவர்கள் ஒன்றும் அப்படி 'ஓகோ' என்று கொண்டாடுகிற அளவுக்குப் பணக்காரர்கள் அல்லதான். இருந்தாலும் மூத்த பெண்ணின் தலை தீபாவளி என்ற காரணத்தால், அதைச் சற்று அழகாகவே கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள்.

சுந்தரின் கொண்டாட்டத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை.

சுந்தரின் அத்திம்பேர் ரொம்பவும் நல்லவர்.

சென்னையிலிருந்து வரும் போது அவனுக்குத் தீபாவளிப் பரிசாக ஒரு மின்சார இஸ்திரிப் பெட்டி வாங்கி வருவதாய்த் தெரிவித்திருந்தார். பிறகு சுந்தரின் மகிழ்ச்சிக்குக் கேட்கவேண்டுமா?

சுந்தரின் அக்காள் மாலா கண்ணாடிக்கு எதிரில் நின்று, பெரிதாய்ப் போய்விட்ட நெற்றிப் பொட்டை ஓரங்களில் அழித்துச் சிறிதாக்கிக் கொள்ளும் வேலையில் மும்முரமாக முனைந்திருந்தாள்.

''அக்கா! அத்திம்பேர் எப்போது வருவார்?''

''இதோடு எத்தனை தடவைகள் கேட்டு விட்டாய் நீ! நாளை இரவு ஏழு மணிக்கு வருகிறார்!''

''நான் ஸ்டேஷனுக்குப் போவேன்!''

''நீதான் போகவேண்டும்! வேறு யார் இருக்கிறார்கள் போக?''—இப்படிச் சொல்லிவிட்டு மாலா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்

இறந்துபோன அப்பாவை நினைத்துக்கொண்டுதான் அவள் கண்கள் கலங்கின என்பது அவன் மனத்துக்குப் புரிந்தது. அவன் அங்கிருந்து எழுந்து அம்மாவிடம் போனான்.

''அம்மா! அடுத்த வீட்டுப் பாலன் சொல்கிறான், அவனுடைய அத்திம்பேர்தான் பணக்காரராம்! அவர்கள் வீட்டில் அத்திம்பேருக்கு வைர மோதிரம் வாங்கியிருக்கிறார்களாம்! நாம் வெறும் தங்க மோதிரம்தான் வாங்கியிருக்கிறோமாம்! . . . .''

''அவன் கிடக்கிறான்! அவனுடைய அத்திம்பேர் வைர மோதிரம் வாங்கினால்தான் வருவேன் என்று எழுதிவிட்டார். பாலனின் அப்பா கடன் வாங்கிக்கொண்டு திண்டாடுகிறார். உன்னுடைய அத்திம்பேர் மாலாவைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்ததே, அவளுடைய குணத்துக்காகவும் பாட்டுக்காகவும்தான்! பணத்துக்காக இல்லை என்று சொல்லு.''

''இப்போது போய் அவனைச் சண்டைக்கு இழுக்கிறேன், பார்!'' என்று கறுவிக்கொண்டே சுந்தர் வாசலுக்கு ஓடினான்—

மறுநாள் மாலை மணி ஆறு. சுந்தர் இரவு ஏழுமணி வண்டியில் வரப்போகும் தன் அருமை அத்திம்பேரை, அழைத்துவர ரெயில்வே நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

ரெயில் நிலையத்தில் 'டிக்கெட்' விற்பனையாளரிடம் சென்று 'திருவனந்தபுரம் விரைவுத் தொடர் எப்போது வந்து சேரும்?' என்று கேட்டான். அவர் சொன்ன பதில் அவனை நிலைகுலையச் செய்தது. தன்னைச் சுற்றியிருந்த பொருள்கள் அத்தனையும் 'கிர்' ரென்று சுழல்வன போல் அவனுக்குத் தோன்றிற்று. அவன் கண்கள் கலங்கின.

''என்ன தம்பி! . . அடடே! அழுகிறாயா என்ன? . . திருவனந்தபுரம் வண்டியில் உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது வருவதாக இருந்தார்களா?''

''ஆமாம்! தலை தீபாவளிக்காக என்னுடைய அத்திம்பேர் வருவதாக இருந்தார் . . . சார்! விபத்தில் யார் யார் உயிரிழந்திருக்கிறார்கள் தெரியுமா? எனக்கு வீட்டுக்குத் திரும்பிப் போகவே பிடிக்கவில்லை! என் அக்காவுக்கு என்ன பதில் சொல்வேன்?'' என்று திக்கித் திணறிய சுந்தரின் தோள்மீது பரிவோடு தம் கையை வைத்தார் அவர். சுந்தர் 'ஓ'வென்று கதறத் தொடங்கினான்.

''அடடே! நீ கெட்டிக்காரப் பையனாச்சே! இப்படி அழலாமா? விபத்து பற்றிய பூரா விவரங்களும் இன்னும் சரியாகத் தெரியவில்லை. உன் அத்திம்பேருக்கு அபாயம் ஒன்றும் நேர்ந்திருக்காது. பயப்படாதே! சற்று இப்படி உட்கார். நான் விபத்து நடந்த இடத்துக்குத் தந்தியடித்து விவரம் கேட்கிறேன். உன் அத்திம்பேரின் பெயர், ஊர், விலாசம், அங்க அடையாளங்கள் எல்லாம் சொல்லு!''

''என் அத்திம்பேரின் பெயர் ஆனந்தன். சென்னையில் வருமான வரி இலாகாவில் அவர் வேலை செய்து வருகிறார். அவருடைய பெட்டியில் 'எம். ஆர். ஆனந்தன்' என்ற பெயர் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். அவருடைய வயது இருபத்தெட்டு. கதர் வேஷ்டியும் ஜிப்பாவும்தான் எப்போதும் அணிவார்!''

டிக்கெட் விற்பனையாளர் அவனை ஒரு நாற்காலியில் உட்காரச் சொல்லி விட்டுப் பக்கத்து அறைக்குச் சென்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பிவந்த அவர், ''தம்பி! இந்த விபத்தில் சில பேர்களுக்குமேல் உயிர்ச்சேதம் இல்லை. ஆனால் காயமடைந்தவர்கள் நிறைய இருக்கிறார்களாம். நீ சொன்ன விவரங்களை எல்லாம் நான் தந்தி மூலம் தெரிவித்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அங்கிருந்து பதில் வந்துவிடும்!'' என்று சுந்தரிடம் ஆறுதலாகக் கூறினார். சுந்தரும் படபடக்கும் இதயத்தோடு உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் தந்திச் செய்தியும் வந்தது.

''சுந்தர்! ஐ ஆம் ஸோ ஸாரி! உன் அத்திம்பேரின் பெட்டி மட்டும்தான் அகப்பட்டதாம். ஆசாமியைக்

''ஏண்டா தம்பி, நான் என்ன சிறுபிள்ளையா? எனக்கு ஏதுக்கு இந்த வெடிகள்?''

''உங்க சபா கட்டடத்தை இடிக்கணும்னு அலையறீங்களே- இந்த ஆனை வெடி, அணுக்குண்டு வெடி இதுகளை வெடிச்சுப் பாருங்க - ஒரு நொடியிலே இடிஞ்சு போகும்!''

காணவில்லையாம்! அதனால் உன் அத்திம்பேருக்கு என்ன நேர்ந்திருக்குமோ தெரியவில்லை! நீ வேண்டுமானால் ஒன்று செய்! அடுத்த வண்டியில் மணப்பாறை ஸ்டேஷனுக்குத் துணையோடு போய்த் தேடிப் பார்! பெட்டி ரெயில்வே போலீசார் வசம் இருக்கிறதாம்!''—சுந்தர் தனக்கிருந்த மனக் குழப்பத்தில் அந்த மனிதருக்குத் தனது நன்றியைக் கூடத் தெரிவிக்காமல் எழுந்து சென்றான்.

* * *

அடுத்த வண்டியிலேயே விபத்து நடந்த இடமாகிய மணப்பாறை நிலையத்துக்கு மாலாவையும் அம்மாவையும் அழைத்துக் கொண்டு சுந்தர் புறப்பட்டுச் சென்றான்.

அவர்கள் போய்ச் சேர்ந்த போது மணப்பாறை நிலையமே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. வண்டி தடம் புரண்டதோடு எதிர்ப்பட்ட கூட்ஸ் வண்டியோடும் மோதிக் கொண்டதால், மாண்டவரின் உடல்கள் அப்புறப்படுத்தப் பட்டிருந்தன. அவர்கள் முதலில் ரெயில்வே போலீசாரிடம் சென்று பெட்டியைக் காட்டச் சொன்னார்கள். அது ஆனந்தனின் பெட்டிதான் என்பது தெளிவாயிற்று. மாலா விக்கி விக்கி அழுதாள். பெட்டியைப் போலீசார் தற்போது தர முடியாதென்றதால் மூவரும் போலீஸ் மருத்துவ விடுதிக்குச் சென்றார்கள். அங்கே கேட்டதில், 'எம். ஆர். ஆனந்தன், இன்கம் டாக்ஸ் டிபார்ட்மென்ட், சென்னை' என்ற விலாசச் சீட்டோடு கூடிய பணப்பை ஒரு பிணத்தின் சட்டைப் பையில் இருந்ததாகவும், அதில் இருந்த மற்றொரு கடிதத்திலிருந்து 'மாலா, 18, நடுத் தெரு, கோடை ரோடு' என்ற முகவரி கிடைத்ததாகவும் உடனே அந்த முகவரிக்கு உடலை அனுப்பி யிருப்பதாகவும் தகவல் கிடைத்தது.

'பணம் போனால் போகிறது' என்று ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு மூவரும் கிளம்பினார்கள், தங்கள் ஊரை நோக்கி. கண் இல்லாதவன் பார்வை பெற்று, அதைத் திரும்பவும் இழந்தால் எவ்வளவு துன்பம் அடைவானோ, அவ்வளவு துன்பத்தில் மாலா மூழ்கியிருந்தாள். மூவருமே அழுது கொண்டே வந்து சேர்ந்தார்கள்.

வீட்டு வாசலில் கார் நின்ற போது திண்ணையில் அமர்ந்திருந்த நபரைப் பார்த்ததும் மூவரும் திடுக்கிட்டுப் போனார்கள். காரிலிருந்து இறங்கி ஓடிச் சென்று கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார்கள். அசல் சுந்தரின் அத்திம்பேரே அங்கே புன்னகையோடு அமர்ந்திருந்தார். ''மாப்பிள்ளை!'' அந்த அம்மா மேலே பேச முடியாமல் திணறினாள். மாலாவோ எல்லையற்ற மகிழ்ச்சியில் மூர்ச்சையாகி விழுந்துவிட்டாள். விழுந்த அவளை மூர்ச்சை தெளிவிக்கும் முயற்சியில் முதலில் ஈடுபட்டாள் அம்மா! சுந்தர் வாடகைக் காரை வழி

அனுப்பிவைத்து விட்டு அத்திம் பேரிடம் ஓடோடி வந்தான்.

''அத்திம்பேரே! நீங்கள் உயிரோடுதான் இருக்கிறீர்களா?'' என்று கேட்டுவிட்டு மூச்சு விடாமல் நடந்ததைச் சொன்னான்.

எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்ட ஆனந்தன், ''என் ஆயுள் கெட்டி, சுந்தர்! அதனால் தான் திண்டுக்கல்லிலேயே வண்டியிலிருந்து இறங்கிவிட்டேன்!..''

''திண்டுக்கல்லில் இறங்கினீர்களா! அப்படியானால் உங்கள் பெட்டி எப்படி வந்தது மணப்பாறை வரையிலும்? உங்கள் பர்ஸை வைத்திருந்த அந்த இன்னொரு மனிதன்..?''

''சொல்லுகிறேன்! திண்டுக்கல்லுக்கு முந்திய நிலையத்தில்தான் என்னுடைய பெட்டியும் பர்சும் காணாமல்போய் விட்டன என்ற உண்மை தெரிந்தது!''

''எப்படி?''

''நான் வந்தது இரண்டாம் வகுப்புப் பெட்டியில்! என்னோடு ஓர் இளைஞன் மட்டுமே அந்தப் பெட்டியில் இருந்தான். சென்னையில்தான் அவனும் ஏறினான். பேச்சுத் துணைக்கு வேறு எவரும் இல்லாததால் நானும் அவனும் நெருங்கிய நண்பர்கள் ஆனோம். விழுப்புரத்தில் அவன் தன் பிளாஸ்கிலிருந்து எனக்குக் கொஞ்சம் காபி கொடுத்தான்?''

''அதில் தூக்க மருந்து கலந்திருந்ததாக்கும். அப்படித்தானே?''

''கரெக்ட்! துப்பறியும் கதைகள் படிக்கிறதுண்டா நீ?''

''சரி, சரி! மேலே சொல்லுங்கள்!''

''அப்புறம் நான் கண் விழித்துப் பார்த்தபோது திண்டுக்கல்லில் வண்டி நின்றிருந்ததுதான் தெரியும். பெட்டியும் பர்ஸும் காணாமல் போகவே, நான் இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் புகார் செய்யச் சென்றேன். அதற்குள் வண்டி கிளம்பி விட்டது. என் கையிலும் பணம் இல்லாததாலும் வாடகைக்காரும்



அதே இளைஞனின் உடல் பிணமாகக் கிடப்பதைக் கண்டார்.

பிணத்தை எடுத்து வந்த போலீசாரிடம் எல்லாவற்றையும் விரிவாகக் கூறினார் ஆனந்தன். இன்னும் போதிய விசாரணைக்குப் பிறகு



உடனே அகப்படாததாலும் இரவு ஒன்பது மணி வரையிலும் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது. ஒன்பது மணிக்குமேல் ஸ்டேஷன் மாஸ்டரின் தயவினால் கிடைத்த வாடகைக் காரில் இங்கே வந்து சேர்ந்தேன். இங்கே வந்து பார்த்தால் வீடு பூட்டிக் கிடக்கிறது! பக்கத்து வீட்டுக்காரர்கள் மூலம் உங்கள் விஷயம் தெரிந்தது. அது மட்டுமல்ல. இந்த ஊர்க்காரர்கள் எல்லாரும் வந்து என்னை வேடிக்கை வேறு பார்த்து விட்டுப் போனார்கள்!''

மாலாவுக்கு மூர்ச்சை தெளிந்ததும் எல்லாரும் உள்ளே சென்றார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் ஓர் ஆம்புலன்ஸ் வண்டி அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. வண்டிக்குள் எட்டிப் பார்த்த ஆனந்தன் தன்னோடு பயணம் செய்த தான் பெட்டியும் பர்ஸும் அவருடைய சென்னை விலாசத்துக்கு அனுப்பப்படும் என்று போலீசார் சொன்னார்கள். இளைஞனின் உடலைச் சுமந்துகொண்டு ஆம்புலன்ஸ் திரும்பிப் போயிற்று.

அத்திம்பேர் தொடர்ந்தார்:

''உன் அக்காளுக்கு வாங்கிய புடைவையும் நீ கேட்ட இஸ்திரிப் பெட்டியும் அந்தப் பெட்டியில் தான் இருக்கின்றன. அவை கிடைக்கத் தாமதமாகும்! உனக்குத்தான் ஏமாற்றமாக இருக்கும்!''

சுந்தர் பெரிய மனிதன் மாதிரி முகத்தை எடுப்பாக வைத்துக் கொண்டு, ''இஸ்திரிப்பெட்டியும் வேண்டாம்; புடைவையும் வேண்டாம்! நீங்கள் விபத்தில் தப்பி உயிரோடு வந்தீர்களே, அதுதான் மறக்க முடியாத தீபாவளிப் பரிசு!'' என்றான்.

..



பாரத ரத்தினம் பண்டித நேரு
உலகம் வியக்க உரையாடும் காட்சி

போட்டோ: மத்திய அரசாங்கச் செய்தித்துறை (P. I. B.)



நேருவும் நண்பர்களும்





மேல்: அன்புக் குழந்தைக்கு ஆசி வழங்குகிறார்

கீழ்: பண்டா பீம்சாவுடன் பொழுது போக்குகிறார்

எதிர்ப்பக்கம்

1. சமாதானப் புறாவைப் பறக்க விடுகிறார்.
2. புலிக்குட்டியுடன் விளையாடுகிறார்.
3. யானையிடம் பிரியா விடை பெறுகிறார்



விநோத உடைகளில்
விந்தை நேரு

மேலே: லடாக்கியர் உடையில் நேரு

கீழே: உஸ்பெக்கிஸ்தான் (ரஷ்யர்) உடையில் நேரு



மேலே: பூடானியர் உடையில் நேரு

கீழே: சிக்கிம் உடையில் நேரு

இட்டிலி

தங்கமணி

அன்று சுதந்தரத் திருநாள்!

"'தொழிற்சாலைக்கு முதலாளியாக இருப்பவர், தொழிற்சாலையின் உண்மையான சொந்தக்காரர் அல்லர்; தொழிற்சாலையில் ரத்தம் சுண்டப் பாடுபடும் தொழிலாளி தான் தொழிற்சாலையின் உண்மையான சொந்தக்காரன் ஆவான்?' - என்று மகாத்மா காந்திஜி உபதேசித்தார். ஆனால், அவருடைய உபதேசத்தை எந்த முதலாளியும் ஒப்புக்...." வீட்டுத் திண்ணையின் மீதமர்ந்து என்னவோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண் டிருந்தார், ஒரு முதியவர்.

"ஐயோ!" வாசலிலிருந்து ஒரு குரல் - நைந்து நொந்த குரல் - லேசாகக் கிளம்பியது. உடனே, படித்துக்கொண் டிருந்த புத்தகத்தை மூடினார்; நிமிர்ந்து பார்த்தார், கிழவர். வாசலில் ஒரு பையன், பசியே உருவாகத் தள்ளாடி நின்றான்.

"என்ன தம்பி, என்ன வேண்டும்..?" என்று கேட்டார் பெரியவர். பையன் தயங்கினான்; மயங்கினான்; பிறகு, வறண்ட நாவைச் சிரமத்துடன் இயக்கிச் சொன்னான்: "நான் வேலை செய்துவந்த பீடித் தொழிற்சாலையை மூடி விட்டார்கள். ஒரு வேலையும் கிடைக்கவில்லை. நாலைந்து நாட்களாகப் பட்டினி...."

"ஓ பசியா; இங்கே வா!" என்று அநுதாபத்துடன் கூப்பிட்டார், கிழவர். கிழவரை நோக்கித் தாவிப் பாய்ந்தோடினான் சிறுவன்.

"தம்பி, உன் பெயர் என்னடா?" என்று அந்தச் சிறுவனை மேலும் கீழும் கவனித்தவாறே அன்பாகக் கேட்டார், முதியவர்.

"தங்கவேலு!" என்று கூறினான் சிறுவன்.

"கொல்லைப்புறம் அசுத்தமாய்க் கிடக்கிறது. தங்கவேலு! அதை நீ சுத்தப்படுத்திவிடு. உனக்குப் பலகாரம் சாப்பிடப் பணம் தருகிறேன்; என்ன?" என்று பரிவுடன் கேட்டார் கிழவர்.

"உம் செய்கிறேன், ஐயா" என்று தெம்புடன் சொன்னான், தங்கவேலு.

தங்கவேலுவைக் கொல்லைப்புறத்துக்கு அனுப்பினார், பெரியவர். உடனே, 'வஞ்சனையில்லாமல் உழைக்க வேண்டும்; வயிறார உண்டு, வளமோடு வாழ வேண்டும்!' என்னும் லட்சியத்துடன் இயங்கும் உழைப்பாளி வர்க்கத்தில் பிறந்த தங்கவேலு, ஓடினான்; கொஞ்ச நேரத்திற்குள், கொல்லைப்புறத்தைச் சுத்தப்படுத்திவிட்டு, முதியவரிடம் சென்றான். "ஐயா, கக்கூசைத் துப்புரவாகச் சுத்தப்படுத்தி விட்டேன்!.." என்று மூச்சு முட்டக் கூறினான்.

"பலே! ரொம்பச் சுறுசுறுப்பான பையன்தான் நீ!..சரி, இந்தா.. போய், பலகாரம் வாங்கிச் சாப்பிடு.." என்று சொல்லி, தங்கவேலுவிடம் நாலணாவைக் கொடுத்

தார் கிழவர். நாலணாவை வாங்கிக் கொண்ட தங்கவேலு, கடவுளைக் கண்ட தவசியைப்போல நெஞ்சம் பூரித்தான்! கிழவரை நன்றிப் பெருக்குடன் நோக்கி, ''வணக்கம் ஐயா!..'' என்று கையெடுத்துக் கும்பிட்டான்; பிறகு ஆவலும் அவசரமுமாக அங்கிருந்து புறப்பட்டான்; பலகாரக் கடையை நோக்கிப் பறந்தோடினான், ரஷ்யாவின் ராக்கெட்டைப்போல!

அப்புறம், கிழவர் மறுபடியும் புத்தகத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்:

* * *

குறுகலான சந்து, நடைப்பாதையோரம் தண்ணீர்க் குழாய். பலகாரக் கடையிலிருந்து வாங்கிவந்த இட்டிலிப் பொட்டலத்தோடு தங்கவேலு வந்தான். குழாயடிக்கு அருகில், நடைப்பாதையோரமாகச் சென்று அமர்ந்தான். அருகில், என்னவோ ஒரு கறுப்புத் துணி கிடந்தது. தங்கவேலு, அந்தத் துணியை எடுத்துப் பார்த்தான். அது ஒரு கறுப்புச் சட்டை. ''பலே! நான் அதிஷ்டக்காரன்தான்! போட்டுக்கொள்ள நல்ல சட்டை கிடைத்ததே!'' என்று முணுமுணுத்தவாறே, அந்தக் கறுப்புச் சட்டையை அணிந்துகொண்டான். பிறகு இட்டிலிப் பொட்டலத்தை எதிரில் வைத்துப் பிரித்தான். மறு கணம்—

'படீர்!..' எதிர்பாராதவிதமாக முதுகில் விழுந்த முரட்டு அறை, தங்கவேலுவின் உயிரைத் தூக்கியடித்தது! அவன் ''ஐயோ, அம்ம்...ம்மா!...'' என்று வீரிட்டுக் கதறியவாறே துள்ளித் துடித்து எழுந்தான். எழுந்தவன் கழுத்தில் இரண்டு குத்து விட்டுப் பிடரியைப் பிடித்துக் குலுக்கிய போலீஸ்காரன், ஆக்ரோஷமாய்க் கர்ஜித்தான்: ''ஹும்!.. அடுத்த தெரு வக்கீல் ஐயாவின் மணிப் பர்ஸை அமுக்கிக் கொண்டு ஓடிவந்து, இங்கே அடக்கமாகப்



பதுங்குகிறுயா, கறுப்புச் சட்டைக் கழுதையே! எங்கேடா, மணிப் பர்ஸ்..?''

போலீஸ்காரனின் அபாண்டப் பழியைக் கேட்ட தங்கவேலுவுக்குத் திகீரென்றது! பாவம், அவனுக்கு என்ன சொல்வது என்றே பிடிபடவில்லை; எவனே ஒரு ஜேப் படித் திருடன் கழற்றி யெறிந்திருந்த கறுப்புச் சட்டையை அணிந்திருந்ததனுல், வந்த தீவினை! போலீஸ்காரனின் குருட்டுப் பிடியில் சிக்கிச் சிந்தை கலங்கிப் பரிதவித்தான்!..

''திருட்டு நாயே! என்னடா, முழிக்கிருய்..? நடடா!..'' காலடியில் கிடந்த இட்டிலிப் பொட்டலத்தைக் கவனிக்காத போலீஸ்காரன், தங்கவேலுவை நையப் புடைத்தவாறே காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றுன்.

* * *

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு - இழுத்து வந்த ரிக்ஷா வண்டியை நடைப்பாதை ஓரமாக நிறுத்தினுன்; குழாயடிக்குச் சென்றுன்; தண்ணீரை வயிறு முட்டக் குடித்துவிட்டு வந்தான். ரிக்ஷாவின்மீது, ''கடவுளே!..''என்று ஆயாசப் பெருமூச்சுவிட்டவாறே உட்கார்ந்தான் ரிக்ஷாக்காரக் கிழவன். உட்கார்ந்த மறு நொடியே 'குபுக்' என்று எழுந்தான்; தாவியோடினுன்; நடைப்பாதையோரமாய்க் கவனிப்பாரற்றுக் கிடந்த இட்டிலிப் பொட்டலத்தைக் கவ்வி எடுத்தான்; பார்த்தான்; இட்டிலி!..

ரிக்ஷாக்காரக் கிழவனின் பசி வயிறு ஆர்ப்பரித்தது! கிழவன், பொட்டலத்தை எடுத்துக்கொண்டு போய், ரிக்ஷாவின் மீதமர்ந்து பிரித்தான். பிரிப்பதற்குள்—

''டேய், கழுதை! நடு வீதியில் வண்டியைவிட்டு வைத்திருக்கிருயே - உங்கப்பன் வீட்டு வீதியா..? எடுடா,வண்டியை!..'' என்று கொடுமையாக அதட்டிக் கொண்டே, சைக்கிளைவிட்டு இறங்கினுன், வேறு ஒரு போலீஸ்காரன்.

சுதந்தர நாட்டின் 'மன்ன'னுன ஏழைக் கிழவன், நடுங்கினுன்! ''வந்து..சாமி..ரொம்பப் பசி..'' என்று உளறினுன்.

''என்னடா உளறுகிறாய், முண்டமே!..

பிறகு ''அதென்னடா பொட்டலம்..? கொண்டு வா, பார்க்கலாம்..'' கிழவனிடமிருந்த இட்டிலிப் பொட்டலத்தை வாங்கினான்; பார்த்தான்; போலீஸ்காரனுக்கும் பசி! திருப்பிக் கொடுக்க மனம் ஒப்பவில்லை; ''சரி.. நீ போடா..'' என்று கிழவனை அனுப்பிவிட்டு, காவல் நிலையத்திற்கு விரைந்து சென்றான்.

* * *

இட்டிலிப் பொட்டலத்துடன் நுழைந்த போலீஸ்காரனைக் கண்டவுடன், அறைக்குள்ளிருந்த இன்ஸ்பெக்டர், ''ஸிக்ஸ் டபிள் நாட் ஸெவன்!.. இங்கே வாய்யா..'' என்று கூப்பிட்டார். ''என்ன சார்..?'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டே, இட்டிலிப் பொட்டலத்தோடு ஓடோடிச் சென்றான்.

''பலகாரம் வாங்கிவர ஆளில்லாமல், இரண்டு மணி நேரமாகப் பசியோடு தவித்துக்கொண்டிருக்கிறேன்.. ஆமாம், அதென்ன பொட்டலம்..?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''இட்டிலி சார்..''

''இட்டிலியா!..சரி, அதை இப்படிக் கொடு; நீ போய் ஏதாவது வாங்கி..'' என்று இழுத்தவாறே, நாலணாவை எடுத்து, போலீஸ்காரனிடம் நீட்டினார் இன்ஸ்பெக்டர்.

''இல்லை, பரவாயில்லை சார். இதை நீங்கள் சாப்பிடுங்கள். நான் வேறு ஏதாவது சாப்பிட்டுக் கொள்ளுகிறேன்..'' என்று அசடு வழியச் சொல்லியவாறே, இட்டிலிப் பொட்டலத்தை மேசைமீது வைத்துவிட்டு, வெளியே சென்றான், போலீஸ்காரன். இன்ஸ்பெக்டர் அதைப் பிரித்ததுமே,—

''நமஸ்காரம், இன்ஸ்பெக்டர்

நாட்டியம் புரியும் நடன பொம்மைகள்

போட்டோ: ராஜன்

வாள்!..'' புன்னகையும் பூரிப்புமாக அறைக்குள் வந்து, நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்தார், ஒரு பெரிய மனிதர்.

''வாருங்கள், வாருங்கள்..'' என்று அசட்டுச் சிரிப்புடன் அவரை வரவேற்ருர் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம், இன்ஸ்பெக்டர் காலைப் பலகாரம் சாப்பிடுகிறீரா..? ஏதேனும் பலகாரம் வாங்கி வரச் சொல்லுங்கள்..'' என்று கூறியவாறே ஜிப்பாப் பையில் திணிக்கப்பட்டிருந்த கனத்த மணிப் பர்ஸை வெளியில் எடுத்தார் பணக்காரர்.

''சார்..இதை நீங்கள் சாப்பிடுங்கள். நான் அப்புறம்..'' இட்டிலிப் பொட்டலத்தைப் பணக்காரரின் அருகில் நகர்த்தி, கண்ணுடிக் குவளையில் தண்ணீரை மொண்டு வைத்து, அன்புடன் உபசரித்தார், இன்ஸ்பெக்டர்.

கண்ணுடிக் குவளையை எடுத்துக்கொண்டு, கையலம்புவதற்காக வெளியே வந்தார், பணக்காரர். அப்போதுதான், ஒரு பாவமும் அறியாத தங்கவேலுவை அடித்து, உதைத்து இழுத்து வந்தான்.

''என்ன ஐயா, இந்த பயல் எங்கேயாவது தார் பூசிஞனு? என்று கிண்டலாகக் கேட்டார்.

''இல்லை சார். வந்து..ஒரு வக்கீல் ஐயாவின் மணிப்பர்ஸைத் தேட்டைப் போட்டுவிட்டான், சார்!..'' என்று வெற்றிப் பெருமிதத்துடன் கூறிஞன், போலீஸ்காரன்.

தங்கவேலுவை ஏறிட்டு வெறித்து நோக்கிய பணக்காரர், ஆத்திரமாக உறுமிஞர்: ''ஏண்டா, இப்படி ஊரார் பணத்தைப் பகற்கொள்ளையடிப்பதைவிட்டு, உழைத்துப் பிழைக்கக்கூடாதா..? சோம்பேறி நாயே!..'' என்ருர்.

தங்கவேலு அவர் இட்டிலியை விழுங்குவதைப் பார்த்துக்கொண்டு நின்ருன்.

கதை சொல்லும் கதகளி பொம்மைகள்

எங்கே கூடுகளைக் காணலாம்?

இங்கே சில பறவைகளைப் பார்க்கிறோம். அவை ஒவ்வொன்றும் எங்கே கூடு கட்டுகிறது என்று உங்களால் சொல்ல முடியுமா?

விடை: 128-ஆம் பக்கம்

கண்ணுச்சாமி

ப. ரா

'படார்!' உலகமே கிடுகிடுக்கும் படியானதோர் ஓசை. அதன் எதிரொலிகள் போலப் ''பட், படார்! டப், டபார்! டுப், டுமீல்!'' என்ற பல சப்தங்கள்!

தீபாவளிக் கனவுகள் கண்டுகொண்டிருந்த சிப்பாய் கண்ணுச்சாமியின் உறக்கம் கலைந்தது. 'அடடா! விழித்த கண்கள் மூடாது காவல் புரிவது நம் கடமையாயிருக்க இப்படித் தன்னை மறந்து தூங்கிவிட்டோமே!' என்ற அங்கலாய்ப்புடன் கீழே நழுவிய துப்பாக்கியை எடுத்துக்கொண்டு எழுந்தான் அவன்.

இது அவனது கிராமம் அல்ல; இந்திய திபெத் எல்லை. பேரொலியுடன் வெடித்துக்கொண்டிருந்தவை பட்டாசுகளல்ல. போர்க்களத்து வெடிகுண்டுகள்! சற்றுத் தூரத்திற்கப்பால் இந்திய எல்லைக்குள் பிரவேசிக்க முயன்றதொரு சீனப் படைக்கும் காவல் புரிந்து நின்ற இந்தியத் துருப்புக்களுக்குமிடையே உக்கிரமான போர் நிகழ்ந்துகொண்டிருந்தது.

அனுபவம் ஒன்றுமே அதிகமில்லாத வாலிபனான அவனை விதி எப்படியோ இங்குக் கொண்டு சேர்த்துவிட்டது. கிராமங்களில் சாதாரணமாக நடக்கும் வயல் வரப்புச் சண்டையானால் அவனும் வரிந்து கட்டிக்கொண்டு இறங்கி ஒரு கை பார்த்திருப்பான். இதுவோ பீரங்கிகளும் குண்டுகளும் உபயோகிக்கப்படும் பயங்கர யுத்தம்.

துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொண்டு போர் நடக்குமிடத்தை நோக்கி நாலடி வைத்தான். கால்கள் பின்னிக் கொண்டன. 'விஸ்ஸென்று பாய்ந்து வந்த ஒரு துப்பாக்கிக் குண்டு அவன் காதை உராய்ந்துகொண்டு சென்றதும் அதிர்ச்சியுற்றுப் பொத்

தென்று பூமியில் விழுந்தான். கிராமத்தில் விட்டு வந்த இளம் மனைவி ஜக்கம்மா, தாய் தந்தையர், எருமைக் கன்றுக்குட்டி என்றெல்லாம் அவன் மனம் எண்ணமிட்டது. இந்த வாரக் கடைசியில் தீபாவளி. அதிலும் அவனுக்குத் தலைதீபாவளி. ஊர் சென்று தலைதீபாவளி நடத்த அதிகாரி லீவு தர மறுத்துவிட்டார்.

'எப்படிக் கிடைத்திருக்கும் விடுமுறை? நாம் இப்போது சாக வேண்டுமென்பது தலைவிதியாயிருக்கும் போது? இப்படி அனாதையாய் உயிரை விட்டுக் கொண்டிருக்கிறேனே!..'

'இறந்து' விட்ட கண்ணுச்சாமி கால் மிதிபட்டு எழுந்தான் ஆக்கிரமித்த சீனர்களை விரட்டியடித்து விட்டு வெற்றியுடன் திரும்பும் இந்தியச் சிப்பாய்களின் கூட்டம் எதிரே நின்றது.

மிதிபட்ட கண்ணுச்சாமிக்கு உயிர் மட்டும் வரவில்லை; கோபமும் கூடத்தான் வந்தது. ''என்ன ஐயா, கண் தெரியவில்லையா உனக்கு? எருமை மாடு மாதிரி வந்து மிதிக்கிறாயே!'' என்று அவன் கூச்சல் போட்டான்.

''சாப்பாட்டு அறையில் உன்னை முதல் ஸ்தானத்தில் பார்க்கிறோம். சண்டை நடக்கும்போதோ நீ இருக்குமிடமே தெரிவதில்லை. 'பந்திக்கு முந்திக் கொள்; படைக்குப் பிந்திக்கொள்' என்ற பழமொழியே உனக்காகத்தான் ஏற்பட்டது போலும்! காலை மிதித்து விட்டோமென்று கோபித்துக் கொண்டு கண்மண் தெரியாது எங்கள்மேல் பாயும் நீ, நம் நாட்டையே விழுங்க வரும் எதிரியை ரோசத்துடன் சாடினுயானுல் நன்ருக இருக்கும். சரி, வா.''

இதற்குப் பதில் பேச முடியாது திகைத்து நின்ருன் அவன். சிப்பாய்கள் ஏளனமாகச் சிரித்து விட்டுச் சென்றனர்.

* * *

நள்ளிரவு நேரம். ஓசையின்றிக் கூடாரத்தினின்று வெளியேறிய கண்ணுச்சாமி, காட்டுப் பாதையில் நடந்துகொண் டிருந்தான். அவன் மனம் துணிந்து விட்டது. 'உயிரைத் துறந்து கடமையை ஆற்றுவோம்' என்றல்ல; 'கடமையைத்

''அத்திம்பேர்! எங்கப்பா தங்க மோதிரம் கொடுக்கல் லேன்னு கோவிச்சிண்டேளோ? இந்தாங்கோ!''

துறந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வோம்' என்றுதான்!

,'இந்தப் பயங்கரமான இடத்தில் இனித் தங்குவது உசிதமல்ல. தெய்வ சித்தமிருந்தால் தீபாவளிப் பண்டிகைக்குக் கிராமத்தில் இருக்கலாம்' என்று நடந்தான்.

பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள், அதிலும் போர்முனையிலிருந்து இப்படித் தப்பியோடுவது பெருங் குற்றம். இது கண்ணுச்சாமிக்குத் தெரியும். ஆயினும் மரணபயமும் மனைவியைக் காணும் ஆவலும் அவனது அறிவை மழுக்கி விட்டன. கண்ணுச்சாமி ஓர் நீரோடையின் கரையில் அமர்ந்தான். குளிர்ந்த தண்ணீர் நொந்த பாதங்களுக்குச் சற்று இதமளித்தது. ஜேபியில் திணித்துக்கொண்டு வந்திருந்த உலர்ந்த ரொட்டித்துண்டுகள் சிலவற்றை விழுங்கவும் உதவியது. பசியும் களைப்பும் சற்று நீங்கிய நிலையில் கற்பனை விரிந்தது.

கிராமத்து வாய்க்கால் கரையில் கண்ணுச்சாமி வீற்றிருக்கிறான். மாலைத் தென்றல் மனோகரமாக வீசுகிறது. ஜக்கம்மா அதோ வந்து கொண்டிருக்கிறாள்!

ஜக்கம்மா கிராமத்திலேயே சிறந்த அழகி. அவளை மனைவியாகப் பெற்ற அவன் இதயத்திலே இன்பக் கிளுகிளுப்புடன் இயற்கையானதொரு செருக்கும் சேர்கிறது.

ஜக்கு நாணமுடன் வருகிறாள். அவனருகே அமர்கிறாள். அவளுடலை அலங்கரிக்கும் கறுப்பு வர்ணப் புடைவையும் அதே நிற ரவிக்கையும் இந்தத் தீபாவளிக்கு அவன் வாங்கித் தந்தவை..

இமைப் பொழுதில் கண்ணுச்சாமியின் கற்பனை சிதறியது. 'உர்..ர்..' என்று உறுமுவது யார்? அந்த உறுமல் ஓசை ஜக்குவினுடையதாக இருக்க முடியாது. அவன் ஸ்பரிசத்திற் பட்ட பட்டுப் போன்ற உரோமமும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்ததல்ல. பதறியெழுந்தான் அவன். திக்குத் திசை தெரியாது ஓடியவனை ஆக்கிரோஷமுடன் பின்பற்றியது ஒரு கரடி.'

ஒரு கரடி மட்டுந்தானா? அதன் தலைமையில் நீரோடைக்கு வந்திருந்த சிறிதும் பெரிதுமான இன்னும் ஐந்து கரடிகளும் கண்ணுச்சாமியைப் பின்தொடரலாயின. நிறைந்த முட்கள், அடர்ந்த புதர்கள், ஓங்கியுயர்ந்த மரங்கள், எதையுமே மதியாது கும்மிருட்டில் கண்ணுச்சாமி ஓடினான். ஆபத்து, போர்முனையில் மட்டுந்தான் என அவன் எண்ணியிருந்தது தவறாகி விட்டது!

* * *

சுமார் அறுபது ஆட்கள் கொண்ட அச் சீனப்படை காட்டினூடே மெல்ல முன்னேறிக் கொண்டிருந்தது. மலைப்பாதை வழியே ரகசியமாக வந்து பின்புறமிருந்து இந்தியர் மேல் திடீரெனத் தாக்கும் ஒரு திட்டம் அது.

''ஓசை செய்யாதீர்கள். பூனைகள் போலப் பதுங்கிச் சென்று புலிகளெனப் பாய்வோம்'' என்றெல்லாம் கூறி அவர்களை ஊக்கி வந்தான் அப்படைத் தலைவன். இன்னும் சில கஜதூரம் கடந்துவிட்டால் அவர்களுக்குப் பெரும் வெற்றிதான்.

'திடுதிடு'வென்று யாரோ ஓடி வரும் ஓசை. சீனர்கள் அனைவரும்

சிலைகள் போல நின்று விட்டனர். அவர்களுக்கு நடுவே வில்லினின்று விடுபட்ட அம்பு போலப் பாய்ந் மனிதன் கண்ணுச்சாமியே என்று சொல்லத் தேவையில்லை.

''யார் அவன்? உளவாளியோ?'' என்றான் ஒருவன்.

''போடா, முட்டாள். பேசாதே. சிறு ஓசை கேட்டாலும் தீர்ந்தது. நடங்கள் வேகமாய்!'' என்றான் படைத்தலைவன்.

''ஐயோ!'' என்ற ஒரு கூச்சல். பின்னணியில் நின்ற ஒரு சீனவீரன் கரடியின் ஆலிங்கனத்தில் சிக்கி விட்டான். இன்னும் சில கரடிகளின் உறுமல்; அவற்றைத் தொடர்ந்து மனிதர்களின் அபயக் குரல். சீனப் படையில் வர்ணிக்க இயலாத கலவரம், குழப்பம்!

அவர்கள் நல்ல தைரியசாலிகள் தான். ஆனால் கரடிகளை அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை!

எவனோ பதற்றத்துடன் சுட்டான். அவனை மற்றவர்கள் கண் மூடித்தனமாகப் பின்பற்றினர். கரடிகளைச் சுடுவதாக எண்ணிக் கொண்டு இருட்டில் ஒருவரை யொருவர் சுட்டுக்கொண்ட விந்தையை என்னென்பது!

அவ்வளவுதான். ஓசை கேட்டுப் பாசறை விழிப்படைந்து விட்டது. அங்கிருந்து துப்பாக்கிகளும் பீரங்கிகளும் முழங்கி நெருப்பைக் கக்கின. எறிகுண்டுகள் வந்து விழுந்து வெடித்தன. ராக்ஷஸ டாங்கிகள் சில சீனப்படையை நோக்கிப் பாய்ந்து வந்தன. சில நிமிஷப் பொழுதில் சர்வ நாசம். சாகாது தப்பிய சீனர்கள் சிறைப்பட்டனர்.

ஆனால் கரடிகளைமட்டும் அங்கே காணோம்!

* * *

ராணுவ அதிகாரி கண்ணுச்சாமியின் முதுகில் ஆதரவுடன் தட்டிக் கொடுத்தார். முந்திய இரவு அவனது கோழைத்தனத்தைப் பரிகசித்துச் சென்ற சிப்பாய் நண்பர்களெல்லோரும் நன்றியும் வியப்பும் நிறைந்த கண்களோடு அவனைப் பார்த்து நின்றனர்.

அதிகாரி பேசலுற்றார்:-''கண்ணுச்சாமி! நீ உண்மையை ஒளிக்காது கூறி விட்டாய். போர்முனையிலிருந்து நீ தப்பியோட முயன்றது பெருங்குற்றம். ஆனால் அதன் பலனோ..? பல நூறு உயிர்களுடன் இந்த யுத்த கேந்திரத்தையும் காத்து விட்டது. உனக்குத் தண்டனையளிக்க எனக்கு மனம் வரவில்லை. அதே சமயத்தில் உன் சேவையைப் பாராட்டி வீரப் பதக்கம் வழங்குவதும் பொருத்தமல்ல. எனவே இவ் விரண்டையும் இணைக்கக் கூடிய ஓர் தீர்ப்புச் செய்கிறேன்.

''தண்டனை—நீ பதவியிலிருந்து நீக்கப் படுகிறாய். கோழைகளுக்கு இந்தியப் படையில் இடமில்லை.''

''பரிசு—உனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பணமுடிப்பு வழங்குகிறது அரசாங்கம். உனது மகத்தான சேவையை நோக்குமிடத்து இது ஓர் சிறிய காணிக்கையேயெனினும் நீ பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்வாய் என நம்புகிறேன்.''

பணமுடிப்புக் கைமாறியது; சூழ நின்ற படையினரின் உற்சாக ஆரவாரம் வானைப் பிளந்தது.

''ரோட்டிலே ஆட்டம்பாம் விற்கக் கூடாதுன்னு தெரியாதா உனக்கு? வா, டேசனுக்கு!''

''ஓகோ! டேசனிலேதான் வந்து விக்கணுமா?''

மறைந்திருப்பவர் யார், யார் ?



மேலே முதல் இரண்டு வரிசைகளில் சில பேருடைய கூந்தல்களைக் காண்கிறோம். அடுத்த இரண்டு வரிசைகளில் சிலருடைய மீசைகளையும் கடைசி வரிசையில் தாடிகளையும் பார்க்கிறோம். இவை யாரைக் குறிக்கின்றன?

—விடை: 128-ஆம் பக்கம்.

ஆடும் பொம்மை

இந்த விநாயகரை, "கொழுக் கட்டை வேண்டுமா?" என்று கேட்டால் 'வேண்டும்' என்று தலை அசைப்பார். "பட்டாஸைக் கண்டால் பயமா?" என்று கேட்டால் 'இல்லை' என்று பக்கவாட்டில் தலையை ஆட்டுவார். இந்த மாதிரி பல வகையான ஆடும் பொம்மைகளை இந்தப் பக்கங்களில் நீங்கள் காணலாம்.

போட்டோ: ராஜன்.

1



2



3

அரைத்த காகித மொத்தையும், சுண்ணாம்புக் கல் பொடியும் சேர்ந்த கலவையை மோல்டு களில்நிரப்பி அச்செடுக்கிறார்கள்.



4

கால்கள், உடம்பு, தலை மூன்றும் தனித் தனியாகச் செய்கிறார்கள். இவற்றைக் கம்பிகள் வைத்து, பொருத்துகிறார்கள். பின்னர் வண்ணங்கள் பூசினால், ஆடும் பொம்மைகள் தயார்!
5

6

SPECTRUM
COLOUR
PENCILS
ஸ்பெக்ட்ரம்
கலர்
பென்ஸில்கள்
சிறுவர்களுக்கு ட்ராயிங், மேப்ட்ராயிங் வரைவதற்கு
மிகவும் அவசியமானவை. பல்வேறு கலரில் உளது
தயாரிப்பாளர்கள்:
தி மதராஸ் பென்ஸில் பாக்டரி
மதராஸ் - 21

சிநேகிதன் சிங்காரம்

'சுகி'

84204

என் சிநேகிதன் சிங்காரம் என்னைப் போலச் சிறுவன். வயது பன்னிரண்டுதான். இவனை நினைத்தாலே சிரிப்புத்தான் வரும்.

நானும் அவனும் படித்த பள்ளியிலே மன்னார்சாமி என்றொரு பள்ளிச் சேவகன் இருந்தான். அவன் பிள்ளைகளிடம் அரையணா, ஓரணாக் காசு பறிப்பதில் எமன். ஒரு சமயம், ''சாமி, சாமி! எனக்குத் தீபாவளிக் காசு வேண்டாம்; எனக்கோ என் பையனுக்கோ சட்டைத் துணி கொடுக்க வேண்டும்'' என்று கேட்டான்.

''ஐயோ! என் அப்பா அடிப்பார். அவ்வளவு காசு இல்லை!'' என்று கத்தினேன்.

''நான் தருகிறேன், மன்னார் சாமி!'' என ஜம்பமாகச் சொன்னான் சிங்காரம். 'இவனாவது கொடுப்பதாவது? அத்தனையும் ஏமாற்று' என எண்ணினேன்.

தீபாவளிக்கு முந்திய நாள் என் வீட்டிற்குள் வந்தான் சிங்காரம். எனக்கு வாங்கியிருந்த துணிமணி, மத்தாப்பு வெடிகளைப் பெருமையாகக் காட்டினேன்.

''டேய் சுப்பிரமணியா, உன்னுடைய காக்கிச் சட்டை எங்கே?''

என்னுடைய சாரண உடைகள் ஸ்டாண்டில் தொங்கிக் கொண்டிருந்ததை நான் நோக்கினேன்.

''அந்தச் சட்டையைக் கொடு.''

''எதற்கு?''

என் கேள்விக்கு அவன் எங்கே பதில் சொன்னான்? காக்கிச் சட்டை அவன் கைக்குள் சிக்கிவிட்டது. உடுத்திய வேஷ்டியைத் தார்பாய்ச்சிக் கட்டினான். மறு கணம் எடு, ஓட்டம்!

அதைக் கொண்டு போய், தெருவிலிருந்த குழாயில் சிறிது நனைத்தான். எங்கள் தெருப் புழுதியை அதிலே புரட்டினான். எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அவனோ ஓடியே போய் விட்டான். நான் தொடர்ந்தேன். தலைவிரி கோலமாக என் சட்டையை மாட்டிக்கொண்டு ஓடினான். அவன் நேராகத் தலைமை ஆசிரியர் வீட்டுக்கு முன் சென்று நின்றான். நான் சிவன் கோவில் மரத்தடியில் பதுங்கியிருந்தேன்.

தெருத் திண்ணையிலே தலைமை ஆசிரியர் தாம்பூலம் தரித்துக் கொண்டு குஷாலாக இருந்தார்.

''ஷ்ஷாமீஈ!''

''யாருடா அவன், கருக்கலிலே வந்து கத்தறது?'' என இறைந்தார் அவர்.

''நான் தானுங்க, சங்கிலி மவன்!''

''யாருடா சங்கிலி?'' எனக் கேட்டார் தலைமை ஆசிரியர்.

''தெருக் கூட்டறவரு மவங்க, நானு. அய்யா ஏளைக்கு இரங்கித் தீவாளி இனாம் தர வேணுமுங்க!''

''நீ யாருடா சின்னப்பய. ஒங்க அப்பனை வரச் சொல்லுடா. போ!''

தொலைவில் நின்ற சிங்காரம் புழுதியிலே விழுந்தான். ''ஷ்ஷாமீ தருமஞ் சாமீ!'' என்று இரக்கம் தொனிக்கப் பேசினான். என் நெஞ்சு அடித்துக்கொண்டது. தலைமையாசிரியரிடம் அகப்பட்டால் பயலைக் குட்டியே கொன்று விடுவாரே!

மாப்பிள்ளை ஒருவர் வந்தார்.

''ஷாமீ!'' என்று ஆரம்பித்தான் சிங்காரம்.

மாப்பிள்ளைக்கு முன்னால், மாமனார் சும்மா இருப்பதா?

''உங்கப்பன் எங்கேடா?''

''குளிரு சொரங்க சாமி! அதனாலே என்னைப் போயி வாங்கிக்கினு வரச் சொன்னாருங்க.''

''சரி, அங்கேயே நில்லு.''

தலைமையாசிரியர் வீட்டுக்குள்ளே போய் ஒரு சட்டைத் துணியைக் கொண்டு வந்து வீசினார். எட்ட நின்றபடியே சிங்காரம் எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டான். உடனே, ''ஏவுலே, அந்த ஓரத்துச் சாக்கடையைத் தள்ளி விட்டுட்டுப் போடா!'' என்றார் தலைமை ஆசிரியர்.

''போறேனுங்க! வெத்திலை சீவலுக்கு ஓரணாக் கொடுங்க!''

''நாளைத் தீபாவளி இனாம் கேட்க வரும்போது தாரேன். இப்போ தள்ளுடா சாக்கடையை!''

''ஆகட்டுமுங்க! இப்ப கொடுத்தா, எங்கய்யா குளிர் சொரத்துக்கு ஒரு சாயா வாங்கிக் குடிப்பாருங்க! ஒரே சொரங்க.. கண்ணு முளியாமக் கெடக்காரு.''

மாமனாருக்கு வராத இரக்கச் சித்தம் மாப்பிள்ளைக்கு வந்தது.

நாலணாவை எடுத்து வீசியெறிந்தார். சிங்காரம் அதனை எடுத்துக் கொண்டான்.

''போறேனுங்க, ஷ்ஷாமீ!''

''சரி சரி, போ..போடா. நாளைக்கு வா, பலகாரம் வாங்க!''



''வர்றேங்க. . சின்ன எசமான்!''

சிங்காரம் சட்டைத்துணியும் கையுமாக வந்தவனைச் சிவன் கோவில் மறைவில் நின்ற நான் சிவுக்கெனப் பிடித்தேன்.

''டேய், இது என்னடா கூத்து?''

''அப்பனே சுப்பிரமணியா, நான் மன்னார்சாமிக்குத் துணி தருவதாக வாக்குக் கொடுத்து விட்டேன். துணியைக் கொடுக்க வேண்டாமா?''

''அதுக்காக என் காக்கிச் சட்டையை எதற்காக மாட்டி வந்தாய்? அழுக்குப் படுத்தினாய்?''

''காக்கிச் சட்டை மேக்-அப் காட்டுவதற்கு!''

''நாளைக்குச் சங்கிலி வந்து துணி கேட்டுத் தகராறு செய்வானே!''

''தெருக் கூட்டுகிறவர்கள் எப்படியும் வாங்குவதை வாங்கிவிடுவார்கள். நமக்கேன் கவலை?''

''உனக்கும் வாங்குவதை வாங்கித் தருகிறேன். நீ ஏமாற்றிய காரியத்தைத் தலைமையாசிரியரிடம் சொல்லுகிறேன்.''

''பேஷாகச் சொல்லு'' என்றவன் புழுதி படிந்த என் காக்கிச் சட்டையைக் கழற்றி, என் மூஞ்சியில் வீசினான். அடுத்து நாலணாவையும் வீசினான்.

''எனக்கு ஏன் காசு?''

''உன் காக்கிச் சட்டைக்குச் சோப்புப் போடுவதற்கு. சோப்புச் செலவையும் தந்துவிட்டேன்!''

சிங்காரம் ராஜ நடை நடந்தான்.

''பள்ளிக்கூடம் திறந்ததும் உன் ஏமாற்றுத் தனத்தைச் சொல்லுகிறேன்'' எனப் பயமுறுத்தினேன்.

தீபாவளி முடிந்து மன்னார்சாமி வந்தான்.

''சாமி சாமீ, நீங்க நல்லா இருக்கணும். எம் மவனுக்குச் சட்டைத் துணி கொடுத்தீங்க. அதை உங்க சேக்காளிச் சிங்காரம் கொண்டு வந்து கொடுத்தாரு. ரொம்ப நல்லா யிருக்கணும் நீங்க!'' என்று என்னை வாழ்த்தினான்.

சிங்காரம் சிரித்துக்கொண்டு வந்தான் அப்போது.

''என்னடா சட்டைத்துணியை நானா கொடுத்தேன்?'' என்றேன்.

''வேற யார்? என்னிடம் ஒரு காக்கிச் சட்டையும் கிடையாது. மேலும் நீ கொடுத்த துணியென மன்னார்சாமி நம்பிக்கொண் டிருக்கிறான். அப்படியானால், காக்கிச் சட்டையுடன் தலைமையாசிரியரிடம் துணி வாங்கியவன் யார்?''

பயல் எமகாதகன்! எத்தனை முன்யோசனையான காரியங்கள்!

வாணம் புரிந்த விந்தை!

எஸ்.வி.நாதன்

"வேலா, சும்மா எடுத்துக் கோடா!''

''ஊஹும்! நான் மாட்டேன், ரவி!''

''ஏண்டா?''

''உன் அம்மா திட்டுவாங்க.''

''அம்மா வருவதற்குள்ளே இதையெல்லாம் கொண்டுபோய், குடிசையிலே வச்சுடு. உம்! ஓடு!''

''எனக்கு என்னமோ பயமாயிருக்கே!''

''ஏண்டா இப்படிப் பயந்து சாகிறே?''

''எனக்கு என்னடா பயம்? நான் பொய் சொன்னேனா? இல்லே, திருடினேனா?''

''அப்போ, சரி. இதையெல்லாம் கொண்டு போ.''

''உன் அம்மாதான் என்னை உன்னோடு பேசக் கூடாது, சேரக்கூடாதுன்னு சொல்றாங்க. நான் நீ கொடுப்பதைக் கொண்டுபோனால் என் முதுகுத் தோலை உரிச்சுடுவாங்களே! நான் மாட்டவே மாட்டேன்.''

''உன் அப்பாதான் இல்லியே, யாருடா இதையெல்லாம் உனக்கு வாங்கித் தருவாங்க?''

''ஏன்? என் அம்மா இல்லியோ?''

''சரிதாண்டா, போடா. உனக்கு என்னை பிடிக்கலே.''

''இந்தா, ரவி! அழ ஆரம்பிச்சுடாதே. கொடு இப்படி; நான் எடுத்துப் போகிறேன்.''

''இப்பத்தாண்டா நீ என் பிரண்டு!''

போர்ட்டிகோவில் உட்கார்ந்தபடி ரவியும் வேலனும் பேசிக்கொண்டிருந்தார்கள். ரவி வற்புறுத்தி மத்தாப்பு, கேப்பு, எல்லாம் கொடுக்கவே வேலன் அவைகளைச் சொக்காயால் மூடி மறைத்துக்கொண்டு குடிசைக்குச் செல்ல முற்பட்டான்.

''என்னடா கொண்டு போகிறாய்?''

குரல் வந்த திசையை இருவரும் பார்த்தார்கள். வெளியே கார் வந்து நின்றதைப் பேச்சு மும்முரத்தில் அவர்கள் கவனிக்கவே இல்லை. ரவியின் அம்மா பூமாவும் அப்பா ராகவனும் போர்ட்டிகோவினுள் வந்துவிட்டார்கள்.

வேலன் நடுங்கி நின்றுவிட்டான். என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான் ரவி.

''ஏண்டா, வேலா! நான் கேட்கிறேன், நீ கொழுக்கட்டை

கண்ணன் முகம்

தீபாவளி மலர் 1960



செய்யும் விதம்

இரண்டணா நாலணாவுக்குப் புலி, சிங்கம், பூதம் அட்டை வாங்கி, முகத்தை மறைத்துக் கட்டிக்கொண்டு உங்கள் தம்பி, தங்கைகளை நீங்கள் பயமுறுத்தியிருப்பீர்கள். ஆனால் தீபாவளியின்போது நீங்கள் கட்டிக்கொள்வதற்கு ஏற்ற அட்டை ஒன்று முன் பக்கத்தில் இருக்கிறது. அழகான கண்ணன் முகம்! இதைக் கெட்டியான அட்டையில் ஒட்டி, கண் பகுதியில் உள்ள வெள்ளையான பாகங்களை வெட்டிவிடுங்கள். மூக்கு வழியாக மூச்சு விடவேண்டுமே! அதற்காக மூக்கைச் சுற்றிப் போடப் பட்டுள்ள புள்ளிகள் வழியே ஒரு பிளேடினால் நறுக்கி விட்டுக் கொள்ளுங்கள். மூக்குப் பக்கம் முகத்தில் கட்டியதும் தூக்கினாற்போல் இருக்கும். பிறகு இரண்டு காதுகளிலும் இரண்டு துளை போட்டு, உங்கள் தலையைச் சுற்றிக் கெட்டியான நூலால் கட்டிக் கொள்ளலாம். ஜோராக இருக்கும்!

விழுங்குபவன்போல் பேசாமலிருக்கிறாயே!'' என்று பூமா எரிந்து விழுந்தாள்.

''ரவிதான் கொடுத்தான்!''

''அவன் கொடுத்தால் நீ எடுத்துக்கொள்வதோ? உன் புத்தி எங்கேடா போச்சு?''

''பூமா! இங்கே என்ன நடந்துவிட்டது? ஏன் இப்படி ரகளை செய்கிறாய்?'' என்று இடைமறித்தார் ராகவன்.

''இந்தாங்க! உங்களுக்கு எதுவுமே தெரியாது! நம் ரவி நல்ல முறையில் வளர வேண்டுமானால் இந்த வேலனைப் போன்ற பஞ்சைப் பயல்களுடன் பழகக்கூடாது. அவர்களுடைய மட்டமான புத்தி ரவிக்கும் வந்துவிடும்!'' என்றாள் பூமா.

''நீ நடந்துகொள்வது சரி இல்லை, பூமா! இருப்பவன் இல்லாதவன் என்ற வேறுபாட்டைப் பிஞ்சு உள்ளங்களில் புகுத்தலாமா?''

வேலனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே சென்றான் ரவி.

ராகவனின் ஒவ்வொரு சொல்லும் பூமாவைக் கூர் வேலெனத் துளைப்பதுபோலிருந்தது.

''உனக்குப் பட்டாசு, வாணம், சொக்காய் எல்லாம் பொன்னம்மாவிடம் கொடுத்து அனுப்புகிறேன். ஆனால் நீ இந்தப் பக்கம் தலைக் காட்டக் கூடாது; ரவியோடு சேரவும் கூடாது. என்ன புரிகிறதா?''

வேலன் 'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலை அசைத்தான்.

வேலனின் தந்தை அந்தப் பங்களாவில் பல ஆண்டுகளாக வேலை செய்துவந்தான். சென்ற வருடம்தான் வேலனையும் பொன்னம்மாவையும் இந்த உலகில் தவிக்க விட்டுவிட்டு ஒரு வாரக் காய்ச்சலில் போய்விட்டான். அதற்குப் பின்னர் அவர்களை வேறெங்கும் வேலைக்குப் போக வேண்டாமென்று சொல்லி, தோட்டத்துக் குடிசையிலேயே தங்கச் செய்தார் ராகவன். பொன்னம்மா அவர்கள் வீட்டில் வேலை செய்து வந்தாள்.

வேலன் சிறுவனாக இருந்தாலும் அறிவுள்ள பையன். ராகவனின் ஒரே புதல்வனான ரவியிடம் வேலனுக்கு எப்படியோ ஒரு வலுவான பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. ஒரு நிமிடமாவது வேலனைப் பார்க்காவிட்டால் ரவிக்கு இருப்பே கொள்ளாது.

வேலனைக் கண்டால் பூமாவுக்கு ஒரு துளிக்கூடப் பிடிக்காது. தன்னுடைய அருமை மகன் வேலனுடன் சேர்ந்து விளையாடுவதை அவள் வெறுத்தாள். ரவியைக் கண்டித்தாள்; பயமுறுத்தினாள். பேசக்கூடாது என்று எச்சரித்தாள். என்றாலும், அந்த இளம் உள்ளங்களில் வேரூன்றிவிட்ட பாசத்தின் பிணைப்பைத் துண்டிக்க முடியவில்லை அவளால். பூமாவின் கண்களில் படாமலேயே அவர்கள் கூடி விளையாடி மகிழ்ந்தனர். ராகவன் பூமாவின் போக்கை விரும்பவில்லை. ஆனாலும் அவரால் அவளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

பொழுது விடிந்தால் தீபாவளி. போர்ட்டிகோவில் உட்கார்ந்தபடி ரவி கம்பி மத்தாப்புக் கொளுத்திக்



பலூன்காரன்: (தன் மகனிடம்) பட்டாசெல்லாம் வாங்கித் தர முடியாது. வேண்டுமானால், இந்தப் பலூன்களை நசுக்கி உடை! படார் படார்னு வெடிக்கும்!



கொண்டிருந்தான். அப்போது இரவு ஏழு மணிக்கு மேலிருக்கும்.

போர்ட்டிகோவின் வெளியில் நின்றவாறு வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த வேலனைத் தன்னிடம் வரும்படி கையை ஆட்டி அழைத்தான் ரவி. அங்கே தான் வர முடியாதென்று வேலன் தலையசைத்தான். ரவிக்கு முகம் சுண்டிப் போயிற்று.

பெரியவர்களுக்குத் தெரியாமல் தான் எடுத்துவந்த ஒரு பூ வாணத்தைத் தரையில் வைத்தான் ரவி. குச்சி மத்தாப்பு ஒன்றைக் கொளுத்திச் சட்டி வாணத்தின் வாயில் வைத்தான். என்ன இது! ரவி குனிந்தபடியே தலை நிமிராமல் அந்த வாணத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறானே! இன்னும் ஒரு நொடியில் வாணம், 'புஸ்' என்று பற்றி எரிய ஆரம்பித்துவிடும். ரவி அந்த நிலையிலேயே இருந்தால் அவனுடைய பால் வடியும் முகத்தை அந்தப் பொல்லாத வாணம் நன்றாய்ப் பதம் பார்த்துவிடுமே!

இதையெல்லாம் பார்த்தபடி நின்றுகொண் டிருந்த வேலன் ஏதோ ஒரு சக்தியால் தூண்டப் பட்டவன்போல் அங்கே ஓடி வந்தான். வாணத்தின்மேல் தன் வலது காலை வைத்து அழுத்திக் கொண்டே ரவியை அப்பால் தள்ளிவிட்டான்.

''அம்மா!'' என்று கூக்குரலிட்ட வண்ணம் ரவி தரையில் சாய்ந்து விழுந்தான்.

''ஐயோ!'' என்று அலறியபடி வேலன் வலது காலைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு குதித்தான்.

ஆம்! அந்த வாணம் அவனுடைய உள்ளங்காலைப் பதம் பார்த்து விட்டது! தீக் காயம் ஏற்பட்ட தால் அவன் துடி துடித்தான்.

வெளியிலிருந்து வந்த கூக் குரலைக் கேட்டு ராகவனும் பூமா வும் உள்ளேயிருந்து வந்தார்கள். பொன்னம்மாவும் ஓடி வந்தாள்.

''என்ன நடந்தது?'' என்று பூமா கலக்கத்துடன் கேட்டாள்.

ரவி நடந்ததைக் கூறினான். ராகவனின் கண்களில் நீர் துளும்பி யது. பூமாகூட அதிர்ந்து போனாள். பொன்னம்மாள் பார்த்துக் கொண்டே சிலைபோல் நின்றாள்.

காகிதக் கப்பல்

தமிழழகன்

ஓடுகின்ற தண்ணீரிலே
ஓடுமாம் கப்பல்;—அது
உற்றுஉற்றுப் பார்க்கும்படி
போகுமாம் கப்பல்!
ஆடுகிற தண்ணீரிலே
அசையுமாம் கப்பல்;—அது,
அசைந்தசைந்து நீர்கிழிய
விரையுமாம் கப்பல்!
கூடுகிற தண்ணீரிலே
கொஞ்சுமாம் கப்பல்;—அது,
கொஞ்சிக் கொஞ்சி மழை வெள்ளத்தில்
குதிக்குமாம் கப்பல்!
சாடுகிற தண்ணீரிலே
சாயுமாம் கப்பல்;—அது;
சாய்ந்த பின்னே காண்பதுண்டோ
காகிதக் கப்பல்!

★

புள்ளி மான்

திருச்சி வாசுதேவன்

துள்ளிக் குதிக்கும் புள்ளிமான்
தூய்மை யுள்ளம் கொண்டமான்
உள்ளம் கவரும் விழிகளால்
உவகை யூட்டும் அழகுமான்!
அருவிப் பனிநீர் அருந்திடும்;
அடரும் புல்லைப் புசித்திடும்;
குருவிப் பாட்டுக் கேட்பதில்
கொள்ளை மகிழ்ச்சி கொண்டிடும்!
கொன்றை மலர்கள் சரங்களாய்க்
குலுங்கும் எழிலைக் காணவே
கன்றை யருகில் அழைக்குமாம்;
கனியும் அன்பை விளக்குமாம்!
பொட்டுப் பொட்டாய்ப் புள்ளிகள்
பொலியும் பொன்னார் அதனுடல்
தொட்டுப் பார்ப்போம் தோழியே,
சோலை சென்று மாலையே!





பணம்

கே. சுந்தரேசன்

ஒரே இருட்டு; வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. குமார் வேகமாக வீடு நோக்கி நடந்தான். அவன் மனம் 'திக்திக்'கென்றது. பள்ளிக்கூடம் விட்டு வீட்டிற்குப் புறப்பட்ட அவனை வேணு சினிமாவுக்குக் கூப்பிட்டான். குமாருக்குச் சபலம் தட்டியது. 'வீட்டில் ஏதாவது சொல்லிக்கொள்ளலாம்' என்ற வேணுவின் போதனை அவனை ஊக்குவித்தது. ஜாலியாகச் சினிமாப் பார்த்து விட்டுத் திரும்பிக்கொண் டிருந்தான் அவன். வேணுவை வீட்டில் விட்டு, சந்து நுழைந்து வரும்போது காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து எடுத்தான். அது ஒரு பர்ஸ்! ஒரு கணம் சுற்று முற்றும் பார்த்தான். ஒருவரையுமே காணோம். சட்டென்று அதை நிஜார் பாக்கெட்டில் போட்டுக்கொண்டு நடந்தான்.

அவனுக்கு எதன் மேலும் புத்தி செல்லவில்லை. வீட்டில் சினிமாவுக்குப் போனதற்கு என்ன பதில் சொல்லி, எப்படி அப்பாவிடமிருந்து தப்புவது என்ற எண்ணமும் மறைந்து விட்டது. அவன் புத்தி 'பர்ஸி'ன் மேலேயே இருந்தது. மெதுவாக எடுத்தான்; திறந்தான்.

'நூறு ரூபாய் நோட்டு--ஒரு கப்பலுக்கான பாஸ் போர்ட்!'

அவன் மனம் பெருத்த யோசனையில் ஆழ்ந்தது. ஒரே குழப்பம்!

வீடு நெருங்கிவிட்டது. மெதுவாக உள்ளே அடியெடுத்து வைத்தான். உள்ளே அவன் பெற்றோர்கள் பேசிக்கொண்டது அவனைத் திடுக்கிட வைத்தது. ஸ்தம்பித்து நின்றான்.

''அவன்தான் எடுத்துண்டு போயிருப்பான். . வரட்டும் . . வரட்டும். .''

''நன்னா தேடிப் பாருங்கோ. அவனுக்கு ஏது அவ்வளவு தைரியம்?''

''இல்லவே இல்லே. பெட்டியில் வைத்தேன்; அதில் இல்லே. சந்தேகத்துக்கு, பர்ஸ், மேஜை டிராயர், பீரோ எல்லாம் பார்த்து விட்டேன். அந்தப் பயல்தான் எடுத்திருக்கணும். பள்ளிக்கூடம் போனவன் அதனுல்தான் இது வரையில் வரல்லே. அந்த வேணுவோடே சிநேகம் வச்சுண்டு திருடக் கூடக் கத்துண்டுட்டான். நூறுரூபாய் நோட்டு! சொளையாப் போயிட்டுதே! என்ன செஞ்சானே, ஏது செஞ்சானே? வரட்டும் சொல்கிறேன்.''

குமாரின் அப்பா கோபாவேசமாக நின்ருர். குமாரைப் பார்த்துவிட்டார்.

குமாருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

'சினிமாவுக்குப் போய் விட்டு வந்ததற்கும், பையிலே நூறு ரூபாய் இருப்பதற்கும்—கடவுளே! அகப்பட்டுக் கொண்டால் திருட்டுப் பட்டம் நிச்சயம்' இதை நினைக்கும்போது உடல் பதறியது.

''என்னடா செய்தாய் ரூபாயை எடுத்து?'' - கேள்வியோடு 'பளீர்' என்று ஓர் அறை விழுந்தது.

''நான் எடுக்கவே இல்லேப்பா; இல்லவே இல்லே.''

''பொய்யா சொல்கிருய்? இவ்வளவு நாழி கழித்து வரக் காரணம் என்ன?''

''வேணுவோடே சினிமாவுக்குப் போனேம்பா. அவன் செலவில்லாமே அழைச்சிண்டு போனுன்.''

''ஓகோ, இது யாரை ஏமாற்றும் வித்தை! உண்மையைச் சொல்..''

குமாருக்குப் புதுக் கவலே வந்துவிட்டது. பையில் கையை விட்டுப் பர்ஸையும் பணத்தையும் பார்த்து விட்டால்..! பின்பு என்ன சொன்னுலும் எடுபடாது. திருடனுகிவிடுவது நிச்சயம்!

செய்வதறியாது விழித்தான். திடீரென்று அவனுக்கு ஒரு யோசனே உதயமாகியது.

''அம்மா.. தலே சுற்றுகிறதே'' என்று கத்தினுன். வயிற்றை இரண்டு கையாலும் பிடித்துக் கொண்டே கீழே விழுந்தான்.

''ஐயையோ! அடி எங்கேயோ பலமாக விழுந்து விட்டது. ஓடிப் போய் டாக்டரை அழைச்சிண்டு வாங்களேன்'' என்று பதறினுள் குமாரின் தாய். பயந்தே போனுர் அவன் தந்தை.

''அவனுக்கு அதிர்ச்சி தவிர வேறு ஒன்றுமில்லே. அவனே ஒன்றும் செய்யாமல் நிம்மதியாகத் தூங்க விடுங்கள்'' என்ருர் வந்த டாக்டர்.

குமாரை அவன் அறையில் படுக்க வைத்து விட்டு, சத்தம் செய்யாமல் போனுர்கள்.

தலேயிலே கூடை; வாயிலே மாங்காய்!

போட்டோ: **புஷ்பத்துறை சுப்பிரமணியம்.**

'அப்பாடா!' என்று பெரு மூச்சு விட்டான் அவன். மறுபடி யும் அவன் கண்முன் 'பணம்' வந்து நின்றது.

'பணத்தை இரவே வேணுவிடம் சேர்த்துப் பத்திரப்படுத்தி விட வேண்டும். பிறகு அதை உரியவ ரிடம் சேர்ப்பித்து விடலாம்' என எண்ணினுன் அவன்.

மெதுவாக எழுந்தான். அடி மேல் அடி வைத்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறினுன். விடுவிடென்று நடந்து வேணுவின் வீட்டை அடைந்தான்.

வாசற் பக்க அறையின் ஜன்னல் கதவு திறந்திருந்தது. உள்ளே வேணு தூங்கிக்கொண் டிருந்தான்.

''டேய்..டேய்..வேணு!''

வேணு எழுந்துவிட்டான்.

''என்னடா குமார்..இந்த நேரத்தில்..உள்ளே வா..எங்க அப்பாதான் ஊரில் இல்லையே!'' என்று எழுந்து கதவைத் திறந்தான் அவன்.

''டேய்..ஒரு உபகாரம் செய் யடா! இந்தப் பர்ஸைப் பத்திரமாக வைத்துக்கொள். நாளை மற்ற விவ ரங்களைச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு ஓட்டமும் நடையு மாக வீட்டைநோக்கி வந்தான்.

வேணுவுக்குத் தூக்கமே வர வில்லை. ''நூறு ரூபாய்! தீபாவளி சினிமாக்கள்!....''

ஒரே ஒரு பொய்—குமார் ஏமாற்றமடைவான்! திருட னுக்குத் தேள் கொட்டிய கதையாகிவிடும்.

பொழுது விடிந்தது.

வேணு எழுந்து தன்னைச் சிங்காரித்துக் கொண்டு வெளியே கிளம்பினுன்.

''சார்! நூறு ரூபாய்க்குச் சில்லறை இருக்கா?''

அவன் கேட்ட ஆள் டாம் பீகமானவர்.

''என்ன தம்பி! காலங்காத்தாலே நூறு ரூபாய்க்குச் சில்லறை கேக்கறே?'' என்றவாறே நோட்டைக் கண்ட அவர் அவனை உற்றுப் பார்த்தார்.

''இந்த நோட்டு ஏது, தம்பி?''

''எங்க அப்பா மாத்தியாரச் சொன்னாரு, ஸார்!''

''டேய்..! ..எவன் கிட்டேடா கள்ள நோட்டை மாத்தப் பாக்கறே! போலீசைக் கூப்பிடட்டுமா?'' ஆசாமி குதித்தார்.

வேணுவுக்குச் சர்வ நாடியும் அடங்கியது. ஒருவனை ஏமாற்றிப்



''ஏண்டா மண்டு! சமையலுக்கு வேணும்னு வெங்காயத்தையும் மிளகாயும் வாங்கிண்டு வாடான்னு, வெங்காய வெடியையும் மிளகாய் வெடியையும் வாங்கிண்டு வந்து நிக்கறியே!''

பலன் காண நினைத்தது அல்லவா ஆபத்தாகிவிட்டது!

''ஸார்..ஸார்..மன்னிச்சுடுங்க ஸார்! இது கீழே கிடந்து கிடச்சது ஸார்..என்னை விட்டுடுங்க ஸார்'' அழ ஆரம்பித்து விட்டான் வேணு.

''போடா...போ..இன்னிக்குத் தப்பினே நீ!'' என்றார் அந்த டாம்பீகப் பேர்வழி.

ஓட்டம் பிடித்தான் வேணு. அவன் போனதும் அவர் முகத்திலே புன்சிரிப்பு.

'ஏமாந்த சோணகிரி. நாம் சொன்னதை அப்படியே உண்மை என்று கருதி நோட்டைக்கொடுத்து விட்டு ஓடுகிறானே?' என்று எண்ணமிட்டவாறே நடந்தார் அவர்.

'ஆனந்தா லாட்ஜ்'க்குள் நுழைந்து ஆனந்தமாக ஸ்வீட்..காரம்..கூல்டிரிங்க்..எல்லாமாகச் சாப்பிட்டார்.

ஒரு கனைப்புக் கனைத்துக் கொண்டு அலட்சியமாகப் பில்லையும் நோட்டையும் மேஜை மீது வைத்தார்.

ஹோட்டல் முதலாளி நோட்டை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு திருட்டு நோட்டுகள் உலவுவதால் நம்பரைப் பரிசோதித்தார்.

''ஓய்..பெரியவரே! இந்த நோட்டு உமக்கேது? உண்மையைச் சொல்லும்'' என்று மிரட்டியவாறு போனைக் கையில் எடுத்தார்.

''ஸார்..யாரைப் பார்த்து இந்தக் கேள்வி? கள்ள நோட்டுன்னு நினைச்சீரா?''

''கள்ள நோட்டென்று யாரையா சொன்னது? இது கெட்டுப் போன என்னுடைய நோட்டு. இதனுடன் இருந்த பாஸ்போர்ட் எங்கே? போலீஸிலும் இந்த நம்பரைத் கொடுத்து, கம்ளெயிண்ட் கொடுத்திருக்கிறேன். ஊம்..'' முதலாளி இடத்தைவிட்டு எழுந்தார்.

போலீஸ் வந்து விட்டது. 'பெரிய மனிதர்' பிரமித்தார். கைகள் நடுங்கின. என்ன சொல்வதென்று புரியவில்லை. போலீஸ் அவரைக் கைது செய்து 'பாஸ் போர்ட்டு'க்காக அடித்துத் துன்புறுத்தினர்.

''ஸார்..ஸார்!'' என்று அழைத்தான் குமார்.

''ஸார்..இந்தப் பாஸ் போர்ட் உங்களுடையதுதானே? வழியில் கீழே கிடந்து கிடைத்தது. தயவு செய்து என்னை மன்னியுங்கள், ஸார். இதனுடன் இருந்த நூறு ரூபாயை நான் பறிகொடுத்து விட்டேன். நீங்கள் என்னை நம்ப மாட்டீர்களா? உண்மை ஸார்!'' நடந்ததைச் சொல்லி ஆனந்த லாட்ஜ் அதிபரிடம் மன்னிப்புக் கேட்டான் குமார்.

அவர் அவனைத் தட்டிக் கொடுத்தார். பணம் கிடைத்து விட்டது எனச் சொல்லி அவனுக்கு ஐம்பது ரூபாய் பரிசு கொடுத்தார்.

அவனுக்கு அதை வாங்க மனம் வரவில்லை. வேணுவைப் பற்றி அவர் போலீஸுக்குச் சொல்லாமல் இருக்க வேண்டினான்.

வீடு சென்றதும் அவன் அம்மா அவனை ஆவலோடு வரவேற்றாள்.

''நூறுரூபாய்ப் பணத்தை வாங்கி மணியார்டர் செய்துவிட்டு மறந்து விட்டார். இன்று மணியார்டர் ரசீது வந்ததும்தான் உண்மை விளங்கியது. வரவர அப்பாவுக்கு ஞாபக சக்தி குறைந்து விட்டது'' என்று அங்கலாய்த்தாள் அம்மா.

''சரி போனது போகட்டும். கடைக்குக் கிளம்பு!'' என்றார் அப்பா.

மயிலும் குயிலும்

'லைமன்'

குயில்: வாவா அக்கா, மயிலக்கா—நல்ல
வசந்த காலம் பாரக்கா!
பூவாப் பூத்துக் குலுங்குதக்கா—எங்கும்
புதுத்தளிர் விட்டுத் துலங்குதக்கா!
உனக்கோ நீண்ட பசுந்தோகை—நீ
உல்லாச நாட்டியம் ஆடிடலாம்;
எனக்கும் நிரம்ப இனியகுரல்—நான்
எக்காள சங்கீதம் பாடிடலாம்.
பச்சைத் தோகைப் படம்விசிற—அதில்
பலநிற மயில்கண் மணிசிதற
இச்சை யுடன்நீ ஆடிவிட்டால்—நானும்
இன்குரல் எடுத்துப் பாடிவிட்டால்
ஆகா, எவ்வளவு புகழக்கா—என்
ஆசையும் இதுதான் மயிலக்கா;
பாகாய் இருக்குமென் பாட்டக்கா—நான்
பாடிட நடனம்நீ செய்யக்கா!

மயில்: போதுமே பூங்குயில் தங்கச்சி—வெகு
பொல்லாத வெப்பம் தங்கச்சி!
ஏதுமே செய்திட முடியாது—ஹூம்
என்னடி வசந்த காலமிது?
வேர்த்து வேர்த்துக் கொட்டிடவே..சதா
வெய்யில் போட்டு வாட்டிடவே
பார்த்தாய் நல்ல பருவம்தான்—நான்
பரத நாட்டியம் ஆடிடவே!
கார்காலம் வரும்: ஆடுகிறேன்—ஒரே
காற்றாய் வீசும் ஆடுகிறேன்;
வாரிய வர்ணக் குழம்பாலே—பெரும்
வானவில் போடும்; ஆடுகிறேன்!
அஞ்சாறு மாதம் போகட்டும்—நல்ல
ஐப்பசி கார்த்திகை ஆகட்டும்!
அஞ்சாமல் ஆடுவேன் தங்கச்சி—நீயும்
அப்போது பாடிடு தங்கச்சி!

குயில்: ஐப்பசி கார்த்திகை கார்காலம்—அக்கா
அடைமழைக் காலம் அக்காலம்!
எப்படிப் பாடுவேன் மயிலக்கா—அது
என்னால் தாங்காத குளிரக்கா!

வேறு

காக்கை: ஆட்டமில்லை பாட்டுமில்லை காகாகா!
ஆசையெல்லாம் தோசையாச்சு காகாகா!
காட்டுமயில் குதிக்கவில்லை காகாகா!
கரிக்குயிலும் கத்தவில்லை காகாகா!



விடை: 128-ஆம் பக்கம்


4
5
6
7



விரல் வாய்ப்பாடு

'மூர்த்தி'

உங்கள் கைகளுக்குள் ஒன்பதாம் வாய்பாட்டை அடக்கிக்கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒன்று முதல் பத்து வரையிலான பெருக்கற் பலன்களை உங்கள் கை விரல்களைக் கொண்டே காணலாம்.

உங்களுக்கு '3 × 9 = என்ன?' என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். விரல் வாய்பாடு மூலம் இதற்கு விடை காண, முதலில் நீங்கள் உங்கள் இரண்டு கைவிரல்களையும் பிரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது இடது புறத்திலிருந்து மூன்றுவது விரலை மடக்கிக் கொள்ளுங்கள். மடக்கிய விரலின் இடது பக்கத்தில் உள்ள விரல்களின் எண்ணிக்கை, பெருக்கற்பலனின் பத்து ஸ்தான எண்ணைக் காட்டும். மடக்கிய விரலின் வலது பக்கத்தில் உள்ள விரல்களின் எண்ணிக்கை விடையின் ஒன்று ஸ்தான எண்ணைக் குறிக்கும். இப்போது மடக்கிய விரலின் இடது பக்கத்தில் இரண்டு விரல்களும் வலது பக்கத்தில் ஏழு விரல்களும் உள்ளன. எனவே விடை இருபத்தேழு.



இலவசம்

அ. சுவாமிநாதன்

குழந்தைக்கு முடிப் பிரார்த்தனை செலுத்த வேண்டி மனைவியுடன் வைத்தீசுவரன் கோயில் வந்திருந்தோம். வந்த காரியம் முடிந்து கும்பகோணம் செல்லவேண்டி ரெயிலடிக்கு வந்து சேர்ந்தோம்.

ரெயில் எத்தனை மணிக்கு வரும் என்று தெரிந்து கொள்ள ஸ்டேஷன் மாஸ்டர் அறையை அணுகினேன்.

அங்கே எனக்கு முன்னுல் ஒருவர் ஜன்னலைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார். கறுத்த ஷெர்வாணி அணிந்திருந்த அவர் முதுகுதான் தெரிந்தது. 'விழுப்புரம் போகும் வண்டி ஒரு மணிக்கும், தஞ்சாவூர் மார்க்கம் போகும் வண்டி இரண்டு மணிக்கும் வரும்' என்ற குரல் உள்ளிருந்து வந்தது.

கறுப்பு ஷெர்வாணிப் பேர்வழி திரும்பிய போது அவர் முகத்தைக் கண்டேன். தூக்கி வாரிப் போட்டது. சிறு வயதில் என் விளையாட்டுத் தோழனை சிங்காரம்தான் அப்படி அடியோடு மாறிக் காட்சி தந்தான்.

''அடேடே. . .'' என்று அவனும் என்னைப் புரிந்து கொண்டு பேச ஆரம்பித்துவிட்டான்.

''என்னப்பா, . . .என்ன செய்து கொண்டிருக்கிருய்?'' என்றேன் நான்.

சிங்காரம், பதிலுக்கு மடமட வென்று தன் கறுப்பு அங்கிப் பொத்தான்களைக் கழற்றி ஏராள மான மெடல்கள் அணிந்துள்ள தன் வெல்வெட் வெயிஸ்ட் கோட்டைக் காட்டினுன்.

''இந்த ஊரில் என் மந்திரக் காட்சி நடக்கிறது, வேலையை முடித்துவிட்டு அடுத்த வண்டியில் ஊருக்குப் புறப்பட வேண்டும்.''

''நீ மந்திரவாதி யாகிவிட்டாயே, பேஷ்! எத்தனை மணிக்கு இந்த ஊரில் நடக்கப் போகிறது?''

''இன்னும் அரை மணியில் ஆரம்பமாகும். வாயேன்; இப்போ மணி பதினென்றுதானே ஆகிறது? ஒரு மணிக்குள் திரும்பிவிடலாம்!'' என்று கூறி, தன் ஷெர்வாணியின் இடது பக்கம் கைவிட்டு, பையிலிருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்து நீட்டினுன்.

அதை வாய்விட்டுப் படித்தேன்:—

இலவச அனுமதி!

புரொபசர் தீஷ் அவர்களின்

மாயாஜால, மந்திரக்காட்சிகள்! அநேக மயிர்க்கூச்செறியும் அற்புதங்கள்! நாலடி அகலமுள்ள மூங்கில் கூடைக்குள் ஐந்தரை அடி இளம் பெண் மறைந்து திரும்பும் அதிசயம்.

காணத் தவறுதீர்கள்!

சிங்காரத்தின் மந்திர வேலைகளைப் பார்க்கும் விருப்பம் எனக்கு இருந்ததால் நான் மனைவி பின் தொடர, மந்திரக் காட்சி நடக்குமிடம் நோக்கி நடந்தேன்.

சிங்காரத்துக்கு அப்பா அம்மா யாரும் கிடையாது. யார் வீட்டிலோ வளர்ந்தான். படிக்க முடியவில்லை. பதினெட்டு வருஷத்திற்கு முன்னால் எங்கள் ஊருக்கு வந்த பம்பாய் ஷோவுடன் ஊரை விட்டுப் போனவன், சிங்காரம் என்ற பெயரை தீஷ் என்று மாற்றிக்கொண்டு சொந்த ஜில்லாவுக்குத் திரும்ப வந்திருக்கிறான். ஏராளமான தங்க மெடல்கள் வாங்கிவிட்டது ஆச்

சரியமல்ல; இலவசமாகக் காட்சி நடத்துவது ஆச்சரியமே! ஐயாயிரத்திற்கு மேற்பட்ட ஜனக்கும்பல். உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல் பல பெண்கள் கைக்குழந்தைகளுடன் வந்திருந்ததையும் நான் கவனித்தேன்..

மேடையில் காட்சி ஆரம்பமாகியது. சிங்காரம் - இல்லை - தீஷ் சிரம் தாழ்த்தி வணங்கி, ஹிந்தியில் பேசினான்!.......அதை வேறோர் இளைஞன் தமிழில் மொழி பெயர்த்துச் சொன்னான்!..

மணலை ஜனங்களிடம் கைநீட்டிக்கொடுத்து, ஒரு மலரை நினைத்துக் கொள்ளச் சொல்லிப் பின்னர்

கையில் கொடுக்க, வாங்கியவர் அதே வாசனை இருப்பதாக வாய் விட்டுக் கூறினார். கண்ணைக் கட்டிக்கொண்டு, சீட்டுக் கட்டை கொடுத்து ஒரு சீட்டை எடுக்கச் சொல்லி, அதன் ஜாதி, நம்பர் எல்லாவற்றையும் சரியாகச் சொன்னான். குரங்கின் எலும்புக் கூடு அவன் சொன்ன திக்கில் கை காட்டிற்று. இதுபோன்ற காட்சிகள் நடந்து முடிந்தன. பிறகு ஓர் அறிவிப்புக் குரல் ஒலிபரப்பி மூலம் எழுந்தது:

பொதுமக்களுக்கு ஓர் அறிவிப்பு!

நீங்கள் ஆவலுடன் எதிர் பார்க்கும் கூடையில் பெண் மறையப்போகும் காட்சிதான் எமது கடைசிக் காட்சியாகும். அதற்கு முன்பு பத்து நிமிஷ நேரம் இடைவேளை.

கறுப்பு உடை அணிந்து வந்த ஓர் இளம் பெண்ணைக் கயிற்றால் கட்டி அவளைக் கூடைக்குள் போட்டு மறையச் செய்து, பின் திரும்பி வரும் கடைசிக் காட்சி முடிந்தது. மண்டையைப் பிளக்கும் வெய்யிலால் பலருக்கு முகம் கறுத்து விட்டது. நாங்கள் திரும்பினோம்.

ரெயில் வந்து ஏறிக்கொண்டோம். எதிரில் ஒரு கூட்ஸ் வண்டி வருவதாகவும் பத்து நிமிஷம் கழித்தே வண்டி புறப்படுமென்றும் தெரிய வந்தது,

''அதோ பாருங்கள்!'' என்றாள் மனைவி. அந்தத் திசையில் திரும்பினேன்.

புரொபசர் தீஷ் - சிங்காரம் - சாதாரண பைஜாமா, ஜிப்பா சகிதம்

திருட்டுப் பூனையும்



கையில் ஒரு தோல் பையுடன் வருவது தெரிந்தது.

வண்டியை விட்டு இறங்கி, அவனைக் கைதட்டிக் கூப்பிட்டேன்.

''என்ன சமாசாரம்? . . . நீ என் ஜால வேடிக்கைகளைப் பார்க்க வந்திருந்தாயா?''

''வந்தேன், அவதியும் பட்டேன். அதுபற்றித்தான் சொல்ல வந்தேன்! இப்படி எல்லாரையும் வெயிலில் நிற்கச் செய்தாயே! ஏதாவது ஒரு நிழலில் இதை நடத்தக் கூடாதா?''

''நடத்தலாம்; ஆனால் இப்படித்தான் செய்ய வேண்டுமென்று என் கம்பெனி முதலாளியின் உத்தரவு! . . .''

''முதலாளியா? மந்திரம் கற்றுத் தந்த குருவா?''

''குரு காலமாகி ஐந்து வருஷமாகிவிட்டது. அந்த இடைவேளையின்போது நீ ஏதாவது சோடா, கலர் வாங்கிச் சாப்பிட்டாயா? . . .''

''ஆமாம். இல்லாவிட்டால் தாகத்தால் சுருண்டிருப்போம் . . .''

''அப்படிச் சொல்லு! அந்தக் கிரஷ் தயாரிக்கும் 'நாகலோகம் அண்டு கோ' என்ற ஒரு சோடா கம்பெனிதான், ஊர் ஊராகச் சென்று வர என்னை நியமித்திருக்கிறது. மந்திரக் காட்சிக்கு இலவச அனுமதி என்று துண்டுப் பிரசுரம் வெளியிட்டவுடன், கூட்டம் ஏராளமாகக் கூடிவிடுகிறது. அப்போது இடைவேளையில் - வெயில் நேரத்தில் - கம்பெனியின் சோடா, கலர் தயாரிப்பை ஒலிபெருக்கியில் விளம்பரப்படுத்தி, உடனே ஆட்கள் மூலம் விற்பனை செய்கிறோம்!'' என்றான் தீஷ் ஆகிவிட்ட சிங்காரம்.

நான் பெருமூச்சு விட்டேன்!

முரட்டுப் புலியும்



போட்டோ: சங்கர்

புராணக் காட்சிகள்

மேலே ஒவ்வொரு படமும் ஒரு புராணக் கதையை நமக்கு நினைவூட்டுகிறது! எங்கே, அவை என்னவென்று சொல்லுங்கள் பார்க்கலாம்!

விடை: 128-ஆம் பக்கம்

செல்வம்

ராஜம்

நிகழ்ச்சி-1

(செல்லாயி தன் குடிசையின் முன் விடியற் காலை சாணம் தெளித்துப் பெருக்கிக்கொண்டிருக்கிறாள். அப்பொழுது ''ஜல்! ஜல்!! ஜல்!!!'' என்று, அன்றைக்கு முதல் நாள் கேட்ட அதே சதங்கை ஒலி மீண்டும் கேட்கிறது.)

செல்லாயி: யார், லட்சுமி தேவியா?

தேவி: ஆமாம், நான்தான்! உன் கணவனைக் கேட்டாயா?

செல்: கேட்டேன், அம்மா!

தேவி: என்ன சொன்னான்?

செல்: (தயங்கிக்கொண்டே) உங்களை வந்து..

தேவி: ஏன் தயங்குகிறாய்? தைரியமாகச் சொல்லு!

செல்: தாங்கள் ஒரே இடத்தில் தங்கமாட்டீர்களாம்...

தேவி: ஆமாம்! கௌரவம் இல்லாத இடத்தில் தங்கமாட்டேன். என்னுடன் தைரியலட்சுமியும் தங்கமாட்டாள். அதனால் எங்களை அறிந்தவர்கள், ''செல்வோம்'' என்று குறிப்பிட்டு, நான் அளிக்கும் அந்தஸ்திற்குச் செல்வம் என்று சொல்கிறார்கள்.

செல்: அவ்வளவும் உண்மை! அதனால்தான் என் கணவர் நிலையில்லாத தங்களை வெறுக்கிறார்.

தேவி: நான் உன்னுடன் இருக்க விரும்புகிறேன் - பிரியப்படுகிறேன். அடக்கமான உன்னிடம் அடைக்கலம் புக எண்ணுகிறேன். தட்டாதே, அம்மா!

செல்: நான் என்ன செய்வது, தாயே! 'நமக்கு இந்தக் குடிசை போதும். இருக்கும் காணி நிலம் போதும்' என்கிறார் என் கணவர்.

தேவி: அப்படியானால் என் ஆசை, நிராசையாக வேண்டியது தானா?

செல்: வேண்டாம், தாயே, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது.

தேவி: என்ன யோசனை அது?

செல்: தாங்கள் போகும்போது என்னிடம் சொல்லிவிட்டுப் போவதாகச் சத்தியம் செய்து கொடுங்கள்! என் கணவருக்கு நான் ஆறுதல் சொல்லிக் கொள்கிறேன்.

தேவி: நல்லது அம்மா! கொடு, இப்படி உன் கையை!

(லட்சுமிதேவி செல்லாயினுடைய கையில் சத்தியம் செய்து தருகிறாள்.)

செல்: தேவி! நான் கொடுத்து வைத்தவள்.

நிகழ்ச்சி-2

(பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் செல்லாயி சமையல் கட்டில் இருந்தாள். அப்பொழுது வேலன் கடையிலிருந்து திரும்பி வந்தான். அவன் வந்ததும் வராததுமாக....)

வேலன்: செல்லாயி! நாளை முதல் நம் மகன் கடைக்கு வரவேண்டாம் என்று என்னைச் சொல்லி விட்டான்.

செல்: என்னவாம்! பதினைந்து வருடத்திற்கு முன், நாம் இருந்த

இருப்பை அவன் மறந்து விட்டான் போலிருக்கிறது. எல்லாம் தன் உழைப்பு என்கிறான்.

வேல: ஆமாம்! அன்று நமக்கு வயலில் புதையல் கிடைக்கவில்லையென்றால் இந்த மாடி வீடும் வைர வியாபாரமும் இவ்வளவு செல்வமும் இவனுக்கு ஏது? நிலையில்லாத இந்தச் செல்வத்தைக் கண்டு அவன் செருக்கடைந்திருக்கிறான். அதனால் தான் அப்பொழுதே நான் சொன்னேன், லட்சுமியை வேண்டாம் என்று! நீ கேட்டாயா?

செல்: இப்பொழுது என்ன வந்து விட்டது? லட்சுமி போகும்போது என்னிடம் சொல்லிவிட்டுப் போவதாகச் சத்தியம் செய்திருக்கிறாள்.

வேல: 'சத்தியம் தவறமாட்டாள்!' என்பதற்காக மகன் நச்சரிப்பைக் கண்டு, அவள் சும்மா இருந்து விடுவாளா?

செல்: இருக்கட்டும், அவனுக்கு நல்ல புத்தி சொல்லிப் பார்க்கிறேன்.

வேல: சொல்லிப் பார்!

நிகழ்ச்சி-3

[செல்லாயி தன் மாடி வீட்டின் முன் - பதினைந்து ஆண்டுகளுக்கு அப்புறம் ஒரு நாள் விடியற்காலை சாணம் தெளித்துப் பெருக்கிக் கோலமிடுகிறாள். அப்போது பதினைந்து ஆண்டுகளுக்கு முன் கேட்ட அதே ஒலி 'ஜல்! ஜல்! ஜல்!' என்னும் லட்சுமிதேவியின் வருகையைக் குறிக்கும் சதங்கை ஒலி கேட்கிறது.)

செல்: யார் லட்சுமி தேவியா! வாருங்கள், தாயே!

தேவி: நான் விடைபெறும் காலம் வந்துவிட்டது. சத்தியம் செய்தபடி சொல்லிவிட்டுப் போக வந்தேன்.

செல்: என்ன குற்றம் செய்தேன் தாயே, நான்!

தேவி: நீ ஒன்றும் செய்யவில்லை, உன் மகன் செய்யும் கொடுமை!

செல்: தாயே, அவன் அப்படி என்ன செய்தான்?

தேவி: நான் சொல்லித்தான் தெரிந்துகொள்ள வேண்டுமா, நீ! சரி, சொல்கிறேன். கேள்!

அளவோடு இருந்த போது அணைத்துக் கொண்டான். அளவுக்கு மிஞ்சி வளர்ந்த இப்பொழுது என்னை வெறுத்தான். அணியும் கட்டைச் செருப்பிற்குப் பிடிப்பாணியாக நிறுத்தினான். 'எல்லாம் தன் உழைப்பு!' என்கிறான். என்னை அலட்சியம் செய்கிறான்! அது மட்டுமா? நானும் தைரிய லட்சுமியும் அவனுடன் இருக்கிறோம் என்ற செருக்கால் வயது முதிர்ந்த பெரியோர்களை மரியாதை யின்றிப் பேசுகிறான். இழிவாக நடத்துகிறான். இனி எனக்கு இங்கே இடமில்லை. எனக்கு இடமில்லாத பொழுது தைரிய லட்சுமிக்கும் இங்கே வேலை யில்லை. நாங்கள் இருவருமே விடைபெற்றுக் கொள்கிறோம்!

செல்: (சிலைபோல் நின்றவாறே, வாயில் வார்த்தைகள் ஏதும் வராததால் விம்முகிறாள்) இக்! இக்! இம்! இம்!

தேவி: ஏன் அம்மா அழுகிறாய்?

செல்: எனக்காகப் பொறுத்தருளக் கூடாதா, தாயே?

தேவி: பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன்! பொறுமை கடந்து விட்டது! இனி நீ மனத்தைத் தேற்றிக்கொள்! செல்கிறேன்!

செல்: அவசரப் படாதீர்கள். தாயே! ஒரு நாழிகை நேரம் எனக்கு அவகாசம் கொடுங்கள்! வீட்டிற்குள் சென்று திரும்பி வந்து விடுகிறேன்.

தேவி: அப்படித் திரும்பி வரா விட்டால்?

செல், என்னிடம் சொல்லிவிட்டு நீங்கள் போகலாம்.

லக்ஷ்மி: சரி! நீ சென்றுவா, அம்மா!

நிகழ்ச்சி—4.

[செல்லாயி நைந்த உள்ளத்துடன் கிணற்றடிக்குச் செல்கிறாள். அந்தச் சமயம்....]

செல்: (மனத்திற்குள்): பெற்ற மனம் கேட்கவில்லை! பிள்ளை, பித்தன்போல் நடக்கிறான்! அதற்காக அவன் சீரழிந்து விடுவதை நான் காண்பதா? முடியாது! நான் கிணற்றில் விழுந்து இறந்து விடுகிறேன். லட்சுமி என் உத்தரவு கிடைக்காமல் இங்கேயே இருந்து விடட்டும்! என் செல்வன் சுகமாய் இருக்கட்டும்! ஐயோ! சில விநாடிகள்தாம் இருக்கின்றன. அதற்குள் இறந்து விடவேண்டுமே! குடும்ப நலனுக்காக உயிர்விடுவதை நான் மேலானதாக எண்ணுகிறேன்.

(செல்லாயி மகன் மாறன் தற்செயலாக அந்தப் பக்கம் வருகிறான்)

மாறன்: அம்மா! எங்கே அம்மா பிரமை பிடித்தவர்கள்போல் போகிறீர்கள்? உங்களுக்கு உண்மை தெரிந்துவிட்டதா?

செல்: என்ன மகனே, அது? உன் முகம் வாட்டமாக இருக்கிறதே, என்ன நடந்தது?

மாறன்: என்ன நடக்க வேண்டும்? நான் ஏமாந்து விட்டேன்! வைர நகைகள் என்று வாங்கிய வைரமாலை கண்ணாடிக்கற்கள் என்று இப்பொழுதுதான் தெரிய வந்தது! எவ்வளவு தேடியும் விற்றவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அதனால் ஐந்து லட்ச வராகன்கள் நஷ்டம்!

செல்: என்ன! நஷ்டமா? கஷ்டம்! இப்பொழுதுதான் தெரிகிறதா? ஐயோ! நான் என்ன செய்வேன்! லட்சுமி தேவியே இதற்குள்ளாக நீ எனக்களித்த ஒரு நாழிகை நேரம் தீர்ந்துவிட்டதா? சென்றுவிட்டயா!

மாறன்: என்ன, அம்மா! திடீரென்று! ஏதோ உளறுகிறீர்கள்?

செல்: உளறவில்லையடா, உளறவில்லை! லட்சுமி என் காதில் வந்து பேசுகிறாள்! நான் பேசுகிறேன்! எனக்கு அவள் வாக்களித்தபடி நின்று நிறைவேற்றிவிட்டு விடை பெற்றுச் சென்று விட்டாள். இனி, அவள் வரமாட்டாள்! வந்தாலும் நீ வாழ விடமாட்டாய்!

மாறன்: என்ன அம்மா சொல்கிறீர்கள்?

செல்லாயி: குழந்தாய்! இனியாவது நீ நாலுபேர்களுக்கு நல்லவனாக வாழத் தெரிந்துகொள்! அது போதும் எனக்கு.

சிந்தித்துச் சொல்லுங்கள்!

1. காவிரி நதியின் பெயரைக் கேள்விப்படாத தமிழர்களே இருக்க மாட்டார்கள் எனலாம். ஆனால் அந்தக் காவிரியின் நீளம் எத்தனை மைல்கள் என்று உங்களுக்குத் தெரியுமா?

2. வெங்காயம் உரிக்கும்போது நம் கண்ணில் நீர் வருகிறதே! ஏன்?

3. ஒரு தேங்காய் எவ்வளவு காலம் அழுகாமல் இருக்கும்?

4. பனி, பல சமயம் மழையாக மாறிவிடுகிறது. மழை திரும்பவும் பனியாக மாறுமா, மாறாதா?

5. நிலக்கரி இன்று உலகில் ஓர் இன்றியமையாத பொருளாகக் கருதப்படுகிறது. அதிகம் எதற்கு? அது இல்லாவிட்டால் ரெயில் எஞ்சின் முதலில் இயங்காது! அப்படிப்பட்ட அந்தப் பொருளைக் கண்டுபிடித்தவர் யார் என்று தெரியுமா?

6. ஒரு நாளில் இருபது பவுண்டு பால் கறக்க, பசுமாடு ஒன்று எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்? தெரியுமா உங்களுக்கு?

7. வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் யானையின் தந்தம் நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அது யானையின்மேல் வரிசைப் பல்லா, அல்லது கீழ் வரிசைப் பல்லா? இல்லாவிட்டால் அது பல்லாக இல்லாத ஒரு தனி உறுப்பா என்று சொல்ல முடியுமா?

8. தவளைக்குப் பல் உண்டா, இல்லையா?

9. பொதுவாகப் பதினைந்து வயதுக்குப் பிறகு மூளை பருப்பதில்லை என்பது உண்மையா?

10. கையால் தொட்டால் அப்படியே பொடிப் பொடியாய் உதிர்ந்து போகக்கூடிய அளவுக்கு மிக மெல்லிய தகடாக அடித்துவிடத் தக்க உலோகம் எது?



11. இதோ ஓர் அறையில் பன்னிரண்டு நாய்கள் இருக்கின்றன. இவை ஒன்றோடொன்று சண்டையிடும் அமளி தாளவில்லை. நாய்களை இடம் விட்டு நகர்த்த முடியாது. இருக்கிறபடியே நேர்க் கோட்டுச் சுவர்களால் இந்த அறையை நான்கு பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியிலும் மூன்று நாய்கள் இருக்கும்படி கோடுகளை இழுங்கள்; பார்க்கலாம்! விடை: அடுத்த பக்கம்

புதிர்களுக்கு - விடைகள்

விடுகவிகள்: 1. தேன்கூடு, 2. பசு, 3. தயிர் கடைதல், மிளகாய், 5. எலிகள், 6. ரெயில், 7. பலாப்பழம், 8. மனிதன்.

சித்திரக் கட்டம்: இடமிருந்து வலம் - 1. ஆலமரம், 3. காது, 5. கல், 6. ஆடு, 7. முதலை, 8. ஏணி, 9. குதிரை, 10. பழம், 11. செம்பு, 14. கரடி. 16. குரங்கு, 18. வில், 19. பல்லி, 21. பாம்பு, 23. ஓணான். **மேலிருந்து கீழ்** 1. ஆமை, 2. மத்தளம், 3. கால், 4. வீடு, 5. கத்தி, 6. ஆணி, 9. குடை, 10. பல், 11. செடி, 12. புறா, 13. சங்கு, 15. ரயில், 16. குயில், 17. ரதம், 19. பசு, 20. அணா, 21. பாய், 22. புலி.

போட்டோ க்விஸ்: 1. தம்புராப் பிருடை, 2. கோயில் மெழுகு வத்தி விளக்கு, 3. ஹரிக்கேன் விளக்குக் கண்ணாடி பதியும் பாகம், 4. ரெயில் கைகாட்டி ஏணி, 5. காசு மாலை, 6. கயிற்றுப் பை, 7. அன்னாசிப் பழம், 8. எலெக்டிரிக் பல்பு ஹோல்டர், 9. பிளாஸ்டிக் சோப்புப் பெட்டியின் பின் பாகம், 10. பனம் பழம் (நொங்கு), 11. டன்லப் மெத்தையின் அடிப் பாகம், 12. டைப் ரைட்டர் அடிப்பாகம்.

எங்கே கூடு கட்டும்? முதல் வரிசை - 1. மரங்கொத்தி - உலுத்த மரப் பொந்துகள். 2. மைனா 3. புறா - இரண்டும் கோபுரங்கள், மாடி வீட்டுச் சாளரங்கள். **இரண்டாம் வரிசை:** 1. கழுகு - உயரமான மரங்கள், 2. கிளி - கோபுரங்கள். 3. குயில் - கூடு கட்டத் தெரியாது. ஆனால் மற்றப் பறவைகளின் கூட்டில் முட்டையிட்டுச் செல்லும். **மூன்றாம் வரிசை** 1. நாரை-நீர்க் கோரைகள். 2.கோழி - வீடுகள், 3. வலியன் - பனைமரம். **நான்காம் வரிசை** 1. சிட்டுக் குருவி - வீட்டுத் தூலங்கள். 2. ஆந்தை -பாழடைந்த மண்டபம், வீடுகள், 3. வானம்பாடி-கல்சந்து, மலைப் பாறைகள்

மறைந்திருப்பது யார் யார்? 1. ஏசுநாதர், 2. கோதை, 3. புத்தர், 4. கண்ணன், 5. நாரதர், 6. சகுந்தலை, 7. கட்டபொம்மன், 8. பாரதியார், 9. ஸ்டாலின், 10. ஹிட்லர், 11. ராஜேந்திர பிரசாத், 12. பந்த், 13. தேபர், 14. காமராஜர், 15. சிவாஜி, 16. பணிக்கர், 17. சைனாக் காரர், 18. தேங்காய்.

பெயர் தெரியுமா? - 1. லாஜி பயர்ட் - டெலிவிஷன், 2. மார்க்கோனி - ரேடியோ, 3. அலெக்ஸாந்தர் பிளெமிங் - பெனிஸிலின், 4. கலீலியோ - கடிகாரப் பெண்டுலம், 5. ஹென்றி போர்டு - மோட்டார், 6. ரைட் சகோதரர்கள் (வில்பர் ரைட், ஆர்வில் ரைட்) - ஆகாய விமானம், 7. ராண்ட்ஜன் - எக்ஸ் - ரே.

புராணக் காட்சிகள்: 1. விசுவாமித்திரரும் மேனகையும், 2.அகல்யை சாப விமோசனம், 3. கோதை, 4. சகுந்தலையும் துஷ்யந்தனும், 5. கண்ணப்பர், 6. திரௌபதி துயில் உரிதல், 7. ஔவைக்கு முருகன் சுட்ட பழம் அளித்தல், 8. பகவான் கீதை உபதேசித்தல், 9. கிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்தல்.



சிந்தித்துச் சொல்லுங்கள்: 1. 475 மைல். 2. வெங்காயத்தில் ஒருவித எண்ணெய் இருப்பதால்தான்! வெங்காயத்தைத் தண்ணீருக்குள் வைத்துக்கொண்டு உரித்தால் இப்படிக் கண்ணீர் வடிக்க வேண்டாம். 3. மட்டை உரிக்காத நெற்றுத் தேங்காயை உலர்ந்த இடத்தில் வைத்திருந்தால் 20 முதல் 30 வருஷம் வரை வைத்திருந்தாலும் அழுகாது. 4. மாறாது. 5. சீனாக்காரர்கள். 6. ஏழு காலன் தண்ணீர். 7. மேல்வரிசைப் பல். 8. உண்டு. 9. உண்மைதான். 10. தங்கம்.

Edited Printed and Published By N. Ramaratnam,
At M. L. J. Press Private Ltd., Madras-4.
Associate Editor: R. Venkataraman.

கண்ணன் லீலைகள்!



முதலில் X குறியிட்ட பாகங்களை வர்ணம் பூசிக்கொள்ளுங்கள். பின்னர் புள்ளியிட்ட பாகங்களைச் சேர்த்து வர்ணம் பூசுங்கள். கண்ணனின் இரு லீலைகளைக் காணலாம்.

ரகமி

Regd. as a newspaper in Ceylon

Regd. No M. 5542.

"அம்மா, போயிட்டு வாரேன்..."

தென்னிந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் இரு கோடி மக்கள் பஸ் பிரயாணம் செய்கின்றனர். முக்கியமான ஒவ்வொரு கிராமத்துக்கும் திறமையான பஸ் போக்குவரத்து உண்டு.

பஸ் பிரயாண போக்குவரத்தில் ஒரு தரத்தை நிர்ணயிப்பது மட்டும் போதாது. இதனை 1920ஆம் ஆண்டு முதலே டிவிஎஸ் உணர்ந்திருக்கிறது. புது பஸ் கம்பெனிகள் பலவற்றை அமைப்பதற்கு ஆக்கம் அளித்த ஸ்தாபனம் டிவிஎஸ். புதுக் கம்பெனிகளுக்கு வேண்டிய பொருளாதார உதவி செய்தல், பஸ் பாடிகளைக் கட்டுதல், பஸ்களைச் சரிவரப் பராமரிப்பதற்கு வேண்டிய பயிற்சி அளித்தல். டயர்களை ரீடிரெட் செய்து புதுப்பித்தல், தேய்ந்து போன உருப்புக்களுக்கு புத்துயிரளித்தல் முதலிய பணிகளைச் செய்ய தென்னகத்தில் டிவிஎஸ் ஸ்தாபனம் தோன்றியது. தென்னிந்தியாவின் சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்க டிவிஎஸ் ஸ்தாபனங்களின் வளர்ச்சி ஓர் அளவு கோலாகும். மோட்டார்த் தொழிலில் நாள்தோறும் பெருகி வரும் தேவைகளை டிவிஎஸ் ஸ்தாபனங்கள் பூர்த்தி செய்கின்றன.

பஸ் பிரயாணத்தில் பயமில்லை; பத்திரமாக குறித்த காலத்தில் போய்ச் சேரலாம். இதனாலேயே "போயிட்டு வாரேன்" என்று சொல்லும் பொழுது மன உறுதி செயலாக உருவாகிறது.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட். மதருஸ் - பெங்களூர் - செகந்திராபாத்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
புதுக்கோட்டை - மதருஸ் - கோயமுத்தூர்

மதருஸ் ஆட்டோ ஸர்விஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ் - பெங்களூர்

சதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

மதருஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மதருஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் அக்ஸெஸரீஸ் பிரைவேட் லிமிடெட் மதருஸ்

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், மதருஸ

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை

JWT/TVS/U 927a